

கல்கி
மகரிஷி எழுதும் இருட்டு மலர்
இன்றைய இதழில் ஆரம்பம்.



பருத்தியிலே விளைந்திடும் கற்பனைகள் அற்புதமோ அதி அற்புதம்
டிஸைன்கள்
நேர்த்தியான மதிப்பு ....நறுவிசான பொலிவு ...
ல்லழகு ...
யற்கைச் சிறப்பிலே இணையற்றது பருத்தி
ஸெஞ்சுரி– 100% பருத்தித் துணிகள்
ஸெஞ்சுரி ஸ்பின். அண்டு. மான்யு. கம். லிமிடெட், பம்பாய்-400 025
CENTURY
ADROIT-CM-533 P-TAM

உங்கள் குடும்பத்தினரின் உடல்நலம் ஓங்கியிருக்க அவசியம் அளியுங்கள் மிகச் சிறந்ததையே

அவர்களுக்கு விவா கொடுங்கள்.



ASP/JIL-V-1A/73 TAM

விவா நூதன உணவு தொழில் நுட்பத்திறமையில் உருவானது. இதில் மற்ற ஆரோக்கிய உணவுப் பானங்களில் உள்ளதைப்போன்று தூய்மையான, முழுமை பெற்ற ஆடைப்பாலும் பார்லி மால்ட்டும் உள்ளன. ஆயினும் விவாவில் மட்டுமே கோதுமை மால்ட் அடங்கியுள்ளது.

கோதுமை மால்ட் எதற்கு?

ஏனெனில், அதில் வளமைமிக்க கார்போஹைட்ரேட், புரதங்கள், விடமின்கள் மற்றும் கனிம சத்துக்கள் எளிதில் சீரணிக்கும் வகையில் சேர்க்கப்பட்டுள்ளன.

கோதுமை மால்ட் கலந்திருப்பதால் விவா அதிக அளவு ஊட்டச்சத்து உள்ளதாய், பூரணமான இன்சுவையோடு, வளமிக்க பொன்னிறம் கொண்டு, உடனடியாகக் கரையும் தன்மையோடு விளங்குகிறது.

ஆகவே, உங்கள் அன்றாட உணவிலுள்ள பற்றாக்குறைகளை ஈடுசெய்ய சரியான, போதுமான ஊட்டச் சத்து அளிக்கவேண்டுமென்றால் அதற்கு விவா போல வேறு எதுவும் சிறந்ததல்ல.

மிகச் சிறந்ததையே தேர்ந்தெடுக்க இதோ அரியதொரு வாய்ப்பு.


விவாவையே தேர்ந்தெடுங்கள்.



இந்தியாவில் தயாரிப்போர்,
ஜகத்ஜித் இண்டஸ்ட்ரீஸ் லிட்.

விவா

உற்சாகமான ஆரோக்கிய வளர்ச்சிக்கு தினமும் விவா.


எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும்.
வி ஜி பி
Dunlopillo
டன்லப்பில்லோ
மெத்தை, தலையணை
மற்றும் குஷன்கள்
Godrej
கோத்ரெஜ்
டைப்ரைட்டர்
Record
murphy மர்பி
TIMESTAR
FAVRE-LEUBA GENEVE
கைக்கடிகாரங்கள்
கோத்ரெஜ்
Godrej
ஆல்வின்
ALLWYN
ரிப்ரிஜிரேட்டர்கள்
Mecom
மெகாம்
ரேடியோக்கள்
Sumeet
RALLI-MIX
WIECO
RICO
சுமீத்
வீகோ
ரிகோ
ராலிஸ்
எலக்ட்ரிக் மிக்ஸர்கள்
FOLDELUXE
மடக்கும் மேஜைகளும்
நாற்காலிகளும்
AHUJA
அஹுஜா
ஆம்ப்ளிபயர்,
ஸ்டீரியோ
எக்விப்மெண்ட்
Westclox
WEKUP
JaycO
JAE
RIVEX
MASTER
SHIMCO
CAMY
JOTHI
HOTTA
NAYAK
அலாரம் மற்றும்
சுவர் கடிகாரங்கள்
எச்.எம்.வி.
ரேடியோகிராம்
VIP
CHANDRA
Prestige
பிரஸ்டீஜ்
Rallifan
Vijay
USHA
Orient
GEC
Crompton
பெடஸ்டல் மற்றும்
எக்ஸாஸ்ட் விசிறிகள்
டெலிவிஷன்
GEC
Crompton
மோட்டார்களும் பம்ப்
செட்டுகளும்
PHILLIPS
ROBIN HOOD
Hercules
BSA
RALEIGH
Atlas
ஆண்களுக்கும்
பெண்களுக்கும்
தகுந்த உலகப் பிரசித்தி
பெற்ற சைக்கிள்கள்
USHA
MERRITT
NIPPON
இரும்பு கட்டில் மற்றும்
சோபாக்கள்
GEC
கெல்கோ
ஜி இ ஸி
ரேடியோக்களும்
டிரான்ஸிஸ்டர்களும்
Romo
GOVERNOR
ரோமோ
கவர்னர்
(காமர்ஷியல்)
வி.ஜி.பன்னீர்தாஸ் & கோ.
பிரைவேட் லிமிடெட்
வி.ஜி.பி சதுக்கம், சைதாப்பேட்டை, சென்னை-600015
சென்னை-600015 போன், 442333
27, ரங்கநாதன் தெரு, தி.நகர், சென்னை-600017
போன்: 440246
விக்டரி ஹவுஸ், 7, மவுண்ட்ரோடு, சென்னை-600002
போன்: 812121
27, ரத்தன் பஜார், சென்னை-600003 போன்: 33214
அரக்கோணம், காஞ்சீபுரம், வந்தவாசி, விழுப்புரம்,
திருவண்ணாமலை, வேலூர்.
VGP
தரமான பொருட்களின் இந்தியாவின் மிகப் பெரிய விற்பனையாளர்கள்

பல விஷயங்கள் குழந்தைகளுக்கு கற்பிக்கப்படவேண்டும்



சில விஷயங்களை அவர்கள் தாங்களாகவே கண்டுபிடித்துவிடுவார்கள்

மிட்டாய்களில் சிறந்தது எது என்பது. அதில் ஊற்ற குழந்தைகளின் இரத்தத்தில் ஊறிய உணர்வு அது. பம்பரங்கள், கோலிகள், கற்கண்டு இவைகள் பற்றி யார் கற்றுத் தருகிறார்கள்? ஆகவே குழந்தைகள் "நியூட்ரின் மிட்டாய்கள்" தின்னத் தின்ன திகட்டாதவை என்று சொன்னால் அதற்கு ஒரு முக்கிய காரணம் உண்டு என்பதை நீங்கள் நிச்சயமாக நம்பலாம். பல ரகங்கள் கொண்ட காபி டாபிகள், கோகோனட் பான் பான்கள், ஆரஞ்சு காண்டிகள், லாக்டோ பான் பான்கள்-பால், மால்ட், தேன் சர்க்கரை சத்து நிறைந்தவை. இவைகளிலிருந்து குழந்தைகள் தப்பமுடியாது.

நியூட்ரின்

தின்னத் தின்ன திகட்டாத மிட்டாய்

நியூட்ரின் கன்பெக்ஷனரி கம்பெனி பிரைவேட் லிமிடெட்,
பலமனேர் ரோடு, சித்தூர், (ஆ.பி.)

பிரமாதீச, கார்த்திகை, 17 - டிசம்பர், 2 '73



கல்கி

பொருளடக்கம்

கல்கி - சந்தா விவரம்	ஒரு வருடம்	ஆறு மாதம்
இந்தியா	ரு. 26-00	ரு. 13-00
இதர நாடுகள்	ரு. 55-00	ரு. 27-50
இலங்கை (இலங்கைநாணயம்)	ரு. 30-00	ரு. 15-00

"கல்கி"யில் வெளி வரும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே

கல்கி

தமிழ்த்திரு நாட்டினைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா -- பாரதியார்

மலர் 33 - இதழ் 18

தமிழ்நாடு தலைகுனிகிறது!

ஏதாவது ஒரு விதத்தில் கார்ப்பரேஷனுடன் தொடர்பு வைத்துக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்த நிலையிலுள்ள லட்சக் கணக்கான சென்னைவாசிகளுக்கு, ரிப்பன் கட்டிடத்தில் எதுவுமே முறைப்படி நடப்பதில்லை என்ற கசப்பு அனுபவம் பல நாட்களாகவே உண்டு.

ஒருமுறை டாக்டர் ஏ. லட்சுமணஸ்வாமி முதலியார், ''கார்ப்பரேஷனில் எல்லாமே ஒழுங்கு கெட்டிருக்கிறது'' என்று குற்றம் சாட்டினார். சமீபத்தில், கமிஷனர் ஒருவர் ராஜீயக் குறுக்கீடுகள் காரணமாக நிர்வாகத்தை ஒழுங்காக நடத்த இயலவில்லை என்று வருத்தத்துடன் கூறியதும் உண்டு.

மாநகராட்சியின் எல்லாத் துறைகளிலுமே லஞ்சமும் ஊழலும் மலிந்து கிடக்கின்றன என்பது நகரவாசிகளுக்கு நன்கு தெரிந்ததுதான். ஆனால் நிரூபிப்பது, சாட்சியம் காட்டுவது என்பதெல்லாம் மக்களால் எளிதில் சாதிக்க முடியாதவை என்பதோடு அவர்களுக்கு அப்பாற்பட்டவையுமாகும். எனவே பொதுமக்களால் ஒன்றும் செய்ய முடிவதில்லை.

மின்சார இலாகாவில் இப்போது பித்தலாட்டங்களும் களவாடல்களும், அமிழ்த்தி வைக்க முடியாத அளவுக்கு விம்மி வெடித்து அம்பலமாகித் தமிழ் நாட்டுக்கே தலைகுனிவை ஏற்படுத்தி விட்டன. கார்ப்பரேஷன் கௌன்சிலைக் கலைத்துவிடுவது தவிர வேறு வழி இல்லை என்ற நிர்ப்பந்த முடிவுக்குத் தமிழ்நாடு அரசு வருமளவுக்கு ஊழல் துர்நாற்றம் எடுத்துவிட்டது.

மின்சாரத் துறையில் மட்டுமே இப்போது மோசடிகள் பகிரங்கமாகியிருக்கின்றன. இன்னும் இதர இலாகாக்களிலும் நிர்வாகக் குறைபாடுகள் ஒழுங்கீனங்கள் இருக்கின்றன என்பது பொதுவாக மக்களிடையே நிலவும் கருத்து. புலனாய்வுத் துறையினரைக் கொண்டு, கார்ப்பரேஷனின் எல்லா இலாகாக்களிலுமே விசாரணைகள் மேற்கொள்ளுவது விரும்பத் தக்கது. அரசியல் நோக்கு, கட்சி நலன் ஆகியவை காரணமாக விசாரணைகள் நடுநிலைக் கண்டிப்புடன் நடத்தத் தடைகள் உண்டாக்கப்படுமோ என்ற சந்தேகம் தோன்றுவது சகஜமே. எனவே மத்திய அரசின் புலனாய்வுத் துறைக்குச் சென்னைக் கார்ப்பரேஷன் விவகாரத்தை விட்டுவிட வேண்டும் என்று பொறுப்பு வாய்ந்த அரசியல் தலைவர்கள் பலர் கோருவதில் நியாயம் இருக்கிறது. இதனால் மாநிலப் புலனாய்வுத் துறையின் திறமையைப் பற்றிக் குறை சொல்லுவதாக அர்த்தமில்லை.

சென்னைக் கார்ப்பரேஷனின் விவகாரம் திருப்திகரமான நிலையில் இல்லை என்பது நீண்ட காலமாகவே தெரிந்திருந்தும், இத்துறைக்குப் பொறுப்பு ஏற்றுள்ள மாநில அமைச்சர் திரு அன்பில் தர்மலிங்கம் இதுநாள் வரை நடவடிக்கை எதுவும் எடுக்காதிருந்தது பெருங் குறை. கார்ப்பொரேஷனின் விவகாரத்துக்கு இவருக்கு நேரடிப் பொறுப்பு இல்லாதிருக்கலாம். ஆனால் அமைச்சருக்குத் தமது இலாகாவில் காணப்படும் ஊழலுக்குத் தார்மீகப் பொறுப்பு உண்டு. அதை ஏற்பதே ஜனநாயகப் பண்பாகும். எங்கேயோ ஓரிடத்தில் ரயில் விபத்து ஏற்பட்டுப் பலர் மாண்டனர் என்பதற்காக ரயில்வே அமைச்சர் பதவியை ராஜிநாமா செய்த லால்பகதூர் சாஸ்திரி அவர்களைப் போல் அத்தனை தார்மீக, ஜனநாயகப் பண்புடன் நமது அமைச்சர்கள் நடந்து கொள்வார்கள் என்று எதிர்பார்ப்பதற்கில்லை.

கார்ப்பரேஷன் கவுன்சில் ஏற்கனவே காலாவதியாகி, இப்போது 'நீடிக்கப்பட்டுள்ள' நிலையில் இருக்கும்போது, அதைக் கலைத்து விடுவது என்ற முடிவு எடுக்கப்பட்டிருப்பதால், மறு தேர்தல் எப்போது நடக்குமோ என்ற சந்தேகம் எழுந்துள்ளது. அரசியல் நோக்கங்களையும் இம்முடிவுடன் பிணைத்து, உள் கருத்துக்களை ஆராய இடமுண்டு. அடுத்த தேர்தலை, அதிகமாகத் தள்ளிப் போடாமல், எவ்வளவு விரைவில் முடியுமோ, அவ்வளவு விரைவில் நடத்தி நம்பிக்கையுள்ள புதிய கௌன்சிலர்களை நகர மக்கள் தேர்ந்தெடுக்க வகை செய்ய வேண்டும்.

அன்னையின் மறைவு

மகா யோகினியாகிய அன்னையின் சக்தி உலகெங்கிலும் அவரிடம் ஈடுபாடு கொண்டிருந்த சாதகர்களிடையே உணரத் தக்க வகையில் பொலிந்து கொண்டிருந்தது. தேச எல்லையைமட்டுமின்றிக் கால எல்லையையும் தாண்டியது அச்சக்தி. எனவே இன்னும் காலன் அந்த அருட் சக்தியைக் கவர்ந்து சென்றிருக்க முடியாது என்று நம்பலாம்.

தொண்ணூற்று நாலு ஆண்டுகளுக்கு முன் பாரிஸில் பிறந்த ஒரு பிரெஞ்சுப் பெண்மணி அவர். மீரா அல்ஃபான்ஸ் என்பது அவரது இயற் பெயர். குழந்தைப் பருவத்திலேயே அவ்வப்பொழுது தமக்குள்ளே தாமாக மூழ்கிக் கொண்டு மௌனியாகி விடுவார். பன்னிரண்டாம் பிராயத்திலிருந்தே அவருக்குத் திவ்விய காட்சிகள் தோன்றலாயின. பல மகா புருஷர்களின் திருமுகங்களைக் கண்டார். அவற்றுக்கு நடுநாயகமாக சௌந்தரியமும், காருண்யமும், சக்தியும், ஞானமும் வடித்து வார்த்த ஒரே திவ்விய உருவம் தெரியும். அதுவே "கிருஷ்ணன்" என்று கண்டுகொண்டாள் மீரா என்ற பொருத்தமான பெயரைக் கொண்ட இம்மங்கை. ஆனால் பழைய மீராவைப் போலன்றி இவளுக்கு இந்தக் கிருஷ்ணனிடம் ஞானமயமான ஆன்மநேயமே உண்டாயிற்று.

மீரா அல்ஜீரியாவுக்குச் சென்று தியோன் என்பவரிடம் பௌதிகத்துக்கு அப்பாற்பட்ட, இந்திரிய அதீதமான சக்திகளைப் பெறுவதில் அப்பியாசம் பயின்றார். எளிதாகவே மானுட எல்லைக்கு அப்பாற்பட்ட ஆற்றல்களைப் பெற்றுவிட்டார். உலகை நோக்கித் தெய்வ சக்தி பாய்வதற்கு ஒரு வடிகாலாகத் தம்மை ஆக்கிக் கொண்டு விட்டார். தம்மையொத்த சகாக்களோடு சேர்ந்து, உலகில் அறியாமையின் இடத்தில் அறிவையும், கட்டுப்பாட்டின் இடத்தில் சுதந்திரத்தையும், துவேஷத்தின் இடத்தில் அன்பையும் நிறுவுவதற்கு உறுதி பூண்டார். தெய்வ சக்தியைக் கிரகித்துப் பாய்ச்சுவதன் மூலமே இப்பணிகளை ஆற்ற எண்ணினார்.




மீராவின் கணவர் பால் ரிசார்டும் இந்த நோக்கங்களுக்கு இசைந்த மனப்பான்மை பெற்றிருந்தார். அவர் இந்தியாவுக்கு வந்த போது அரவிந்த முனிவரைக் கண்டு, அவரையே அன்று உலகிலிருந்த தெய்வீக புருஷர்களில் தலைசிறந்தவராக உணர்ந்தார். கணவர் பெற்ற அநுபவத்துக்காக மீராவும் பிறகு புதுவைக்கு வந்தாள்—1914ம் ஆண்டில் இது நடந்தது. அரவிந்தரைக் கண்டாள். அவ்வளவுதான்! தான் நீண்ட நெடுங்காலமாகக் கண்ட கிருஷ்ணன் இவரே என உறுதி கொண்டாள். தனது உயிருக்கும் ஆன்மாவுக்கும் உகந்த ஜன்மபூமி இந்தியாவே என்றும் உணர்ந்தாள். தன்னை அரவிந்தரின் பணிக்கே பூரணமாகத் தந்துகொண்டு விட்டாள். இருவருமாக "ஆர்யா" என்ற ஆங்கில சஞ்சிகையை ஆறாண்டுகள் நடத்தினர். 1926 நவம்பர் இறுதியில் ஓர் எதிர்பாராத நிகழ்ச்சி நடந்தது. மனம் கடந்த மகா சக்தி இப்பூவுலகில் இறங்கி விட்டதாக அரவிந்தருக்கு ஓர் அடர்ந்த உணர்வு உண்டாயிற்று. உடனே தாம் வெளியுலகத் தொடர்பை வெட்டிவிட்டு ஏகாந்தத்துக்குச் சென்று விட்டார்.

"அன்னையின் உணர்வும் என்னுடைய உணர்வும் ஒன்றேயாகும்; அன்னையின் புறம் திரும்பிய ஒவ்வொருவரும் நான் விளக்கிய யோகத்தைச் செய்வதாகவே ஆகும்" என்று அரவிந்தர் கூறியிருந்தார். அவரது காரியம் முழுதும் இப்போது மீராவுடையதாகி விட்டது. அவரது ஆசிரமத்தை நடத்துவது இவளது பொறுப்பாயிற்று. மீரா அல்ஃபான்ஸ் "அன்னை"யாகி விட்டார்!

அன்றிலிருந்து மானுடரைத் தேவரின் மேலெனச் செய்யத் தம்மால் இயன்றதெல்லாம் செய்திருக்கிறார் அன்னை. இவற்றில் கடைசித் திட்டமே, சர்வ தேச — சர்வ சமய மக்களும் ஒன்று கூடிச் சாதனை புரிவதற்காக உருவாக்கப்படும் "ஆரோவில்" நகரம்.

அன்னை போன்ற மகாத்மாக்களின் பணி சரீரத்தைப் பொறுத்ததல்ல. மானுடச் சட்டை இல்லாமலே அது சூட்சுமமாகச் செயல் புரியும். "ஆண்டவா! மனிதரைத் தெய்வீகமாக மாற்றும் உன் காரியத்தைச் செய்யவே நாங்கள் இந்த மண்ணில் வந்திருக்கிறோம்" என்றார் அன்னை. கடவுளின் அந்தக் காரியம் ஈடேறுகிற வரையில், அவனது சங்கற்பத்துக்கு ஒரு கருவியாக அன்னையும் இருந்து கொண்டே இருப்பார் என்பதில் ஐயமில்லை.


ருத்திராட்சப் பூனை
நீண்டிருக்கும் நகங்களும், வாயில் ஒட்டியிருக்கும் தயிரும் வேறு கதை பேசுதே!
எங்க ஆட்சியிலே ஊழலா? ருசு எங்கே? சர்வாதிகாரமா யார் சொன்னது?
திமுக
மக்கள்


எல்லாரும் ஒற்றுமையா பிடிச்சுத் தள்ளினால்தான் பஸ் மேலே நகரும்!
மக்கள்
புதை சேற்றில் இறக்க மட்டும் எங்களில் பத்துக்கு நாலு பேர் ஒப்புதல் போதுமா இருந்-தது உங்களுக்கு!
பாரதம்
பொருளாதாரச் சீரழிவு

தமிழ் நாட்டிலே...

தீரன்

விசாரணைக் குழுவின் முடிவுகள்

திருச்சிராப்பள்ளி கிளைவ் ஹாஸ்டல், பாளையங்கோட்டை இரசாயனப் பேராசிரியர் தாக்கப்பட்டது சம்பந்தமான விசாரணைக் குழு முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. கிளைவ் விடுதி மாணவர்கள் மேல் காவலர்கள் நடத்திய தாக்குதல் மிருகத்தனமானது என்றும், பாளையங்கோட்டை இரசாயனப் பேராசிரியரையும் அவரது சகோதரர்களையும் அநியாயமாகத் தாக்கிய போலீஸார் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் கூறப்பட்டிருப்பது கவனிக்கத் தக்கது.

திருச்சி சம்பவம் :

1972ம் ஆண்டு டிசம்பர் மாதம் நாலாந் தேதி திருச்சி கிளைவ் ஹாஸ்டலுக்குள் காவல் துறையினர் நுழைந்து மாணவர்களைத் தாக்கியது அதிகப்படியான வன்முறை என்றும், மிருகத்தனமாகவும் வரன்முறையற்றும் மாணவர்கள் தடிகளால் தாக்கப்பட்டிருக்கின்றனர் என்றும் கிளைவ் விடுதிக்குள் காவலர்கள் நுழைந்ததற்கு நியாயம் எதுவும் இல்லை என்றும், அரசு கூறியதுபோல் இலேசான பிரம்படி எதுவும் நடக்கவில்லை, மாணவர்களைக் காவலர்கள் அதிகப்படியாகவே தாக்கியுள்ளனர் என்றும் விசாரணைக் குழுவின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. மேற்படி சம்பவம் நடந்த காலத்தின்போது பஸ் ஊழியர்கள் மெயின்கார்டு கேட்டிலிருந்து காமராஜ் வளைவு வரை பேருந்துகளைத் தாறுமாறாக நிறுத்தி வைத்ததற்கும், அப்பகுதியில் போக்குவரத்து நடைபெற முடியாமல் செய்ததற்கும், ஊழியர்கள் கூட்டமாகக் கூடி நின்று கொண்டிருந்ததற்கும் சரியான காரணமே இல்லை. இது தற்செயலாகவோ எதேச்சையாகவோ நடந்த நிகழ்ச்சி இல்லை. முன்பாகவே திட்டமிடப்பட்டே இது நடந்திருக்க வேண்டும். 4-12-72 அன்று மாலை செயின்ட் ஜோசப் கல்லூரிக்கு முன் நடந்த மோதலுக்குக் கல்லூரியையும், உயர்நிலைப் பள்ளியையும் சேர்ந்த மாணவர்கள் காரணமில்லை. பஸ் ஊழியர்களே காரணம். மேலே குறிப்பிட்ட மோதலைத் தவிர்க்கும் கடமையில் அதிகாரிகள் தவறி விட்டனர்.

பாளையங்கோட்டை சம்பவம் :

1972ம் ஆண்டு நவம்பர் 19ந் தேதி பாளையங்கோட்டையில் பேராசிரியர் ஏ. சீனிவாசனையும், அவரது சகோதரர்கள் ஆராவமுதம், ரங்காச்சாரி ஆகியவர்களையும் பாளையங்கோட்டையைச் சேர்ந்த மேடை போலீஸ் நிலையத்தில் - தெருக்களில் - பொது இடங்களில் அநியாயமாகவும், கொடூரமாகவும், ஈவு இரக்கமின்றியும், அட்டகாசமாகவும் தாக்கியுள்ளனர். இன்ஸ்பெக்டரின் பிள்ளைகள் கூறியதுபோல் அல்லாமல் பேராசிரியரும், அவரது சகோதரர்களும் கூறியபடிதான் சம்பவங்கள் நடந்திருக்கின்றன.

பேராசிரியரைத் தாக்குவதற்குத் தூண்டியவர்களான மோகன்குமார், வசந்தகுமார் ஆகியோரின் தந்தையான இன்ஸ்பெக்டர் ராஜசேகரன், காவல் நிலையத்தில் பேராசிரியர் சீனிவாசனையும் அவரது இரு சகோதரர்களையும் முறைப்படி விசாரித்து உண்மை அறிய முயலாததோடு அவர்களைக் கொடுமைப்படுத்தி, இழிவாகப் பழித்துப் பேசியுள்ளார். அவர்கள்மீது இன்ஸ்பெக்டர் கொண்டிருந்த மனப்பான்மை நியாயமற்றதும் கண்டிக்கத் தக்கதும் ஆகும். இன்ஸ்பெக்டரின் பிள்ளைகள் இருவரும், யூனிபாரம் அணிந்த போலீஸார் இருவரும், சாதாரண உடையில் இருந்த மற்றப் போலீஸார்களும் நடந்துகொண்ட விதம் மிகவும் கண்டிக்கத் தக்கது. போலீஸார் பொதுமக்களிடம் மரியாதையாகவும், நியாயமாகவும் பழக வேண்டும். வழக்கறிஞர்கள், ஆசிரியர்கள், மற்றும் தொழில்களில் ஈடுபட்டுள்ளோருடன் பழகும் போது போலீஸார் அவர்களை மதித்து மரியாதை அளித்து நடக்க வேண்டும்.

நீதி நிலைக்க வேண்டுமானால் பாளையங்கோட்டை புனித சேவியர் கல்லூரிப் பேராசிரியரைத் தாக்கிய போலீஸார்மீது அதிகாரிகள் பொருத்தமான நடவடிக்கை எடுத்துக் கொள்ளத்தான் வேண்டும்.'' - இந்தக்

ராஜாஜி சிந்தனை

நான் இளைஞனாக இருந்தபோது பள்ளிக்கூட பாட புத்தகங்கள் மட்டுமின்றி வேறு பல புத்தகங்களையும் படிப்பது உண்டு. அப்போது நான் பன்யன் எழுதிய 'பில்கிரிம்ஸ் புரோக்ரஸ்', பைபிளின் பழைய, புதிய ஏற்பாடுகளில் உள்ள பல பகுதிகள் ஆகியவற்றைப் படித்தேன். பின்னர் சாக்ரடீஸ், மார்க்கஸ் அரேலியஸ், துறவி லாரன்ஸ் போன்றவர்களுடைய கருத்துக்களைப் படித்துத் தெரிந்து கொண்டேன். என்னை யாரும் தூண்டி விடவில்லை. இவற்றைப் படித்ததனால் ஏற்பட்ட பரவசமும் பக்தியும் என்னை உபநிஷத்துகள், கீதை, மகாபாரதம் ஆகியவற்றைப் படிக்கச் செய்தன. ஆத்மீகக் கோட்பாடுகள் அனைத்தும் ஒன்றுதான். எங்கு யார் அதனைத் தேடி அறிய முயன்றாலும் கடவுள் அவர்களை ஆசீர்வதிக்கிறார். இன்று நான் பக்தி செலுத்தும் இந்து வேதாந்தியாக இருக்கிறேன் என்று சொன்னால் அதற்கு மற்ற நாட்டு மக்களுடைய புனிதமான நூல்களைப் படித்ததும் பெருமளவு காரணமாகும்.

மட்ட ரக விளக்குகள்: குறைந்த ஆயுள்

தொல்லையற்ற நல்லொளி தரும், மதிப்பின் சிகரமான விளக்குகள்: ஜிஇஸி ஆஸ்ரம்

* அவை நீடித்த ஆயுள் வலிமையோடு தொல்லையற்ற உழைப்பைத் தருபவை — ஏறுமாறான வேல்டேஜ் நிலைகளிலும் இயங்குதிறம் மாறாதவை.
* நீண்ட நெடுங்காலம் 'சிகரமான' ஒளி சிந்துபவை.

GEC Osram

ஜிஇஸி ஆஸ்ரம் டியூப்லைட்டுகள், பல்புகள்.



உகந்த விலையிலே தகுந்த ஒளி தருபவை



தீர்ப்பில் கூறப்பட்டுள்ள குறைகள் அனைத்தும் போலீஸாரையும், அதிகாரிகளையும் மட்டும்தான் சாரும் என்பதில்லை. இப்போது நடக்கும் ஆட்சிக்கே இந்தக் குறைகள் அனைத்தும் பொருந்தும் என்றே சொல்ல வேண்டும். 'இந்த இரு தீர்ப்புக்களுக்காகவுமே அரசு இராஜிநாமா செய்தாக வேண்டும்' என்று மாணவ சமூகமும் சில கட்சிகளும் கோருகின்றன. அதைச் செய்ய முடியாவிட்டாலும் தவறுகளை உணர்ந்து இனியாவது திருத்திக் கொள்ளவும், திருத்திக் கொள்ளவும் வாய்ப்பு உண்டு என்று நாம் நம்புகிறோம்.

மனத்தைப் புண்படுத்தாதீர்

மதுரையில் ஒரு பொதுக்கூட்டத்தில் பேசும்போது திராவிடர் கழகத் தலைவர் திரு ஈ. வெ. ரா. முக்குலத்தோர் வகுப்பைச் சேர்ந்தவர்களின் மனம் பெரிதும் புண்படும் படியாகப் பேசியிருக்கிறார். அவர் பேசிய பேச்சில் முக்குலத்தோர் வகுப்பினரின் பிறப்பு பற்றித் தவறானதும், நியாயமற்றதுமான ஒரு கருத்துக் கூறப்பட்டதைத் தொடர்ந்து ஆத்திரம் அடைந்த கூட்டத்தினர் கல்லெறியில் இறங்க நேர்ந்து கூட்டம் பாதியில் அலங்கோலமாக முடிந்திருக்கிறது. இந்த முதிய வயதிலும் வகுப்புவாத உணர்வைக் கிளரச் செய்யும் பேச்சுக்களைப் போலீஸ் பாதுகாப்புடன் பேசுவதிலும், ஒரு சாராரின் மனத்தைப் புண்படுத்தக் கூடிய பேச்சுக்களை மேடையில் முழங்குவதிலும் திரு ஈ. வெ. ரா. உற்சாகம் காட்டி வருகிறார். தனிப்பட்டவர்கள் உரையாடலில் கூட அநாகரிகம் என்று கருதப்படுவனவற்றை மேடையில் பச்சையாகப் பேசுவதும், விளக்குவதுமே சீர்திருத்தமோ, புரட்சியோ ஆகிவிடாது. அநாகரிகத்துக்காவது ஓர் உச்சவரம்பு வேண்டும்.

ரேஷன் வேண்டாம்

மத்திய அரசு வேண்டும்போது அமுலாக்குவதற்கு ஏற்ற முறையில் பெட்ரோல்—மண்ணெண்ணெய் ரேஷனுக்கான பூர்வாங்க ஏற்பாடுகளை மாநில அரசு செய்யத் தொடங்கியிருப்பதாகக் கூறுகிறது. உபயோகத்தைக் குறைப்பதற்கு ரேஷன் முறை சரியா, விலை உயர்வு சரியா என்று யோசித்தே விலை உயர்வைக் கொண்டு வந்ததாக முதலில் கூறப்பட்டது. இப்போதோ விலையுயர்வு, ரேஷன் ஆகிய இரு வகைச் சிரமங்களையுமே மக்கள் தலையில் சுமத்தப் போவதற்கான அறிகுறிகள் தெரிகின்றன. பெட்ரோலுக்கு ரேஷன் வந்தாலும் பாதகமில்லை; தொண்ணூற்றொன்பது சதவிகித மக்களின் உபயோகத்துக்குரிய மண்ணெண்ணெய்க்குப் பங்கீட்டு முறை வருவதன் மூலம் பொது மக்களுக்குப் பலவிதமான சிரமங்கள் நேரிடும். அரிசிக் கடை, சர்க்கரைக் கடை, மண்ணெண்ணெய்க் கடை என்று ஒவ்வொன்றாகத் தேடித் தேடி 'க்யூ'வில் நிற்கிற துன்பத்தைப் பொதுமக்களுக்குத் தரவேண்டியது அவசியம் தானா? தீர யோசித்து மண்ணெண்ணெய்க்குப் பங்கீட்டு முறை கொண்டு வருவதைத் தவிர்ப்பது நன்றாயிருக்கும்.


எஸ்ட்ரெலா சக்தி
இந்த சக்தி தரும் ஒலி உங்கள் காதுகளில் ரீங்காரம் செய்கிறது.
ESTRELA
132
இந்த சக்தி தரும் ஒளியை நீங்கள் கண்ணெதிரே காணலாம்
உங்கள் டிரான்ஸிஸ்டர் மற்றும் டார்ச்சில் எஸ்ட்ரெலா சக்தி காட்டும் அதிசயம் பாரீர்!
எஸ்ட்ரெலா
CMEB-2-203

புதிது—ஃபாஸ்ஃபோமின் தயாரிப்பாளர்கள் அளிக்கும்

ஃபாஸ்ஃபோமின் அயன்

...ஏனெனில், பெண்களுக்கு அயன் அதிகம் தேவை

பெண்களுக்கு அயன் அதிகம் தேவை. ஏனெனில் மாதந்தோறும் அவர்களுக்கு அயன் இழப்பு ஏற்படுகிறது. உயிர்ச்சத்தான அயன் இட்டு நிரப்பப்பட வேண்டும்.

பெண் கருவுற்றிருக்கும் போதும், தன் குழந்தைக்குப் பாலூட்டும் காலத்திலும் அவளுக்கு அதிக அயன் சத்து தேவைப்படுகிறது. ஏனெனில் அக்காலங்களில் தன் குழந்தைக்கும் சேர்த்துப் போதுமான அயனைப் பெற வேண்டியிருக்கிறது.


இழந்த அயன் சத்தை இட்டு நிரப்பவும், உடலில் அயன் சத்தைச் சமநிலையில் பெற்றிருக்கவும் ஃபாஸ்ஃபோமின் அயன் அருந்துங்கள். ஃபாஸ்ஃபோமின் அயன் ஒவ்வொரு பெண்ணிற்கும் தேவையான டானிக்.

ஃபாஸ்ஃபோமின் அயன் சத்து நிறைந்த சிவப்பு ரத்த செல்களை உருவாக்க உதவுகிறது—உங்களை இளமையோடு இருக்கச் செய்கிறது.

ஃபாஸ்ஃபோமின் அயன் வைட்டமின்களையும் தாதுப் பொருட்களையும் கூட உங்களுக்குத் தருகிறது—உங்களைச் சுறுசுறுப்புடனும் உற்சாகத்துடனும் வைத்திருக்கிறது.

இன்று முதல் ஃபாஸ்ஃபோமின் அயனை அருந்துங்கள். ஒவ்வொரு நாளும் அருந்துங்கள்.

எல்லா கெமிஸ்டுகளிடமும் 240 மி.லி., 480 மி.லி. ஆகிய 2 சைஸ்களில் கிடைக்கிறது.





புதிது! ஃபாஸ்ஃபோமின் அயன்— பெண்களுக்கென்று விசேஷ முறையில் உருவாக்கப்பட்டுள்ள முதல் டானிக்

SQUIBB SARABHAI CHEMICALS

ஃபாஸ்ஃபோமின் [illegible] ப்ரைவேட் லிட். அவர்களின் ரெஜிஸ்டர்டு ட்ரேட் மார்க்காகும்.

® ஈ.ஆர். ஸ்க்விப் அண்ட் ஸன்ஸ் இன்கார்ப்பரேட்டட் அவர்களின் ரெஜிஸ்டர்டு ட்ரேட் மார்க்கைக் குறிப்பதாகும். இதை [illegible] உபயோகிக்க உரிமை பெற்றவர்கள்.

Shilpi-HPMA 7A/73 Tam

காமாக்ஷியின் கருமை 2

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசாரிய ஸ்வாமிகள்

வேலை எல்லாம் செய்கிறோம். பிறகு அலுத்துப்போய்த் தூங்குகிறோம். தூக்கம் நமனின் செயல். அங்கே ஒரே இருட்டு—கறுப்பு—தான் இருக்கிறது. ஆனாலும் இந்தத் தூக்கத்தில்தான் மநுஷ்யனுக்குக் கொஞ்சமேனும் சாந்தி இருக்கிறது. நாளெல்லாம் அலைந்து திரிந்து கஷ்டப்படுகிற ஜீவராசிகளுக்கு ஆறுதலாகப் பராசக்தி அன்றன்றும் தூக்கத்தை வைத்துக் கொஞ்சம் அமைதி தருகிறாள். எனவே நமனிடமே ரொம்பவும் அநுக்கிரகம் இருப்பதாகத் தெரிகிறது.

சம்ஹாரம் என்பது பெரிய தூக்கம். தூக்கத்தில் எப்படித் துக்கக் கலப்பே இல்லாத அமைதி நிலையில் இருக்கிறோமோ, அப்படியே சம்ஹரிக்கப்பட்ட ஜீவன் மறுபடியும் ஜன்மா எடுக்கிற வரையில் நானாவித கர்ம அநுபவங்களின் சிக்கலிலிருந்து தப்பி அமைதியில் அமிழ்ந்திருக்கிறது. நமக்குக் கர்மக்கட்டிலிருந்து தாற்காலிகமாக விடுதலை தந்து விச்ராந்தி தரவே சம்ஹாரத் தொழிலைப் புரிகிறார் சிவபெருமான். 'நான் கர்மா செய்கிறேன்' என்ற அகங்காரத்தை இழந்துவிட்ட ஞானிகளே கர்மச் சுழலிலிருந்து நிரந்தரமாகத் தப்பமுடியும். ஆனால் பரமபாவியும்கூடத் தாற்காலிகமாகவேனும் இந்தக் கர்மாநுபவத் தொந்தரவிலிருந்து விடுபட்டு விச்ராந்தி பெறுவதற்காகப் பராசக்தி மகா கருணையுடன் சம்ஹாரத்தை அமைத்திருக்கிறாள். விஷ்ணுவின் பரம பக்தரான ஆழ்வார் 'முனியே, நான்முகனே, முக்கண்ணப்பா' என்று மும்மூர்த்திகளையும் அழைக்கும்போது, சம்ஹார மூர்த்தியான ருத்திரனைத்தான் 'அப்பா' போட்டு அருமையுடன் கூப்பிடுகிறார். பரம தயாளுவான ஒரு தகப்பனார் தப்புச் செய்கிற குழந்தையையும், 'அடக் குழந்தே! ரொம்ப அலைந்து திரிந்து களைத்து விட்டாயப்பா, கொஞ்சம் ஓய்வு எடுத்துக் கொள்' என்று சொல்கிற மாதிரி, பரமேச்வரன் சம்ஹார காலத்தில் நமக்கெல்லாம் ஓய்வு தந்து ஆறுதல் அருளுகிறான். இதனாலேயே, ''முக்கண்ணப்பா'' என்று வாய்விட்டுக் கூப்பிட்டுக் காட்டுகிறார் ஆழ்வார். ருத்ரனின் சக்தியான பார்வதியின் நிறம்தான் கறுப்பு.

லோகத்தை விட்டாலேதான் சஞ்சலங்களிலிருந்து விடுபட்டு மோக்ஷம் என்கிற நிரந்தர சாந்தியைப் பெறமுடியும். சாந்தியோடு இருக்கிறோம் என்று உணர்ந்து அமைதியில் இருப்பதே சமாதி நிலை. என்றும் கலையாத சாச்வத நிலை அது. இதுவே பராசக்தியின் 'அநுக்கிரகம்' என்கிற தொழிலால் அருளப்படும் நிலை. இதற்கடுத்த நிலை சாந்தியோடு இருக்கிறோம் என்ற பிரக்ஞையில்லாமலே அப்படியிருக்கிற தூக்க நிலை, சம்ஹார நிலை. எனவே அநுக்கிரகத்துக்கு அடுத்தபடியாக ஜீவராசிகளுக்கு மிகவும் இதமான நிலை சம்ஹாரம்தான்.

பொது வழக்கிலும் நம்மை ஏன் பிரம்மா சிருஷ்டித்தார் என்ற வருத்தத்தாலோ என்னவோ பிரம்மாவை விசேஷமாக வழிபடுவதே இல்லை. மகாவிஷ்ணுவுக்கு நிறைய வழிபாடு இருந்தாலும் ஜகத் பரிபாலகரான அவரை மநுஷ்ய லோகத்தோடு ரொம்பவும் சம்பந்தப்படுத்தியிருக்கிறது. ஸ்ரீ வைஷ்ணவர்கள் ஆசாமிகளை, ''ஸ்வாமி'' ''ஸ்வாமி'' என்று பரஸ்பரம் கூப்பிட்டுக் கொண்டாலும், தங்கள் ஸ்வாமியைப் பெரும் ஆள் (பெருமாள்) என்றே சொல்கிறார்கள். வேதத்தைப் பார்த்தாலும் விஷ்ணுபரமான மந்திரங்களுக்குப் புருஷ ஸூக்தம் என்றே பெயர் இருக்கிறது. 'புருஷ' என்றால் முப்புரங்களான ஸ்தூல — ஸூக்ஷ்ம — காரண காரிய சரீரங்களுக்கு உள்ளே இருக்கிற ஆத்மா என்பது தத்வார்த்தமானாலும், பொதுவில் 'புருஷ' என்றால் மநுஷ்யன் என்றே பொருள் கொள்கிறோம். பிரம்ம சக்தியிடமிருந்து இந்தலோகமெல்லாம் எப்படி வந்தது என்பதைத்தான் புருஷ ஸூக்தம் சொல்கிறது. லோகத்தோடு மநுஷ்யரோடு இப்படி விஷ்ணுவுக்கு நெருக்கமான தொடர்பு கூறப்படுகிறது. சம்ஹார மூர்த்தியான சிவனே லோகத்தை விட்டபின் இருக்கிற வைராக்யத்துக்கு முக்கியமாகச் சொல்லப்படுகிறார். விஷ்ணு ஆலயத்தைப் பெருமாள் கோயில் என்றும், சிவாலயத்தை ஈச்வரன் கோயில் என்றும் சொல்கிற வழக்கம் இருக்கிறது. விஷ்ணு தாழ்த்தி—சிவன் உயர்த்தி என்பதற்காக இதை நான் சொல்லவில்லை. அப்படிச் சொன்னால் அது அடியோடு தப்பு. இரண்டும் முழுக்க முழுக்க ஒரே வஸ்துதான். ஆனால் அவரவர் செய்கிற கிருத்யத்தைப் பொறுத்து லோக ரீதியில் அவர்கள் எப்படி நினைக்கப்படுகிறார்கள் என்று காட்டுவதற்காகச் சொன்னேன்.

சிவப்புக் காமாக்ஷியைக் கறுப்பானவள் என்று மூகர் ஏன் சொன்னார் என்று யோசிக்கும் போது இத்தனை அபிப்பிராயமும் வந்தது. சாச்வத சாந்தி என்கிற மோக்ஷ நிலைக்குத் தாற்காலிக சாந்த நிலையான சம்ஹாரமே மிகவும் கிட்டத்தில் இருக்கிறது. அதனால்தான் சம்ஹார சக்தியான பார்வதியின் கறுப்பு வர்ணத்தையே மோக்ஷம் அநுக்கிரகிக்கிற காமேச்வரியின் வர்ணமாகவும் மூகர் கூறியிருக்கிறார் என்று சொல்ல வந்தேன்.

பராசக்தியின் சத்துவ குணம் மகாவிஷ்ணுவாக உலகைப் பரிபாலிக்கிறது; அவளுடைய ரஜோகுணம் பிரம்மாவாக உலகைப் படைக்கிறது; அவளுடைய தமோகுணம் ருத்திரனாக லோகத்தை சம்ஹரிக்கிறது.

(அடுத்த இதழில்: **காமாக்ஷியின் கருணை**)


பால் குடிக்க மறுக்கும் பிள்ளைக்கு
பல்சுவையுள்ள கஸ்டர்டு தாருங்கள்.
அது அள்ளிப் பருகுவதைப் பாருங்கள்!
உங்கள் பிள்ளை பால் குடிக்க மறுக்கிறதா? கவலைப்படாதீர்கள். அதற்கு இன்சுவையுள்ள ஊட்டமிக்க கஸ்டர்டு தாருங்கள். அது மகிழ்வுடன் சாப்பிடும். அதைத் தயாரிக்கும் முறை மிகவும் எளிது. 4 தேக்கரண்டியளவு பிரவுன் & போல்ஸன் கஸ்டர்டு பவுடர், 3 தேக்கரண்டியளவு சர்க்கரை, சிறிதளவு குளிர்ந்த பால். மூன்றையும் கலந்து விழுதுபோல ஆக்குங்கள். பிறகு ஒரு கோப்பை பாலை சூடாக்கி, அதில் இந்த விழுதைக் கரையுங்கள். கொதிக்கும் வரை கிளறுங்கள். பின்னர் நெய்தடவிய தட்டில் ஊற்றுங்கள். அது குளிர்ந்து படியட்டும். நாள்தோறும் உங்கள் பிள்ளைக்குப் பால் கொடுக்கும் சுவையான வழி இது!
பழ சாலடைக் கிண்ணத்தில் எடுத்து, கஸ்டர்டால் அலங்கரியுங்கள். இப்போது கேக்கின் மீது கஸ்டர்டு தடவி, சுவையைக் கூட்டுங்கள். ஜெல்லியின் மீது கஸ்டர்டு தடவிப் பாருங்கள். எல்லாம் சுவைமயம்! இத்தகைய கஸ்டர்டு தயாரிக்க, 1½ தேக்கரண்டி பிரவுன் & போல்ஸன் கஸ்டர்டு பவுடர், 3தேக்கரண்டியளவுசர்க்கரை, சிறிதளவு குளிர்ந்த பால். மூன்றையும் கலந்து விழுது போல ஆக்குங்கள். ஒரு கோப்பை பாலை சூடாக்குங்கள். அதில் கஸ்டர்டு பவுடர் விழுதைக் கரைத்து, கொதிக்கும் வரை கிளறுங்கள். அதை சூடாகவோ, குளிர்ந்ததாகவோ உங்கள் பிள்ளைக்குத் தாருங்கள். சுவையோ சுவை!
ஒரு விசேஷ முறை: நீங்கள் வீட்டிலேயே ஐஸ்க்ரீம், பலூதா, பாயசம், ரபடி தயாரித்தால், பாலைக் கெட்டியாக்க பிரவுன் & போல்ஸன் கஸ்டர்டு பவுடரையும் சேர்க்கவும். ஒவ்வொரு தித்திப்பும் இரட்டிப்பு சுவை தரும்! இதற்கு வெரைடி கஸ்டர்டு பவுடரை உபயோகியுங்கள். வனில்லா, ஆரஞ்சு, பனானா, ஸ்ட்ராபெர்ரி, லெமன், ராஸ்பெர்ரி, ஆகிய 6 கனிச்சுவையுள்ள கஸ்டர்டு பவுடர்கள் உள்ளன.
6 இனிமையான சுவைகள் கொண்ட வெரைடி கஸ்டர்டு பவுடர் பாக்கெட்டும் கிடைக்கிறது.
முட்டை கலவாதது.
Brown & Polson Custard
அருமையான பொருள்களிலிருந்து மிகுந்த கவனத்தோடுபக்குவப் படுத்தப்பட்டதால், கஸ்டர்டுபவுடர்களிலேயே மிகச் சிறந்தது பிரவுன் & போல்ஸன். ஒரு டின் கைவசம் இருக்கட்டும்...எப்போதுமே!
கார்ன் ப்ராடக்ட்ஸ் கோ. (இந்தியா) பிரை. லிட்.
பம்பாய்-400 001.
பிரவுன் & போல்ஸன் கஸ்டர்டு பவுடர்



ராஜாஜியின் ஜெயில் டைரி

இந்திய அரசாங்கம் துருக்கிப் பிரச்னையைத் தீர்க்க வேண்டும் என்று கோரியிருந்தது. அந்தக் கோரிக்கையை மாண்டேகு, மந்திரி சபைக்கு அறிவிக்காமலும் அதன் அனுமதியைப் பெறாமலும் பிரகரம் செய்து விட்டார். அதுதான் அவர் ராஜிநாமாச் செய்ய நேர்ந்ததன் காரணம்.

காந்தியடிகள் கைதியாகிவிட்டாரே, இனி நாடு என்ன செய்யப் போகிறது? பெரிய தலைவர்கள் எல்லோரும் சிறையிலேயே இருக்கிறார்கள். இந்தச் சமயத்தில் நமக்கு வழி காட்டவும் துணைபுரியவும் உள்ளவர் கடவுள் ஒருவர்தான்.

இந்த வாரத்தின் இறுதியில் என்னை விடுதலை செய்வார்கள். ஆனால் விடுதலை செய்வதனால் விளையும் பயன் ஒன்றுமில்லை என்று இதற்கு முன்னால் நான் எண்ணினேனில்லை. மகாத்மாஜியும், தலைவர்களும் சிறையில் இருக்கும்போது நான் மட்டும் வெளியிலிருந்து என்ன சாதித்துவிட முடியும்? என் சிறைக் காலம் இவ்வளவு சீக்கிரத்தில் முடிவு பெறாமல் இருந்தால் நன்றாயிருக்கும்.

1922 மார்ச், 15உ

புதன்கிழமை: இன்று சுமார் இருபது இளைஞர்கள் சிறையிலுள்ள தொழிற்சாலைகளைச் சுற்றிப் பார்த்துக் கொண்டு போனார்கள். அவர்கள் அநேகமாக மாணவர்களாக இருப்பார்கள் என்று எண்ணுகிறேன். சிறை விதிகளை மீறாமல் அவர்களுடன் பேச முடியாதல்லவா? அதனால் தூரத்திலிருந்தே என்னை வணங்கினார்கள். நானும் அப்படியே செய்தேன்.

இன்னும் எங்களில் சிலர் சுருட்டுக் குடிக்கும் கெட்ட வழக்கத்தை விட்டு ஒழிக்காமல் இருப்பது எனக்கு வருத்தமாக இருக்கிறது. எங்களில் முக்கியஸ்தர்களாயிருப்பவர்கள் அல்லர் அவர்கள். ஆனால் யாராயிருந்தாலும் அதனால் உண்டாகும் அவமானத்தை எல்லோரும் அனுபவிக்கவே செய்கிறோம். அந்த அவமானம் இரண்டுவிதம். ஒன்று அது தீய பழக்கம் என்பது. மற்றொன்று அது சிறை விதிகளுக்கு விரோதம் என்பது. இதை விட்டொழிக்காமல் இருப்பதற்குக் காரணம் என்ன? ஒன்று அதை விட்டுவிட வேண்டும் என்று உண்மையாகவே முயலவில்லை என்பதாக இருக்க வேண்டும். அல்லது பழக்கம் ஏற்பட்டுவிட்டதால் அதற்கு வேண்டிய வசதிகள் சிறையில் ஏராளமாகக் கிடைப்பதால் அதன் வலையில் எளிதில் வீழ்ந்துவிடுகிறார்கள் என்பதாக இருக்க வேண்டும். இந்தப் பழக்கத்துக்கு அடிமையாயிருப்பவர்கள் திருடியோ, இரந்து பெற்றோ, அல்லது பட்டினி கிடந்து மிச்சப்படுத்திக் கையில் கிடைக்கும் உணவை விலையாகக் கொடுத்தோ தங்களுக்கு வேண்டிய புகையிலையைப் பெறுகிறார்கள். சிறை விதிகள் கடுமையாக இருந்த போதிலும் இந்த வியாபாரம் வெகு ஒழுங்காக நடைபெறுவதாகக் கேள்விப்படுகிறேன். அதை நம்பாமல் இருக்க முடியாது. இப்படி வேண்டிய வசதிகள் ஏராளமாகக் கிடைப்பதால் ஒத்துழையாமைக்காரர்களில் மனோதைரியம் குன்றுபவர்கள் அதன் வலையில் விழுந்து விடுகிறார்கள்.

என்னைச் சிறையில் பார்த்ததாகவும் பர்தோலித் தீர்மானங்கள் பிடிக்காததுபோல் நான் தோன்றியதாகவும் திரு ராமசாமி நாயக்கர் சுயராஜ்யா பத்திரிகை நிருபருக்குப் பேட்டி அளித்திருக்கிறார். அதன் காரணமாக ஒத்துழையாமைக்காரர்களைச் சிறையில் பார்ப்பது சம்பந்தமாகப் புது விதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. இனிமேல் யாரேனும் பார்க்க விரும்பினால் ஜில்லா நீதிபதியிடமோ அல்லது ஜில்லா போலீஸ் அதிகாரியிடமோ அனுமதி பெற்றாக வேண்டும். இதனால் இனி பார்க்க விரும்புவோருடைய கொள்கை, நடத்தை முதலியவைகளைக் குறித்து அநாவசியமாகக் கேள்விகள் கேட்பார்கள். அந்தரங்க விசாரணைகள் நடத்துவார்கள். இட்டது சட்டமாக உத்தரவு பிறப்பிப்பார்கள். அநாவசியமாகக் காலதாமதம் உண்டாகும்.






"பழைமையான கரகரப்-
பான பற்பொடிகள்
உங்கள் ஈறுகளுக்கும்,
பற்களுக்கும் தீங்கு
இழைக்கக்கூடும்..."

கால்கேட் பற்பொடி உபயோகித்து உங்கள் பற்களை-யும், ஈறுகளையும் பாதுகாத்துக் கொள்ளுங்கள்! வாய் நாற்றத்தையும் அகற்றுங்கள்!

பழைமையான கரகரப்பான பற்பொடிகள் உங்கள் ஈறுகளைச் சேதப்படுத்தி, பல் எனாமலைச் சிதைக்கக்கூடும். கால்கேட் பற்பொடி மிகவும் மென்மையானது. அது உங்கள் ஈறுகளுக்கு இதமளிக்கும் போதே, அதில் கலந்துள்ள மெருகேற்றும் பொருள் பற்களின் மீது படிந்துள்ள கறைகளைப் போக்கி, பற்களைச் சுத்தமாக வெண்மை பளிச்சிடச் செய்கிறது. கால்கேட்டின் வளமான நுரை பல் இடுக்கு களில் ஊடுருவி வாய்நாற்றம் மற்றும் பற்சிதைவுக்குக் காரணமான கிருமிகளை அகற்றுகிறது. அதனால்தான் கால்கேட் பற்பொடி வாய் நாற்றத்தை உடனே நிறுத்தி, பற்சிதைவையும் எதிர்க்கிறது. அதன் குளுமையான இன்மணத்தையும் நீங்கள் பெரிதும் விரும்புவீர்கள்!

நவீன
பல் பராமரிப்பு முறைகளே **சிக்கனமாக**
இருக்கும்போது பழைமையான
பற்பொடிகளை ஏன் உபயோகிக்க வேண்டும்!

உங்கள் குடும்பத்திற்கு
எகானமி சைஸ் கால்கேட்
பற்பொடியை இன்றே வாங்குங்கள்!
ஒரு டப்பா மாதக்கணக்கில் வரும்!





TP. G. 19 TM

சிவகாமியின் சபதம்

அத்தியாயம் 35

இரண்டாவது அரங்கேற்றம்

திருநாவுக்கரசு அடிகளுக்கு அப்போது ஐம்பத்தைந்து பிராயமிருக்கலாம். அப்பெருமானுடைய பொன் வண்ணத் திருமேனி முழுதும் தூய வெண்ணீறு பூசியிருந்தது. அவருடைய கழுத்தையும் மார்பையும் ருத்திராட்ச கண்டிகைகளும் தாழ்வடங்களும் அலங்கரித்தன. சிரசிலும் கரங்களிலும் அவ்வாறே ருத்திராட்சங்கள் பொலிந்தன. காதுகளில் ருத்திராட்ச குண்டலங்கள் இலங்கின. இடையில் தூய வெண் துகில் உடுத்தியிருந்தார். அவருடைய திருமுகத்தில் ஞானஒளி வீசிற்று. இறைவனை நினைந்து இடையறாது கண்ணீர் விட்ட அவருடைய கண்களில் பேரருள் ததும்பிற்று. கோயில் பிராகாரங்களில் புல் செதுக்குவதற்கான உழவாரப்படை அந்தத் தொண்டர் சிகாமணியின் திருத்தோளில் சாத்தப்பட்டிருந்தது.

திருநாவுக்கரசர் காஞ்சியில் அமைத்திருந்த சைவத் திருமடத்துக்கு அதிபராக விளங்கிய போதிலும், அவ்வப்போது ஸ்தல யாத்திரை சென்று திரும்புவது வழக்கம். தொண்டை நாட்டிலும் சோழ நாட்டிலும் உள்ள பல சிவஸ்தலங்களுக்கு அவர் சென்று சிவானந்தமும் தமிழின்பமும் ததும்பும் தெய்வத் திருப்பதிகங்களைப் பாடினார். சென்ற இடங்களிலெல்லாம் ஜனங்கள் அவரைச் சிவிகையில் ஏற்றி ஊர்வலம் நடத்திச் சிறப்பாக வரவேற்றார்கள். அவர் சென்ற ஒவ்வொரு ஸ்தலத்திலும் கோயில் பிராகாரங்களில் முளைத்திருக்கும் புல்லை அவர் தம் கையில் பிடித்த உழவாரப் படையினால் செதுக்கிச் சுத்தம் செய்தார். இந்தச் சிவ கைங்கரியத்தை ஆயிரக்கணக்கான மக்கள் அதிசயத்துடன் பார்த்தார்கள். அதுமுதல் தங்கள் ஊர்க் கோயில்களைப் புதுப்பித்துச் சுத்தமாக வைத்திருக்கத் தீர்மானித்தார்கள்.

வாகீசப் பெருமானுடைய திருவாக்கினால் தத்தம் ஊரிலுள்ள கோயிலுக்கு மகிமை உண்டாக வேண்டும் என்று ஜனங்கள் விரும்பினார்கள். ''எங்கள் ஊருக்கும் விஜயம் செய்ய வேண்டும். எங்கள் ஊர்க் கோயிலைப் பற்றியும் பாடியருள வேண்டும்'' என்று அவரிடம் வேண்டிக் கொண்டார்கள். அவ்விதம் அப்பெருமான் பாடிய பாடல்களை



அமரர்



அந்தந்த ஊர்க்காரர்கள் ஓலைச் சுவடிகளில் எழுதிக் கொண்டு பெறுதற்கரிய பேறு அடைந்ததாக எண்ணி மகிழ்ந்தார்கள்.

இத்தகைய மகிமைவாய்ந்த நாவுக்கரசர் எழுந்தருளியிருக்கும் இடங்களில் ஜனங்கள் அருளொளி விளங்கிய அவருடைய திருமுகத்தைப் பார்த்துக் கொண்டும் அவருடைய திருவாக்கிலிருந்து எப்போது என்ன அமுத வாக்கு வருமோ என்று ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டும் இருப்பார்கள்.

அங்ஙனமிருக்க, இன்று அவருடைய சொந்த மடாலயத்தில் அவரிடம் பக்தி பூண்டு தொண்டுசெய்யும் சீடர்கள்கூட, ''ஆயனர் வருகிறார்!'' என்ற சொல்லைக் கேட்டதும் ஒருமுகமாக வாசற்பக்கம் திரும்பிப் பார்த்தார்கள் என்றால், அதிலிருந்து மக்களின் உள்ளத்தில் ஆயனச் சிற்பியார் எப்பேர்ப்பட்ட இடம் பெற்றிருந்தார் என்று ஊகித்து அறியலாம்.

அங்கிருந்தோர் எல்லோரையும் விட நாவுக்கரசரின் அருகில் வீற்றிருந்த குமார சக்கரவர்த்தியின் உள்ளத்திலேதான் அதிகப் பரபரப்பு உண்டாயிற்று. 'இதோ ஆயனர் வருகிறார்!' என்ற வார்த்தைகளைக் கேட்டதும் 'ஒருவேளை அவருடன் சிவகாமியும் வருவாளோ?' என்ற எண்ணம் அவர் மனத்தில் தோன்றிக் கிளர்ச்சியை உண்டாக்கிற்று. அடுத்த கணத்தில், 'அவள் எதற்காக இங்கு வருகிறாள்?' என்ற எண்ணம் மனச் சோர்வை உண்டாக்கியது. இவ்விதம் அவர் மாறி மாறிக் கிளர்ச்சியும் சோர்வும் அடைவது அதிக நேரம் நீடித்திராதபடி இதோ ஆயனர் வாசற்படியண்டை வந்து விட்டார்! — ஆகா! அது என்ன 'ஜல் ஜல்' சத்தம்? பாதசரத்தின் ஒலிபோல் இருக்கிறதே! அதோ, ஆயனருக்குப் பின்னால் வரும் பெண் யார்? சந்தேகமென்ன? சிவகாமியேதான்!

குமார சக்கரவர்த்தியின் கண்கள் சிவகாமியின் முகத்தை நோக்கின. சிவகாமியின் கண்களும் முதன் முதலில் மாமல்லரின் ஆவல் ததும்பிய கண்களைத்தான் சந்தித்தன. வாடியிருந்த சிவகாமியின் முகத்தில் ஒரு கணம் புது மலர்ச்சி காணப்பட்டது. ஆனால், ஒரு கண நேரம்தான்; அடுத்த கணத்தில் அந்தச் செந்தாமரை முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தன. தலைகுனிந்து பூமியை நோக்கிய வண்ணம் சிவகாமி தன் தந்தையைப் பின்தொடர்ந்து அந்த மண்டபத்துக்குள்ளே நுழைந்தாள்.

நயன பாஷையில் நடைபெற்ற மேற்படி நாடகத்தை வேறு யாரும் கவனியாத வண்ணம் மண்டபத்துக்குள் அப்போது பெருங் கலகலப்பு ஏற்பட்டிருந்தது.

பணிவுக்குப் பெயர் போன நாவுக்கரசர் பெருமான், ஆயனர் மண்டபத்துக்குள்ளே நுழைந்ததும் தாமும் ஆசனத்தை விட்டு எழுந்து நாலு அடி நடந்து எதிர்கொண்டு, ''வரவேணும்! சிற்பச் சக்கரவர்த்தியே வரவேணும்!'' என்று உபசரித்து அழைத்தார். ஆயனர் இதைக் கண்டதும் விரைந்து முன்னால் வந்து, ''அபசாரம்! அபசாரம்!'' என்று கூறிக் கொண்டே திருநாவுக்கரசரின் திருப்பாதங்களில் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கினார்.

நாவுக்கரசர் ஆசனத்தை விட்டு எழுந்தபோது அவருடன் எழுந்த சீடர்கள், நாவுக்கரசரும் ஆயனரும்



அமர்ந்த பிறகு தாங்களும் தத்தம் இடத்தில் உட்கார்ந்தார்கள்.

எல்லாரும் உட்கார்ந்தபிறகும் சிவகாமி மட்டும் ஆயனருக்குப் பின்னால் தலைகுனிந்த வண்ணம் நின்று கொண்டிருந்தாள். அப்போதுதான் அவளைப் பார்த்த நாவுக்கரசர், "ஆகா! இந்தப் பெண் யார் ஆயனரே? தங்கள் குமாரி சிவகாமியா?" என்று கேட்க, ஆயனர், "ஆம் அடிகளே! தங்களைத் தரிசிக்கப் போகிறேன் என்று சொன்னபோது சிவகாமி 'நானும் வருகிறேன்' என்றாள்; அழைத்துக் கொண்டு வந்தேன்" என்றார்.

"மிக்க சந்தோஷம்; உங்கள் குமாரியைப் பார்க்க வேண்டுமென்று நானும் மிக்க ஆவலாயிருந்தேன். நடனக் கலையில் அவள் அடைந்திருக்கும் அபூர்



வத் தேர்ச்சியைப் பற்றிக் கேள்விப்பட்டேன். சமீபத்தில் அரங்கேற்றம் நடந்ததாமே! நான்தான் அச்சமயம் இல்லாமற்போய் விட்டேன்!" என்று நாவுக்கரசர் கூறினார்.

"எனக்கும் அது மிக வருத்தமாயிருந்தது சுவாமி! அன்று சிவகாமியின் நடனத்தைப் பார்த்துவிட்டு ருத்ராச்சாரியார் பிரமித்துப் போய் விட்டார். சிற்பம், சித்திரம், சங்கீதம் ஆகிய கலைகளுக்கெல்லாம் நடனக் கலைதான் ஆதாரம் என்பதை அன்றைக்குத்தான் அவர் ஒத்துக்கொண்டார். 'சிவகாமியின் நடனத்தைப் பார்த்த பிறகு, சங்கீதக் கலையில் நான் கற்க வேண்டியது இன்னும் எவ்வளவோ இருக்கிறதென்பதை அறிந்தேன்' என்று சபை நடுவில் வாய் விட்டுச் சொன்னார்."

இவ்விதம் ஆயனர் கூறியபோது அவருடைய குரலிலும் முகத்திலும் பெருமிதம் கொந்தளித்தது.

அப்போது வாகீசர், "ஆயனரே! சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம் ஆகிய தெய்வக் கலைகளுக்கு ஆதாரமும் நடனந்தான்! அண்ட பகிரண்டங்களையெல்லாம் படைத்துக் காத்து அழிக்கும் பெருமான் தில்லைச் சிற்றம்பலத்தில் ஆனந்த நடனம் பயில்கிறார் அல்லவா?" என்று திருவாய் மலர்ந்தார்.

இதுவரை மௌனமாக இருந்த குமார சக்கரவர்த்தி, "சுவாமி! நடராஜப் பெருமானின் ஆனந்த நடனத்தைப் பற்றிய தங்களுடைய பாடல் ஒன்றுக்கு, அன்று ஆயனரின் மகள் அபிநயம் பிடித்தாள்; தாங்கள் அதை அவசியம் பார்க்க வேண்டும்!" என்றார்.

"ஆம், சுவாமி! தங்களுடைய மூன்று திருப்பாடல்களுக்குச் சிவகாமி அபிநயம் பிடிப்பதாயிருந்தாள். ஆனால், ஒரு பாடலுக்குத்தான் அபிநயம் பிடிக்க முடிந்தது. அரங்கேற்றம் நடுவில் நின்ற செய்தி கேட்டிருப்பீர்களே!" என்று ஆயனர் கூறியபோது, அதனால் ஏற்பட்ட வருத்தம் இன்னும் அவருக்குத் தீரவில்லை எனத் தோன்றியது.

"கேள்விப்பட்டேன், ஆயனரே! யுத்தத்தினால் சிவகாமியின் அரங்கேற்றம் மட்டும்தானா தடைப்பட்டது? இன்னும் எத்தனையோ காரியங்கள் தடைப்படும்போலிருக்கின்றன. உம்மை நான் அழைத்த காரியங்கூட அப்படித்தான்!" என்று வாகீசப் பெருமான் கூறினார்.

"சுவாமி! என்ன காரியமாக என்னை வரச்சொல்லிப் பணித்தீர்கள்?" என்று ஆயனர் கேட்டார்.

"நமது திருமடத்தை இந்த ஏகாம்பரர் சந்நிதியிலிருந்து திருமேற்றளிக்குக் கொண்டு போக வேண்டுமென்று விரும்பினேன். இந்த இடம் நகரின் மத்தியில் இருப்பதால் கல்வி பயிலும் மாணாக்கர்களுக்கு உகந்ததாயில்லை. ஆனால், திருமேற்றளியில் அமைதி குடிகொண்டிருக்கிறது. கோயிலைச் சுற்றியுள்ள நந்தவனத்தில் மல்லிகை மலர்களும், கொன்றை மலர்களும் பூத்துக் குலுங்குகின்றன. சந்தடி கூச்சல் ஒன்றும் கிடையாது. இறைவனைத் துதிப்பதற்கும் தமிழ் பயில்வதற்கும் திருமேற்றளி தக்க இடம்."

"பெருமானே! திருமேற்றளி இறைவன்மீது பாடல் ஏதாவது பாடப் பெற்றதோ?" என்று ஆயனர் கேட்க, நாவுக்கரசர் தம் சீடர்களைப் பார்த்தார். உடனே ஒரு சீடர் திருமேற்றளிப் பதிகத்திலிருந்து பின்வரும் பாடலைப் பாடினார்:

செல்வியைப் பாகம் கொண்டார்
　சேந்தனை மகனாக் கொண்டார்
மல்லிகைக் கண்ணி யோடு
　மாமலர்க் கொன்றை சூடிக்
கல்வியைக் கரை யிலாத
　காஞ்சிமா நகர்தன் னுள்ளார்
எல்லியை விளங்க நின்றார்
　இலங்குமேற் றளிய னாரே!"

மேற்கண்ட பாடலைச் சீடர் இனிய குரலில் உருக்கமாய்ப் பாடி வந்தபோது நாவுக்கரசர் பெருமானின் கண்களின் நீர் ததும்பி நின்றது. திருமேற்றளிக் கோயிலில் மல்லிகையும் கொன்றை மலரும் சூடிச் சூரியனைப் போல் ஜோதி மயமாக விளங்கிய சிவபெருமானை மீண்டும் அகக் கண்ணால் அவர் நேருக்கு நேரே தரிசித்துப் பரவசமடைந்தவராகத் தோன்றினார். அந்தக் காட்சியை அங்கிருந்த மற்றவர்களும் பார்த்துப் பரவசமடைந்திருந்தார்கள்.

பாடல் முடிந்து சிறிது நேரம் வரையில் மௌனம் குடிகொண்டிருந்தது. பின்னர், நாவுக்கரசர் பரவச நிலை நீங்கித் தம்மைச் சுற்றி யிருந்தவர்களைப் பார்த்தார். உடனே ஆயனர், "அடிகளே! தாங்கள் உண்மையிலேயே நாவுக்கரசர்தான். தங்களுடைய திருவாக்கு அப்படி மகிமை வாய்ந்திருக்கிறது. தங்களுடைய பாடலில் இடம் பெற்று விட்டபடியால் இந்தக் காஞ்சி நகருக்கும் இங்குள்ள திருமேற்றளிக்கும் இனி அழிவென்பதே இல்லை. தங்கள் விருப்பத்தின்படி திருமேற்றளியில் மடாலயத் திருப்பணியை மேற்கொள்ளச் சித்தமா யிருக்கிறேன். ஆனால், துறைமுகப் பட்டினத்தில் ஒரு முக்கியமான திருப்பணியைத் துரிதமாகச் செய்து முடிக்கும்படி சக்கரவர்த்தி எனக்குக் கட்டளையிட்டிருக்கிறார். எதை முதலில் செய்வது என்று குமார சக்கரவர்த்தி ஆக்ஞை இடவேண்டும்" என்று கூறி, மாமல்லரை நோக்கினார்.

ஆயனருடைய கேள்விக்கு மாமல்லர் மறுமொழி கூறுவதற்குள் நாவுக்கரசர் சொல்லுவார்: "அதற்கு இப்போது அவசியமே இல்லை, சிற்பியாரே! தாங்கள் வரும்போதுதான் சக்கரவர்த்தியின் அபிப்பிராயத்தை மாமல்லர் எனக்குத் தெரிவித்துக் கொண்டிருந்தார். யுத்தம் முடியும்வரையில் என்னைச் சிஷ்யர்களுடன் சோழ நாட்டிலும் பாண்டிய நாட்டிலும் உள்ள ஸ்தலங்களைத் தரிசித்து வரும்படி சக்கரவர்த்தி யோசனை கூறியிருக்கிறார். எனக்கும் வெகு காலமாக அந்த ஆசை உண்டு. காஞ்சிக் கோட்டை ஒருவேளை பகைவர் முற்றுகைக்கு இலக்கானாலும் ஆகலாம். அம்மாதிரி சமயங்களில் என்போன்ற துறவிகள் விலகி யிருப்பதே நல்லது."

இவ்விதம் நாவுக்கரசர் கூறியதைக் கேட்ட நரசிம்ம வர்மர், "அடிகளே! தாங்கள் இப்போது கூறிய அபிப்பிராயம் போற்றத் தக்கது. அதைச் சமண முனிவர்களும், புத்த பிக்ஷுக்களும் ஒப்புக்கொண்டு அரசியல் விஷயங்களில் தலையிடாமல் நடந்து கொண்டால் எவ்வளவு நன்றா யிருக்கும்?" என்றார்.

புத்த பிக்ஷு என்ற வார்த்தையைக் கேட்டதும் ஆயனருக்குச் சுருக்கென்றது. அதோடு பரஞ்சோதியைப் பற்றிய நினைவும் வந்தது. "அடிகளே! ஒரு விஷயம் தெரிவிக்க மறந்து விட்டேன். தங்களுடைய மடாலயத்தில் சேர்ந்து தமிழ் கற்பதற்காக ஒரு பிள்ளை சோழ நாட்டில் திருச்செங்காட்டாங்குடியிலிருந்து வந்தான். திருவெண்காட்டு நமசிவாய வைத்தியரிடமிருந்து தங்களுக்கும் எனக்கும் அவன் ஓலை கொண்டு வந்திருந்தான். சித்திரக் கலை சம்பந்தமான ஒரு மகா இரகசியத்தை அறிந்து வருவதற்காக அவனை வடக்கே ஸ்ரீபர்வதத்துக்கு அனுப்பி யிருக்கிறேன்..."

"அவ்வளவு தூரமா அனுப்பியிருக்கிறீர்கள்? அங்கேயெல்லாம் யுத்தம் நடக்கும் இடமாயிற்றே! சிறு பிள்ளை என்று சொன்னீர்களே?" என்று நாவுக்கரசர் சிறிது கவலையுடன் கேட்டார்.

"சிறு பிள்ளையா யிருந்தாலும் மகா வீரன் சுவாமி!" என்று ஆயனர் கூறி, அரங்கேற்றத்தன்று மத யானை மீது அவன் வேல் எறிந்ததை விவரித்தார்.

கடைசியாக, "பரஞ்சோதி திரும்பி வந்ததும் உடனே தங்களிடம் அனுப்பி விடுகிறேன், சுவாமி!" என்றார் ஆயனர்.

"வேண்டாம் ஆயனரே! அவன் திரும்பி வரும்போது நான் எங்கே இருப்பேனோ, தெரியாது. எப்போது அவன் உங்கள் தொண்டில் ஈடுபட்டானோ, உங்களுடைய சீடனாகவே இருக்கட்டும். சிற்பக் கலை பயிலும் பேறு இலேசில் கிடைக்கக் கூடியதா? என்றும் அழிவில்லாத ஈசனுக்கு என்றும் அழியாத கற்கோயில்களை அமைக்கும் கலையைக் காட்டிலும் சிறந்த கலை உலகில் வேறு என்ன உண்டு....?"

ஆயனர் அப்போது குறுக்கிட்டு, "அடிகளே! சிற்பக் கலையைக் காட்டிலும் சிறந்த கலை வேறொன்று இருக்கிறது. எங்களுடைய கற்கோயில்கள் சிதைந்து உருத் தெரியாமல் அழிந்து போகலாம். ஆனால், தங்களுடைய கவிதைக் கோயில்களுக்கு ஒருநாளும்

அழிவில்லை. கற்பகோடி காலம் அவை நிலைபெற்றிருக்கும்'' என்றார்.

அப்போது குமார சக்கரவர்த்தி, ''சற்று முன்னால் பேசி முடிவு செய்ததை இரண்டு பேரும் மறந்து விட்டீர்களே? எல்லாக் கலைகளுக்கும் ஆதாரம் நடனக் கலையல்லவா?'' என்று சொல்லவே அங்கிருந்த எல்லோருடைய முகத்திலும் புன்னகை பூத்தது. ஆனால், சிவகாமி மட்டும் குனிந்த தலை நிமிராமலிருந்தாள்.

நாவுக்கரசர், ''நல்லது, குமார சக்கரவர்த்தி! நாங்கள் மறந்துதான் போய்விட்டோம். எல்லாக் கலைகளுக்கும் ஆதாரம் நடனக் கலைதான். தில்லையம்பலத்தில் ஆடும் பெருமான் முன்னால் நிற்கும்போது உள்ளமானது பொங்கிக் கவிதை வெள்ளமாய் வருவது



போல் மற்ற மூர்த்தங்களுக்கு முன்னால் நிற்கும்போது வருவதில்லை!'' என்று கூறிவிட்டு, ஆயனரைப் பார்த்து, ''சிற்பியாரே! தங்கள் புதல்வியின் நடனத்தை நான் பார்க்க வேண்டாமா? தென்னாட்டுக்கு யாத்திரை சென்றால், திரும்பி எப்போது வருவேனோ தெரியாது. நாடெல்லாம் புகழும் சிவகாமியின் நடனக் கலையைப் பார்க்காமல் போக எனக்கு மனமில்லை. ஒரே ஒரு பாடலுக்கு அபிநயம் பிடித்துக் காட்டினால் போதும்!'' என்றார்.

ஆயனர், ''சுவாமி! சிவகாமிக்கு அத்தகைய பாக்கியம் கொடுத்து வைக்க வேண்டுமே!'' என்று கூறித் தமக்குப் பின்னாலிருந்த சிவகாமியைத் திரும்பிப் பார்த்தார். அவள் முக மலர்ச்சியின்றித் தலைகுனிந்த வண்ணம் இருப்பதைக் கண்டதும் ஆயனருக்குச் சிறிது வியப்பு உண்டாயிற்று.

இதையெல்லாம் கவனித்த மாமல்லர், ''ஒருவேளை நான் இங்கு இருப்பதால் சிவகாமிக்கு ஆட விருப்பமில்லாமலிருக்கலாம். சுவாமி, விடை கொடுங்கள்! போய் வருகிறேன்!'' என்று நாவுக்கரசரைப் பார்த்துக் கூறினார்.

இந்த வார்த்தை காதில் விழுந்ததும், சிவகாமி, பளிச்சென்று துள்ளி எழுந்து நடனத்துக்கு ஆயத்தமாக நின்று, ''அப்பா! எந்தப் பாடலுக்கு அபிநயம் பிடிக்க வேண்டும்?'' என்று கேட்டது, அழகிய மான் குட்டி ஒன்று குயிலின் குரல் பெற்று அமுதத் தமிழ் மொழியில் மழலை பேசுவது போல் தொனித்தது.

'' 'பூவணத்துப் புனிதனார்' முதலில் தோன்றட்டுமே!'' என்று ஆயனர் பெருமிதம் தோன்றக் கூறினார்.

நாவுக்கரசர், கலை அரசர், இளவரசர் ஆகிய மூன்று மன்னர்களின் முன்னிலையில் சிவகாமியின் நடனக் கலை அரங்கேற்றம் இரண்டாவது முறை ஆரம்பமாயிற்று.

மந்தமாருதத்தில் மிதந்து வரும் தேன் வண்டின் ரீங்காரம் போன்ற குரலில் சிவகாமி பின்வரும் திருத்தாண்டகத்தைப் பாடிக் கொண்டு, அதன் பொருளுக்கேற்ப அங்கங்களின் சைகைகளினாலும், முக பாவத்தினாலும் அபிநயம் பிடித்தாள். பாடலில் ஒவ்வொரு வரியிலும் 'தோன்றும், தோன்றும்' என்று வந்தபோது சிவகாமியின் பாதசரங்கள் 'ஜல்', 'ஜல்' என்று தாளத்துக்கிசைய ஒலித்தன.

''வடிவேறு திரிசூலம்
தோன்றும் தோன்றும்
வளர்சடைமேல் இளமதியம்
தோன்றும் தோன்றும்
கடியேறு கமழ்கொன்றைக்
கண்ணிதோன் றும்
காதில்வெண் குழைதோடு
கலந்துதோன் றும்
இடியேறு களிற்றுரிவைப்
போர்வைதோன் றும்
எழில்திகழும் திருமுடியும்
இலங்கித் தோன்றும்
பொடியேறு திருமேனி
பொலிந்துதோன் றும்
பொழில்திகழும் பூவணத்தெம்
புனிதனார்க் கே.''

இந்தத் தெய்விகமான பாடலைப் பாடிக்கொண்டு சிவகாமி அதன் பொருளுக்கேற்ப அபிநயம் பிடித்தபோது, அங்

இருந்தவர்கள் எல்லோரும் தங்களை மறந்தார்கள். தாங்கள் இருக்கும் இடத்தை மறந்தார்கள். அங்கு நடப்பது என்ன என்பதையும் மறந்தார்கள்.

சற்று முன்னால் நாவுக்கரசரின் சீடர் பாடியபோது அவர்களுடைய செவிகளில் இனிய தமிழ்ச் சொற்கள் நின்றன. அவர்களுடைய கண்கள் திருநாவுக்கரசரை நோக்கின. அப்பாடலை அவர் அநுபவித்து உருகுவதைப் பார்த்து அவர்கள் மனம் கசிந்தன.

சிவகாமி அபிநயம் பிடித்தபோது, அவர்களுடைய கண்கள் நாவுக்கரசரை நோக்கவில்லை. குமார சக்கரவர்த்தியையோ, ஆயனச் சிற்பியாரையோ அவர்கள் காணவில்லை. அந்த மடாலயத்தின் சுவர்களோ, தூண்களோ, அவற்றில் அமைந்திருந்த சிற்பங்களோ, சித்திரங்களோ அவர்கள் கண்ணில் படவே யில்லை.

அவர்கள் கண் முன்னால் பாடி ஆடி அபிநயம் பிடித்துக் கொண்டிருந்த சிவகாமியைக் கூட அவர்கள் பார்க்கவில்லை.

பின் அவர்கள் யாரை அல்லது எதனைப் பார்த்தார்கள்?

சாக்ஷாத் சிவபெருமானையே தங்கள் கண் முன்னால் தத்ரூபமாக நேருக்கு நேரே பார்த்தார்கள்!

அவருடைய கரத்தில் தோன்றிய திரிசூலத்தையும், அவருடைய வளர்சடைமேல் இலங்கும் இளமதியையும் பார்த்தார்கள்.

அவருடைய திருமிடற்றில் கொன்றை மாலையைப் பார்த்தார்கள். காதிலே வண் குழையைப் பார்த்தார்கள்.

திருநீறு பொலியும் திருமேனி முழுவதையும் பார்த்தார்கள்.

அந்தத் தெய்விகக் காட்சியில் தங்களை மறந்தார்கள்; இந்தப் பூவுலகையே மறந்தார்கள். பூவுலகிலிருந்து கைலாசத்துக்கு அவர்கள் போய்விட்டார்கள்.

பாட்டும் அபிநயமும் நின்ற சிறிது நேரத்துக்குப் பிறகுதான் எல்லாரும் சுய உணர்வு பெற்றுப் பூவுலகிற்கு வந்து சேர்ந்தார்கள்.

சுய உணர்ச்சி தோன்றியதும் அனைவருடைய கவனமும் இயல்பாக நாவுக்கரசர்பால் சென்றது. அவருடைய கண்களிலிருந்து கண்ணீர் ஆறாய்ப் பெருகி வெண்ணீறு அணிந்த திருமேனியை நனைத்துக் கொண்டிருப்பதைக் கண்டார்கள்.

இத்தனை நேரமும் பாவனைக் கண்ணால் தாங்கள் தரிசித்துக் கொண்டிருந்த சிவபெருமான் இந்த மகான்தானோ என்று அவர்களில் பலர் எண்ணினார்கள்.

சற்று நேரத்துக்கெல்லாம் நாவுக்கரசர் தழுதழுத்த குரலில், ''ஆயனரே! திருக் கயிலையில் வீற்றிருக்கும் எம்பெருமானைத் தங்கள் குமாரி எங்கள் கண் முன்னால் பிரத்தியட்சமாகத் தோன்றச் செய்து விட்டாள்!'' என்றார்.

ஆயனரும் கண்களில் ஆனந்தக் கண்ணீர் ததும்ப, ''எல்லாம் தங்கள் ஆசீர்வாதந்தான் சுவாமி!'' என்று கூறி, சிவகாமியைப் பார்த்து, ''இன்னும் ஒரு பாட்டுக்கு அபிநயம் பிடிக்கிறாயா, அம்மா! இது அகத்துறைப் பாடலாக இருக்கட்டுமே!'' என்றார்.

முப்பத்தாறும் அத்தியாயம்

வாகீசரின் ஆசி

அகத்துறைப் பாடல் ஒன்றுக்கு அபிநயம் பிடிக்கும்படி ஆயனர் பணித்ததும் நாவுக்கரசரின் திருவாரூர்த் தாண்டகத்திலிருந்து ஓர் அருமையான பாடலைப் பழம் பஞ்சுரம் என்னும் பண்ணிலே அமைத்துச் சிவகாமி பாடினாள்.

ஒரு கன்னிகை முதன் முதலிலே இறைவனுடைய திருநாமத்தைச் செவியுறுகிறாள். அப்போது அவளுடைய உள்ளத்தில் அரும்பும் பக்திக் காதலானது பின்னர் படிப்படியாக வளர்ந்து பெருங் கனலாகிக் கொழுந்து விட்டெரிகிறது. இந்த வரலாற்றை அற்புதமான முறையில் வர்ணிக்கும் அத்திருப்பாடல் பின்வருமாறு:

''முன்னம் அவனுடைய
நாமங்கேட் டாள்
மூர்த்தி அவனிருக்கும்
வண்ணங்கேட் டாள்
பின்னை அவனுடைய
ஆரூர்கேட் டாள்
பெம்மான் அவனுக்கே
பிச்சியா னாள்
அன்னையையும் அத்தனையும்
அன்றேநீத் தாள்
அகன்றாள் அகலிடத்தார்
ஆசாரத் தை
தன்னை மறந்தாள்தன்
நாமங்கெட் டாள்
தலைப்பட்டாள் நங்கை
தலைவன்தா ளே!''

பாடலை ஒருமுறை முழுவதும் பாடி விட்டு, மீண்டும் ஆரம்பத்திலிருந்து அபி

நயம் பிடிக்கத் தொடங்கினாள் சிவகாமி. அப்போது பார்த்துக் கொண்டிருந்தவர்களுக்கு, இவ்வுலகம் தோன்றிய நாளிலிருந்து பெண் உள்ளத்தில் அரும்பி மலர்ந்த காதல் உணர்ச்சியே ஓர் உருக்கொண்டு அவர்கள் முன்னால் நிற்பது போல் தோன்றியது. முதன் முதலில் ஓர் இளம் கன்னிகையின் இதயத்தில் காதல் உதயமாகும்போது அதனுடன் பிறக்கும் நாணம் கலந்த இன்பப் பெருக்கை அவர்கள் கண் முன்னால் பார்த்தார்கள். காதல் வளர்ந்து வரும் ஆரம்ப தினங்களில் காதலனுடைய பெயரைக் கேட்கும்போதும், அவனுடைய இருப்பிடம் முதலிய வரலாறுகளை அறியும்போதும் அவனுடைய குணாதிசயங்கள் வர்ணிக்கப்படும் போதும் பெண் இதயத்தில் பொங்கித் ததும்பும் ஆனந்த குதூகலத்தையும் அதனால் அவளுடைய மேனியில் ஏற்படும் அதிசயமான மாறுதல்களையும் பிரத்தியட்சமாகப் பார்த்தார்கள். நாளடைவில் அந்தக் காதல் முற்றும் போது, எப்படி அது சித்தப்பிரமையின் சுபாவத்தை எய்திக் காதலியைப் பித்துப் பிடித்தவளாக்குகிறது என்பதையும், அந்த நிலையில் காதலுக்காகவும், காதலனுக்காகவும் பெண்ணானவள் எப்பேர்ப்பட்ட தியாகங்களை யெல்லாம் செய்யச் சித்தமாகி விடுகிறாள் என்பதையும் கண்டார்கள். பெற்று வளர்த்த அன்னையையும் அப்பனையும் விட்டுவிட்டுக் காதலனுடன் புறப்படவும் காதலுக்குத் தடையாக நிற்கும் சமூக ஆசாரங்களை யெல்லாம் புறக்கணித்து ஒதுக்கவும், ஊராரின் நிந்தனைகளையெல்லாம் பொறுத்துக் கொள்ளவும் எவ்வாறு அந்தப் பெண் மனம் துணிகிறாள் என்பதையும் நேருக்கு நேரே பார்த்தார்கள்.

வாக்கினால் விவரிக்க முடியாத மேற்சொன்ன உணர்ச்சிகளை யெல்லாம்— பெண் உள்ளத்தில் படிப்படியாகக் காதல் முதிர்ந்து வரும் அபூர்வ பாவங்களையெல்லாம் — சிவகாமி அபிநயத்தில் காட்டி வந்தபோது, சபையிலிருந்து பார்த்துக் கொண்டிருந்தவர்களுக்கு, ''இது சாமானிய மனித வர்க்கத்துக்குரிய காதல் அல்ல; — அண்டபகிரண்டங்களுக்கெல்லாம் இறைவனாகிய 'எம்பெருமானுக்கே உரிய தெய்விகக் காதல்!'' என்று தோன்றியது.

அவ்வளவுடன் நின்று விடவில்லை. காதல் பரிபூரணமடைவதற்கு இன்னும் ஒரு படி மேலே போக வேண்டியிருக்கிறது. காதலி தனக்காக இவ்வளவெல்லாம் தியாகங்களைச் செய்யச் சித்தமாயிருந்தும், அந்தத் தெய்வக் காதலன் திருப்தியடையவில்லை. மேலும் அவளைச் சோதனைக்குள்ளாக்க விரும்பித் திடீரென்று ஒரு நாள் மறைந்து விடுகிறான். இதனால் சோகக் கடலிலே மூழ்கிய காதலி வெளியுலகை அடியோடு மறந்து விடுகிறாள். தன்னையும் மறந்து விடுகிறாள். தன் பெயரைக்கூட மறந்து விடுகிறாள். ''உன் பெயர் என்ன?'' என்று யாரேனும் கேட்டால், காதலனின் திருநாமத்தைச் சொல்லுகிறாள்! அத்தகைய மனநிலையில் மறுபடியும் தெய்வக் காதலன் அவள்முன்னால் தோன்றும்பொழுது, காதலியானவள் தான் செய்யாத குற்றங்களுக்காகத் தன்னை மன்னித்துவிடும்படி கோரி அவனுடைய திருப்பாதங்களில் பணிகிறாள்!

படிப்படியாக மேற்கூறிய உணர்ச்சிகளை யெல்லாம் முக பாவத்திலும் கண்களின் தோற்றத்திலும் அங்கங்களின் அசைவிலும் சைகைகளிலும் காட்டிக் கொண்டு வந்த சிவகாமி, கடைசியில்,

''தலைப்பட்டாள் நங்கை
தலைவன் தாளே!''

என்ற அடியைப் பாடிவிட்டுக் கூப்பிய கரங்களுடன் அடியற்ற மரம் போலத் தரையில் விழுந்தாள்!

உடனே சபையில், 'ஹா! ஹா! ஹா!' என்ற குரல்கள் எழுந்தன. 'சிவகாமி!' என்று கூவிக்கொண்டு ஆயனர் எழுந்தார். எழுந்து அவள் கிடந்த இடத்தை நோக்கி விரைந்து ஓடினார். அவரைப் பின்தொடர்ந்து மாமல்லரும் பரபரப்புடன் சென்றார்.

ஆயனர், சிவகாமி கிடந்த இடத்துக்கருகில் தரையில் உட்கார்ந்தார். அவருடைய அங்கங்களெல்லாம் பதறின. அதைப் பார்த்த மாமல்லர், தரையில் உதிர்ந்து கிடக்கும் மென்மையான மலர்களை அடியார் ஒருவர் இறைவனுடைய அர்ச்சனைக்காகப் பொறுக்கும் பாவனையுடனே சிவகாமியைத் தம் இரு கரங்களாலும் மிருதுவாக எடுத்து ஆயனரின் மடியின்மீது இருத்தினார்.

அதற்குள்ளாக அங்கிருந்தவர்களில் பலர் எழுந்து ஓடிவந்து, அம்மூவரையும் சுற்றிக் கொண்டார்கள். சிலர், ''தண்ணீர்! தண்ணீர்!'' என்றார்கள். சிலர், ''விசிறி! விசிறி!'' என்றார்கள்.

''வழியை விடுங்கள்!'' என்று ஒரு குரல் கேட்டது. நாவுக்கரசர் பெருமான் தமது ஆசனத்திலிருந்து எழுந்து சிவகாமியின் அருகில் வந்தார். ஆயனரின் மடியில் தலை வைத்து உணர்வின்றிப் படுத்திருந்த சிவகாமியின் முகத்தை

அவர் கருணை ததும்பும் கண்களினால் பார்த்தார். தமது திருக்கரத்தில் கொண்டு வந்திருந்த திருநீற்றை அவளுடைய நெற்றியில் இட்டார்.

சற்று நேரம் அந்த மண்டபத்தில் ஊசி விழும் சத்தமும் கேட்கும்படியான மௌனம் குடிகொண்டிருந்தது.

காலை நேரத்தில் கருங் குவளையின் இதழ் விரிவது போல் சிவகாமியின் கண்ணிமைகள் மெதுவாகத் திறந்தன.

திறந்த கண்கள் நாவுக்கரசரின் திருமுகத்தை முதலில் தரிசித்தன. தந்தையின் மடியில் படுத்தபடியே சிவகாமி இரு கரங்களைக் கூப்பி அந்த மகா புருஷரைக் கும்பிட்டாள்.

"நீ மகராஜியாய் இருக்க வேணும், குழந்தாய்!" என்று வாகீசப் பெருமான் ஆசி கூறினார்.

அந்த ஆசியைக் கேட்ட சிவகாமியின் பவள நிற இதழ்களில் புன்னகையின் ரேகை தோன்றியது. அது தாமரை மலர்கள் நிறைந்த தடாகத்தில் செவ்வாம்பல் பூவானது வெட்கத்தினால் தயங்கித் தயங்கி மடல் அவிழ்வதுபோல் இருந்தது.

பின்னர் அவளுடைய கருவிழிகள் இரண்டும் எதையோ தேடுவதைப் போல் அங்கு மிங்கும் அலைந்து, கடைசியில் குமாரச் சக்கரவர்த்தியின் திருமுகத்தைப் பார்த்ததும் அங்கேயே தங்கிவிட்டன.


"அடிகள் எனக்குக் கூறிய ஆசி மொழி தங்கள் செவியில் விழுந்ததா?" என்று அக்கண்கள் மாமல்லரைக் கேட்டதுடன், அவருடைய குற்றங்களையெல்லாம் மறந்து மீண்டும் அவருடன் சிநேகமா யிருக்கச் சித்தமாயிருப்பதையும் தெரியப்படுத்தின.

மறுபடியும் நாவுக்கரசரின் திருக்குரல் கேட்கவே சிவகாமி பூரண சுய உணர்வு வந்தவளாய், சட்டென்று எழுந்து நின்றாள். இவ்வளவு பேருக்கு நடுவில் தான் மூர்ச்சையாகி விழுந்ததை எண்ண அவளுக்குப் பெரிதும் வெட்கமா யிருந்தது.

வாகீசர் கூறினார்: "ஆயனரே! பரதக் கலையின் சிறப்பைக் குறித்து நான் படித்தும் கேட்டும் அறிந்திருக்கிறேன். ஆனால் அதனுடைய பூரண மகிமையையும் இன்றுதான் அறிந்தேன். என்னுடைய வாக்கிலே வந்த பாடலில் இவ்வளவு அநுபவமும் இவ்வளவு உணர்ச்சியும் உண்டென்பதை இதற்கு முன்னால் நான் அறியவில்லை. தங்கள் குமாரியினால் பரத சாஸ்திரமே பெருமையடையப் போகிறது. உண்மையாகவே அது தெய்வக் கலையாகப் போகிறது. தில்லைப் பொன்னம்பலத்தில் திருநடனம் புரியும் இறைவனுக்கே அர்ப்பணமாக வேண்டிய அற்புதக் கலை இது...!"

இவ்விதம் சுவாமிகளின் திருவாயிலிருந்து வெளியான அருள் மொழிகளை அனைவரும் ஆவலுடன் பருகிக்கொண்டிருந்த சமயத்தில் வீதியில் குதிரையொன்று விரைவாக வரும் சத்தம் கேட்டது. அந்தச் சத்தம் மடத்தின் வாசலில் வந்து நின்றது. உடனே குமார சக்கரவர்த்தி மடத்தின் வாசற்படியை நோக்கிச் சென்றார்.

வாகீசர் அங்கே சூழ்ந்து நின்றவர்களைப் பார்த்து, "நீங்களும் போகலாம்" என்று சமிக்ஞையால் கூற, எல்லோரும் தயக்கத்துடன் அங்கிருந்து கலைந்து சென்றார்கள்.



மாமல்லர் வாசற்படியின் அருகில் நின்று ஏவலாளன் ஒருவனுடன் ஏதோ பேசிவிட்டு, உள்ளே வந்தார். நாவுக்கரசரை நோக்கிக் கைகூப்பி, "சுவாமி! மதுரையிலிருந்து தூதர்கள் ஏதோ அவசரச் செய்தியுடன் வந்திருக்கிறார்களாம். நான் விடைபெற்றுக் கொள்கிறேன்" என்றார்.

"அப்படியே, குமார சக்கரவர்த்தி! தந்தைக்குச் செய்தி அனுப்பினால், அவருடைய அபிப்பிராயப்படியே நான் தென் தேசத்துக்கு யாத்திரை போவதாகத் தெரியப்படுத்த வேணும்" என்றார்.

"ஆகட்டும், சுவாமி!" என்று மாமல்லர் கூறி, ஆயனரைப் பார்த்து, "சிற்பியாரே! துறைமுகம் போய்ச்


மணமும், சுவையும் சொல்கிறதே!
இது நரசுஸ் காபி என்று!
நினைவிருக்கட்டும்!
"தெர்மலோ" முறையில் தயாரிக்கப்படும்
ஒரே காபி - நரசுஸ் காபி!
நரசுஸ் காபி கம்பெனி
சேலம்-7
கிளைகள்: பாண்டிச்சேரி, தமிழகமெங்கும்.

சேர்ந்ததும், சிவகாமியின் சௌக்கியத்தைப் பற்றிச் செய்தி அனுப்புங்கள். சில காரணங்களினால் நான் கொஞ்ச காலத்துக்குக் காஞ்சியைவிட்டு வெளிக் கிளம்ப முடியாமலிருக்கிறது'' என்றார்.

இவ்விதம் பேசி வருகையில் மாமல்லர் அடிக்கடி சிவகாமியை நோக்கி, அவளிடம் நயன பாஷையினால் விடைபெற்றுக் கொள்ள விரும்பினார். ஆனால், சிவகாமியோ ஆயனரின் பின்னால் குனிந்த தலை நிமிராமல் நின்று கொண்டிருந்தாள்.

எனவே, சிவகாமியிடம் சொல்லிக் கொள்ளாமலே மாமல்லர் புறப்பட வேண்டியதாயிற்று. போகும்போது, நாவுக்கரசர் பெருமான் அங்கிருப்பதைக்கூட அவர் மறந்து, 'தட்', 'தட்' என்று அடி வைத்து நடந்து சென்றதானது, ஆத்திரங் கொண்ட அவருடைய மன நிலையை நன்கு பிரதிபலித்தது.

சற்று நேரத்துக்கெல்லாம் வாசலில் குதிரைகளின் காலடிச் சத்தமும், ரதத்தின் சக்கரங்கள் 'கடகட'வென்று உருண்டோடும் சத்தமும் கேட்டன.

சிவகாமிக்கு அப்போது தன் உயிரானது தன்னிடம் சொல்லிக் கொள்ளாமல் வெளியில் சென்று ரதத்தின் மேல் ஏறிக் கொண்டு செல்வதுபோல் தோன்றியது.

நாவுக்கரசரிடம் முடிவாக விடை பெற்றுக் கொண்டு, ஆயனரும் சிவகாமியும் புறப்பட வேண்டிய நேரம் வந்தபோது, பெருமான் ஆயனருக்குச் சமிக்ஞை செய்து அவரைப் பின்னால் நிறுத்தினார். முன்னால் சென்ற சிவகாமியின் காதில் விழாதபடி மெல்லிய குரலில் பின்வருமாறு கூறினார் :

''ஆயனரே! உமது புதல்விக்குக் கிடைத்திருக்கும் கலை அற்புதக் கலை; தெய்விகக் கலை. அதனாலேயே அவளைக் குறித்து என் மனத்தில் கவலை உண்டாகிறது. இத்தகைய அபூர்வமான மேதா விலாசத்தை இறைவன் யாருக்கு அருளுகிறாரோ, அவர்களைக் கடுமையான சோதனைகளுக்கு உள்ளாக்குவதும் உண்டு. உமக்குத்தான் தெரியுமே? இந்த எளியேனை ஆட்கொள்வதற்கு முன்னால் இறைவன் எத்தனை எத்தனை சோதனைகளுக்கெல்லாம் ஆளாக்கினார்?''

சற்று முன்பு வரையில் ஆனந்த வெள்ளத்தில் மூழ்கியிருந்த ஆயனர் மேற்கூறிய மொழிகளைக் கேட்டுத் தலையில் இடி விழுந்தவர்போல் பதறி, ''சுவாமி! இதென்ன சொல்கிறீர்கள்? மகாபுருஷராகிய தாங்கள் எங்கே? அறியாப் பெண்ணாகிய சிவகாமி எங்கே? அவளுக்கு ஏன் சோதனைகள் வரவேண்டும்? தங்களுடைய திருவாக்கில் இப்படி வந்துவிட்டதே!'' என்றார்.

''ஆயனரே! இரைந்து பேச வேண்டாம். சிவகாமிக்கு இது தெரிய வேண்டியதில்லை. ஆனால் நீர் முன் ஜாக்கிரதையாக இருப்பது நலம். உமது அருமைக் குமாரியைப் பார்க்கும்போது அவளுக்கு ஏதோ பெரிய துக்கம் நேரப் போகிறது என்று என் உள்ளம் சொல்கிறது. ஆஹா! இத்தகைய வருங்கால திருஷ்டியை இறைவன் எதற்காக எனக்கு அளித்தார்?'' என்று கூறி வருகையில் நாவுக்கரசரின் கண்களில் கண்ணீர் மல்கிற்று.

''ஆனாலும் நீர் தைரியமாக இருக்க வேண்டும். இந்த உலகில் பணி செய்து



கிடப்பதே நமது கடன். நம்மைத் தாங்கும் கடன் கருணை வடிவான இறைவனுடையது. உமது பணியைச் செய்து கொண்டு நீர் நிம்மதியாக இரும். எத்தனை சோதனைகள் நேர்ந்தாலும் மனம் கலங்க வேண்டாம். அன்பர்களுக்கு முதலில் எவ்வளவு துன்பங்களை அளித்தாலும் முடிவில் இறைவன் ஆட்கொள்வார்.''

இவ்விதம் கூறிவிட்டு நாவுக்கரசர் பெருமான் மடத்துக்குள்ளே சென்றார். அன்று மாலை அந்தத் திருமடத்துக்குள்ளே உள்ளம் நிறைந்த குதூகலத்துடன் பிரவேசித்த ஆயனச் சிற்பியாரோ, இப்போது இதயத்திலே பெரியதொரு பாரத்துடன் வெளியேறினார். அபூர்வமான வேலைப்பாடுகளுடன் அவர் சிலைவடிவமாக்கிக் கொண்டிருந்த பெரிய பாறுங்கல்லைத் தூக்கி அவருடைய இதயத்தின் மேலே யாரோ வைத்துவிட்டது போலிருந்தது. (தொடரும்)

கல்கியின் முதல் நாவல்!



“கள்வனின் காதலி.”

இதுதான் கல்கியின் முதல் நாவல் என்று பலரும் நினைக்கக்கூடும். ஆனால் இது அல்ல. “விமலா” என்பதுதான் அவருடைய முதல் நாவல். ‘கள்வனின் காதலி’ ஆனந்த விகடனில் ஒரு தொடர்கதையாய் வந்ததற்குப் பதினேந்து ஆண்டுகளுக்கு முன்னுலேயே தமது முதல் நாவலை எழுதிவிட்டார் கல்கி. எவ்வளவோ தேடியும் அந்த நாவலின் ஓர் அத்தியாயங்கூட இப்போது அகப்படவில்லை என்றாலும், அது பற்றிய விவரங்கள் சில அவருடைய சொற்கள் மூலமே தெரியவந்துள்ளன:

“1922ஆம் ஆண்டில் கடலூர்ச் சிறையில் மிகச் சிறு வயதில் ஒரு வருஷம் நான் கழிக்க நேர்ந்தது. அப்போது அச் சிறையில் அரசியல் கைதிகள் மட்டும் திரட்டி வைக்கப் பட்டிருந்தார்கள். சிறை முழுதும் ஒரே படிப்பும் எழுத்துப் பிரசங்கமுமாய் இருந்தது. அந்தச் சூழ்நிலையானது என்னை எழுத்துத் துறையில் ஏவியது. ‘விமலா’ என்று ஒரு நீண்ட கதை — குட்டி நாவல் — எழுதினேன். ஒத்துழையாமை செய்து கலாசாலையை விட்ட இளைஞன் ஒருவனைக் கதாநாயகனுகக் கொண்ட கதை.”

கல்கியின் அந்த முதல் இலக்கியப் படைப்பை வெளியிடும் பெருமை, தமிழ் நாட்டின் முதல் எழுத்தாளர் என்றும், எழுத்தாளரில் முதல்வர் என்றும் பின்னர் கல்கி புகழ்ந்த வ.ரா.வுக்கு வாய்த்தது. வ.ரா.வை ஆசிரியராய்க் கொண்ட ‘சுதந்திரன்’ பத்திரிகையில் தமது முதல் கதையை முதல் முதலாக அச்சிலே கண்டது கல்கிக்கு ஓர் அபூர்வமான, ஆனந்தமான அனுபவம். வ.ரா அப்போது தமக்கு அளித்த உற்சாகம் தம்மை எழுத்துத் துறையில் ஊக்கியது என்று கல்கி நன்றி பாராட்டிச் சொல்லிக் கொண்டே இருந்தார்:

“வீரர், கலைஞர், எழுத்தாளர் ஆகியவர்களை அவ்வப்போது உற்சாகப்படுத்த யாராவது வேண்டும். வீரத்தையும் கலைத் திறனையும் இலக்கிய ஆற்றலையும் உற்சாகப்படுத்துவதன் மூலம் ஒன்றுக்குப் பத்தாகப் பெருக்கலாம். இதற்குச் சிறந்த உதாரணம் இராமாயணத்தில் இருக்கிறது. இலங்கைக்குப் போய்ச் சீதையைக் காணச் சமுத்திரத்தைத் தாண்டியாக வேண்டும் என்ற அவசியம் ஏற்பட்ட போது, பல வானரர்கள் தத்தம் ஆற்றலைப் பற்றிப் பேசினார்கள். ஆனாலும் அனுமார் அடக்கத்துடன் சும்மா இருந்தார். அவருடைய சக்தியை நன்கு உணர்ந்திருந்த ஜாம்பவான் முன் வந்து அனுமார் எத்தகைய பேராற்றல் படைத்தவர் என்பதை எடுத்துச் சொன்னார். சொல்லச் சொல்ல அனுமாருக்கு உற்சாகம் வளர்ந்தது; அவருடைய உருவமும் வளர்ந்து வந்து கடைசியில் விசுவரூபம் ஆயிற்று. அவ்வளவுதான்! கடலை எளிதில் கடந்தார். சீதையைச் சந்தித்துப் பேசியதோடல்லாமல் இலங்கையையும் இராவணனுதிகளின் உள்ளத்தையும் ஒரு கலக்குக் கலக்கிவிட்டுத் திரும்பினார்.

“இப்படி உற்சாகப்படுத்துவது வீரக் கலைக்கு வேண்டியிருப்பது போல் எழுத்துக் கலைக்கும் வேண்டியிருக்கிறது. உண்மையான எழுத்துத் திறன் இருந்தால் உற்சாகப்படுத்துவதனுல் அது சுடர்விட்டுப் பிரகாசிக்கும். வித்துவான்களும் புலவர்களும் கலைஞர்களும் இராஜ சபைகளைத் தேடிச் சென்றது பணச் சன்மானத்தை மட்டும் கருதியல்ல. பணத்தைத் திருணமாகக் கருதிய புலவர்களும் இராஜ சபைகளுக்குச் சென்றார்கள். சன்மானத்தைக் காட்டிலும் சபையின் பாராட்டுதலை முன்னிட்டே அவர்கள் சென்றார்கள்.

“அனுமாருக்கு ஜாம்பவான் செய்த தொண்டை, ஆசிரியர் வ.ரா. பல தமிழ் எழுத்தாளர்களுக்குச் செய்திருக்கிறார். அத்தகைய உதவி பெற்றவர்களில் நானும் ஒருவன்.”

மேலே உள்ள செய்திகளும் மேற்கோள்களும், 1948ல் வெளியான வ. ரா. மணி மலரில் கல்கி எழுதிய கட்டுரை ஒன்றில் உள்ளன. மற்றும் பல வேறு வெளியீடுகளிலும் தம்மைப் பற்றித் தாமே நிறைய எழுதியுள்ளார் கல்கி; தமது எழுத்தைப் பற்றி மட்டும் அல்லாமல் தமது வாழ்க்கையைப் பற்றியும் எழுதியுள்ளார். நான் தொகுத்துக் கொண்டிருக்கும் அவருடைய வாழ்க்கை வரலாற்றில், இவ்வாறு தம்மைப் பற்றி அவர் கூறியுள்ளவை, சுய வரலாற்றுச் செய்திகளாய்க் கணிசமாய் இடம் பெற்றிருக்கும்.

கல்கியின் வரலாற்றை எழுதும் பொறுப்பினை நான் மேற்கொண்டு பதினெட்டு மாதங்கள் ஆகின்றன. என் பணியில் எனக்கு ஊக்கமும் உற்சாகமும் அளிக்கவல்ல

படம் : கல்கி பேசுகிறார். மேடையிலிருந்தபடியே சொற்பொழிவை ரசிப்பவர்கள் திருவாளர்கள் வாசன், டி. பி., ராஜாஜி, திருப்புகழ்மணி.

தாய், நான் எதிர்பார்த்ததற்கு அதிகமாகவே அரிய பல தகவல்கள், என் முயற்சியாலும் கல்கியின் உறவினர்கள் நண்பர்களின் உதவியினாலும் கிடைத்துள்ளன. எல்லாவற்றையும் இசைத்துச் சேர்த்து, அமரர் கல்கியின் நினைவு நாளான டிசம்பர் ஐந்தாம் தேதியை யொட்டி வெளியாகும் இந்த இதழிலேயே, அவருடைய வரலாற்றைத் தொடங்கலாம் என எண்ணி யிருந்தேன். ஆனால் இந்த எண்ணம் ஈடேற முடியாதபடி நான் நோயுற்று என் வேலையை நிறுத்தி வைக்கும்படி ஆயிற்று. இன்னும் சில மாதங்களில் என் பணி நிறைவுபெறும் என்று நம்புகிறேன்.

அரசினர் மருத்துவ மனையில் நான் சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்தபோது, கல்கியின் குமாரர் ராஜேந்திரன் அவ்வப்போது என்னைப் பார்க்க வந்து உதவிகள் செய்தும் தைரியம் ஊட்டியும் வந்தார். ஒரு நாள் அவர் பேச்சுவாக்கில், நான் படுத்துக் கொண்டிருந்த வார்டுக்கு நேர் எதிரேயுள்ள மாடியில் தான் தமது தந்தையார் பத்து நாட்கள் தங்கியிருந்து வைத்தியப் பரிசோதனை செய்து கொண்டார் என்பதை என்னிடம் தெரிவித்தார். அதைக் கேட்டதும் என் சிந்தனை கல்கியின் தீராத நோயுள்ள நிலையைச் சுற்றிச் சுழன்றது. இளமைப் பருவம் முதலே கல்கியை அடுத்தடுத்து வியாதிகள் படுத்தி வைத்தன. கற்பனைச் செல்வத்தை நிறையக் கொண்டிருந்த அவர், நோயற்ற வாழ்வு என்ற குறைவற்ற செல்வத்தைக் கொண்டிருக்கவில்லை. ஆனாலும் ஒருபோதும் அவர் தம் உடலைப் பாதித்த வேதனைகள் உள்ளத்தைப் பாதிக்கும்படி விடவில்லை. நோய்களுடன் போராடிக் கொண்டே ஓடி ஆடிச் செயல் புரிந்தார்; ஓயாமல் பேனாவை ஓடவிட்டார். ஒரு வித ரஸவாத சக்தியினால் நோயின் வேதனையைக்கூட இலக்கியப் படைப்பாற்றலாக மாற்றிக் கொண்டார். "மனவேதனையைப் போலவே உடல் வேதனையும் படைப்புச் சக்திக்குத் தூண்டுதலாய் இருக்கக் கூடும்" என்று, கிறிஸ்டோபர் டெரிக் என்ற அறிஞர் சொன்னது, கல்கியின் விஷயத்தில் உண்மையாய் இருந்தது.

அந்த மருத்துவ மனையின் மாடி அறையில் இருந்து கொண்டே, தமது கடைசி நாவலான "அமர தாரா"வின் அத்தியாயம் ஒன்றைக் கல்கி எழுதினார்; "மயில்விழி மான்" என்ற நெடிய சிறு கதையையும் 1954 தீபாவளி மலருக்கென எழுதினார்.

"செம்மையான உடலில் செம்மையான மனம்" என்ற ஆங்கிலப் பழமொழிக்கு மாறாகக் கல்கி, செம்மையற்ற உடம்பிலே செம்மையான மனத்தைக் கொண்டிருந்தார். இலக்கியப் படைப்பு, பத்திரிகைத் தொழில், தேசத் தொண்டு, பொதுப் பணி, சமூக சீர்திருத்தம் முதலிய துறைகளில் அவர் புரிந்த சாதனைகளுக்கு இந்த மனச் செம்மையே அடிப்படை.

அவருடைய வரலாற்றை எழுதுவதில் ஈடுபட்டுள்ள எனக்கு, அவருடைய மனச் செம்மையில் சிறிதளவாவது வாய்க்குமாறு வேண்டுகிறேன்.

— சுந்தா




ஆசீர்வதிக்கிறார்!

புதுதில்லியில் நாட்டிய கலாலயம் மாணவி குமாரி மதுமதியின் பரத நாட்டிய அரங்கேற்றம் அண்மையில் மிகச் சிறப்பாக நடந்தேறியது. திரு சி. சுப்பிரமணியம் தலைமை வகித்துச் சிறுமியை ஆசீர்வதித்தார். குமாரி மதுமதி திரு ராம்ஜி அவர்களின் புதல்வியும் ஸ்ரீ டி. ஆர். வேங்கடராம சாஸ்திரியின் கொள்ளுப் பேத்தியுமாவாள். சிறுமி மதுமதி நாட்டியக் கலையில் பல சிறப்புகளைப் பெற வாழ்த்துகிறோம்.

துள்ளிக் குதிக்கிறார்!

ஹென்றி ஸ்பெக்கர் என்னும் இந்த அறுபத்து ஐந்து வயதுக் கிழவரின் இருதயம் ஒழுங்காக வேலை செய்ய இவர் மார்பினுள் மின்னணுக் கருவி ஒன்று இருக்கிறது. இருந்தும் ஏரி, கடல் முதலிய நீர் நிலைகளின்மேல் சறுக்கி விளையாடும் பழக்கத்தை இவர் மறக்கவில்லை. இவர் ஒரு பெரிய பட்டத்தின் உதவியால் நீர் நிலைக்குமேல் துள்ளிப் பறப்பதை இங்கு காண்கிறோம். இவரைப்போல் கிட்டத்தட்ட ஒரு லட்சம் அமெரிக்கர்கள் இருதயத் துடிப்பு சரியாக இருக்க மின்னணுக் கருவி பொருத்திக் கொண்டுள்ளனர்.



உள்ளம் கவர் கள்வன்!®

உள்ளம் கவர் கள்வன்!

இவருக்குக் கவலையில்லை...

இவருக்குக் கிடைத்துவிட்டன

விமல்

தரும் துணிகள்

விமல், உங்களுக்கு எப்போதுமே புத்தம்புதிய
துணிகளை வழங்குகின்றனர். இணையற்ற புடவைகள்—
மனதைக் கொள்ளை கொள்ளும் இலேசான,
குளுமை தரும் மென்மையான புடவைகள்.

பாஷன் உலகில் பிரபலமான
உடுப்புத் துணிகளும் உள்ளன.
அற்புதமானவை! மனங் கவருபவை. கவர்ச்சியான
தோற்றத்துக்கு உயிரானவை. ஜுக்கார்டு மற்றும்
ப்ளெயின் ஷர்ட்டிங்—டெக்ஸ்லீன் கொண்டு
தயாரிக்கப்பட்ட இந்த சூட்டிங்குகள் உங்கள்
அமைதியான எடுப்பான தனித்தன்மைக்கு
அழகூட்டுகின்றன. ஊலன் மற்றும் கிட்டெட்
ஸ்ட்ரெச் சூட்டிங்குகள் 100%
டெக்ஸ்சரைஸ்டு பாலியெஸ்டர்.

எப்போதும் கவர்ச்சியான
துணிகளுக்காக...



VIMAL®
A RELIANCE PRODUCT

Texlene

100% டெக்ஸ்சரைஸ்டு
பாலியெஸ்டர் சூட்டிங்குகள்
ஊலன் மற்றும் நிட்டெட்
(ஸ்ட்ரெச்)

C.P.AdS-VF

'Vimal' is registered trademark of Reliance Textile Industries Pvt. Ltd. Ahmedabad.





ஆசையைத் துறக்கவில்லை; சேவைக்குச் சளைக்கவில்லை!

நம் மக்களிடையே நிலவும் வறுமையும், அறியாமையும், பிணியும், வேலையில்லாத் திண்டாட்டமும் பிரெஞ்சுக்காரர் ஒருவரின் மனத்தைத் தொட்டது. ஓடோடி வந்துவிட்டார் மைக்கேல் பஸ்ட்ரோஸ்.

பாரதம் முழுதும் சுற்றிப் பார்த்துவிட்டுச் சென்னை வந்து சேர்ந்த பஸ்ட்ரோஸ், தமிழ் நாட்டில் தாம் ஓர் இலட்சியக் குடியிருப்பு நகரினை உருவாக்க விரும்புவதாகவும் அதற்கென சுமார் 2000 ஏக்கர் நிலம் நீண்ட காலக் குத்தகைக்கு ஒதுக்கப்பட வேண்டுமெனவும் பாரதப் பிரதமருக்கு எழுதினாராம். மத்திய அரசு பரிந்துரைத்ததன் பேரில் தமிழ்நாடு அரசு திருவண்ணாமலை அருகில் புதிய நகரமைப்புக்கு இடம் ஒதுக்க இசைந்துள்ளது. 'ஓமோரியாபூர்' என்னும் பெயரில் உருவாக விருக்கும் இக்குடியிருப்பில் நவீன வசதிகள் அமைந்த மருத்துவமனைகள், பள்ளிகள், கல்லூரிகள், வர்த்தக நிறுவனங்கள், தொழிற் கூடங்கள், அநாதைகள், அங்கஹீனர்களின் நல்வாழ்வுக்கான வசதிகள், விஞ்ஞான ஆய்வுக் கூடங்கள், கலைக் கூடங்கள், சமூகப் பணி மன்றங்கள் — இவை யனைத்தும் இடம் பெறும். உழைத்து வாழ விரும்பாதவர்களுக்கும் பிச்சைக்காரர்களுக்கும் மட்டும் கண்டிப்பாக இடமிராது!

''அது சரி, 'ஓமோரியாபூர்' என்று இந்நகருக்கு நீங்கள் பெயர் சூட்டக் காரணம் என்ன?'' என்று திரு மைக்கேலிடம் கேட்கிறேன்.

மைக்கேல் விளக்குகிறார்: 'ஓம்' என்பது பிரணவம். 'மௌரிய' சகாப்தம் பாரதத்தின் வரலாற்றிலே சிறப்பாக இடம் பெறுகிறது. இவ்விரு சொற்களையும் இணைத்து இப் பெயரினைச் சூட்டினேன். சென்னை நகரிலேயே 'ஓமோரியாபூர்–2' என்ற பெயரில் ஒரு வான் முட்டும் கட்டடம் எழுப்பி அதில் இத்திட்டத்துக்கான பல்வேறு நிருவாக அலுவலகங்கள் இயங்கவும், 'ஓமோரியாபூர்–1'ல் உள்ள கல்வி முதலிய வசதிகளை இங்கும் அளிக்கவும் திட்டமிட்டிருக்கிறேன். இப்போதைக்கு இரு குடிசைப் பகுதிகளை 'தத்து' எடுத்துக் கொண்டு அவற்றின் சீரமைப்புக்கான பணிகளைத் தொடங்க ஏற்பாடு செய்துவருகிறேன்."

''வேறு என்ன பணிகளை நிறைவேற்ற உத்தேசித்திருக்கிறீர்கள்?''

''ஏழை எளிய மக்களுக்கு ஆடைகள் வழங்கும் பொருட்டு, சில அன்பர்கள் வீடு வீடாகச் சென்று பழைய துணிமணிகளைச் சேகரிக்கும் பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள். விடுமுறை நாட்களில் இதற்கென இரண்டு மூன்று மணி நேரத்தை ஒதுக்கி துணிமணிகளைச் சேகரிக்கிறார்கள். சேரி வாழ் மக்களுக்கு நோய் கண்டால் நிவாரணம் அளிக்கும் பொருட்டு டாக்டர்களின் பகுதி நேர ஒத்துழைப்பை நாடுகிறோம். எத்தனை டன்கள் வேண்டுமானாலும் மருந்துகள் இலவசமாக வழங்க பெல்ஜியம் முதலிய நாடுகளிலுள்ள சில நிறுவனங்கள் தயாராகவுள்ளன. அவ்விதம் அனுப்பி வைக்கப்



மைக்கேல் பஸ்ட்ரோஸ்

படும் மருந்துகளுக்கு வரி விலக்கு அளிக்குமாறு பாரத அரசாங்கத்தைக் கேட்டு, அனுமதி கிடைத்தவுடன் மருந்துகளைத் தருவிக்கத் தீர்மானித்திருக்கிறேன். புரதச் சத்துள்ள உணவுப் பொருட்களை அடக்க விலைக்கு வாங்கி ஏழைகளுக்கு விநியோகம் செய்வது இன்னொரு பணி. இந்திய உணவு டெக்னாலஜி நிறுவனத்துடன் இது குறித்துத் தொடர்பு கொண்டிருக்கிறேன். படித்த பட்டதாரிகளுக்கும், உடலுறுப்புக்களை இழந்தவர்களுக்கும் வேலை வாய்ப்பு அளித்தல்... இப்படிப் பல.''

''இதையெல்லாம் நிறைவேற்ற மிகுதியாகப் பொருள் தேவைப்படுமே?'' என்ற என் ஐயத்தை வெளியிட்டதும் திரு மைக்கேல், ''பணம் தேடுவது அப்படி யொன்றும் பிரமாதமான காரியமில்லை! கணிசமான உதவி இங்கேயே கிடைக்கும். பிரான்ஸ், பெல்ஜியம் முதலிய நாடுகளிலிருந்தும் எனக்குப் பொருளுதவி கிடைக்கும். ஏன், இதுவரை என் சொந்தப் பணத்திலிருந்தே முப்பதாயிரம் ரூபாய் செலவழித்திருக்கிறேன். அது ஒன்றும் பெரிய தொகை அல்ல! என்னுடைய மூன்று மாதச் சம்பளம்தானே?'' என்கிறார்.

''மூன்று மாதச் சம்பளமா?'' என்று நான் வியப்புடன் திருப்பிக் கேட்கிறேன்.

''ஆமாம். ஒரு மருந்து தயாரிக்கும் பிரெஞ்சுக் கம்பெனியில் நான் ஒரு வட்டாரத்தின் மானேஜராக மாதம் ரூ. 10,000 சம்பளம் வாங்கிக் கொண்டிருந்தேன்....''

''அதை விட்டு விட்டு இங்கே சமூகப் பணி செய்ய வந்து விட்டீர்களா?''

''அது என்ன பெரிய காரியமா? அல்ஜீரியா சுதந்திர தேச உடைமை ஆனபோது என் தந்தைக்குச் சொந்தமாகவிருந்த சுமார் எட்டு கோடி ரூபாய் மதிப்புள்ள நிலம், மற்ற உடைமைகள் ஒரே இரவில் பறிபோயிற்று! வாழ்க்கையில் இவை யெல்லாம் நடைபெறக் கூடியவைதானே? ''

''நீங்கள் இந்தியாவுக்கு வந்து இம்மாதிரி சமூகப் பணிகளில் ஈடுபட வலுவான காரணம் ஏதேனும் இருக்க வேண்டுமே?''

''கரெக்ட்! மூன்று வருடங்களுக்கு முன்பு ஒரு தடவை எனக்கு 'ஹார்ட் அட்டாக்' (இதயக் கோளாறு) வந்தது. மிகக் கடுமையான தாக்குதல். அதிலிருந்து எப்படியோ மீண்டுவிட்டேன். அப்போது எனக்குச் சிகிச்சை செய்த நர்ஸ், 'இவ்வளவு கடுமையான தாக்குதலுக்குப் பிறகு இவர் உயிர் பிழைப்பார் என்று யாருமே நம்பவில்லை' என்று கூறினாள். இன்னொரு குரல் – யாரோ அந்தப் பக்கமாகப் போய்க் கொண்டிருந்த வருடையது – 'யார் கண்டது? இவர் செய்து முடிக்க வேண்டிய காரியம் உலகில் இன்னும் ஏதோ பாக்கி இருக்கிறது போலும்!' என்று ஒலித்தது. ஆஸ்பத்திரியை விட்டு நான் வெளியேறியதும் வேலையை ராஜிநாமா செய்யும்படி நேர்ந்தது. தொடர்ந்து பணியாற்ற உடல் நிலை இடம் தரவில்லை. அவ்வமயம் பிரான்சுக்கு வந்திருந்த இந்தியர் ஒருவரைத் தற்செயலாக நான் சந்திக்க நேர்ந்தது. அவர் என்னிடம் 'சந்தடி மிகுந்த இந்த நகரத்தில் ஏன் நீங்கள் பரபரப்பான வாழ்க்கை நடத்த வேண்டும்? இந்தியாவுக்கு வந்தால் அமைதியான சூழ்நிலையில் நிம்மதியாக வசிக்கலாமே!' என்றார். அவர் குறிப்பிட்ட அமைதியும் நிம்மதியும் என் உள்ளத்துக்கும் உடலுக்கும் தேவையாயிருந்தன. ஒரு பீட்டவிக்கு வந்தேன். எடுத்த காரியம் மெல்ல நிறைவேறினால் சரி. அவசரப்படவில்லை. கலியுகம் முடிய இன்னும் 427 ஆயிரம் வருடங்கள் பாக்கியிருக்கின்றனவே! இன்னமும் இங்கே பல பிறவிகள் எடுத்தாலும் நல்லதுதான்!''

அடையாறு சாஸ்திரி நகரிலுள்ள ஒரு வீட்டின் மாடியில் குடியிருக்கும் திரு மைக்கேல் மாணவர்களுக்கும் வேலையில்லாப் பட்டதாரிகளுக்கும் பிரெஞ்சு மொழியும் சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் இலவசமாகக் கற்றுத் தருகிறார். வலிய வந்து தங்கள் உழைப்பினை நல்கும் படித்த இளைஞர்களின் துணை கொண்டு விரும்பிக் கற்போருக்குக் கணிதத்திலும் ஆங்கில மொழியிலும் இலவசப் பயிற்சிக்கு வசதி செய்துள்ளார். சமஸ்கிருதம், உடற்கூறு, இரசாயனம், வான இயல் ஆகிய பாடங்களிலும் இலவசப் பயிற்சி அளிக்கத் திட்டமிட்டு வருகிறார். வாரம் ஒரு நாள் ஓரிரு மணி நேரம் இத்துறைகளில் இலவசமாகப் பாடம் சொல்லிக் கொடுக்க அவகாசமும் மனமும் உள்ள ஆசிரியர்கள் மைக்கேலின் இம்மகத்தான திட்டத்துக்கு உதவலாம்.

திரு மைக்கேல் தாம் ஆற்ற விரும்பும் அரும் பணிகளுக்கெல்லாம் விரிவாகத் திட்டம் வகுத்துள்ளார். அப்பணிகளின் பட்டியலுக்கே இங்கே இடமில்லை எனில் விளக்குவது எப்படிச் சாத்தியம்?

ஆத்திக உள்ளம் படைத்த இந்த 42 வயது பிரம்மச்சாரி, ஆசைகளைத் துறந்தவரல்ல !– தொண்டாற்றுவதிலே அளப்பரிய மோகம் கொண்டுள்ளவர்தான். பேட்டி: **பரணன்**

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் ரோம தத்துவஞானியும் ராஜதந்திரியுமான சிசிரோ சொன்னார். மனிதனுக்கு ஆறு குறைகள் : 1. மற்றவரை நசுக்குவதால்தான் தான் உயர முடியும் என்ற பேதைமை. 2. மாற்ற முடியாத, திருத்த முடியாதவற்றைப் பற்றிக் கவலைப்பட்டுக்கொண்டிருப்பது. 3. நம்மால் செய்யமுடியாத ஒன்றை வேறு எவராலும் சாதிக்க முடியாது என்று அடித்துப் பேசுவது. 4. அற்ப விஷயங்களில் விட்டுக் கொடுக்காமல் இருப்பது. 5. மனத்தையும் அறிவையும் பக்குவப்படுத்திக் கொள்ளாமல் இருப்பது. 6. நாம் வாழ்வது போலவோ, நம் விருப்பு வெறுப்புப் போலவோ பிறரையும் இருக்கத் தூண்டுவது.

ஆறு குறைகள்

- நம்பி சீனிவாசன்




மகரிஷி

முதல் அத்தியாயம்

ஆளுயரச் சுற்றுச் சுவர். விஸ்தாரமான சமவெளிப் பிரதேசம். நடுவில் அந்தச் சிறிய பங்களா தூரத்தில் வரும் போதே தெரிந்தது. நகரப் புழுக்கங்களை விட்டுத் தள்ளி — அதற்காக முற்றிலும் தனிமை என்று கூற முடியாது— இருந்தது.

டவுன் பஸ்ஸை விட்டு இறங்கினால், இவ்வளவு அருகில் அது இருக்கும் என்று சாந்தா எதிர்பார்க்கவில்லை.

புடவையை இழுத்து விட்டுக் கொண்டு மெதுவாக நடந்தாள்.

இரும்புக் கதவுதான். ஆனால், அது முற்றிலும் பழுதுபட்டதாகக் காணப் பட்டது. இரண்டு கதவுகளும் இரண்டு பக்கங்களிலும் சரிந்து ஒதுங்கி யிருந்தன.

கேட்டைத் தாண்டி உள்ளே நுழைந்தவுடன், சாந்தா தயக்கத்துடன் எதிரே தெரியும் பங்களாவைப் பார்த்த வண்ணம் நின்றாள். மனத்தில் மட்டு மல்ல; நடையிலும் கொஞ்சம் இடம் பெற வேண்டி யிருந்தது.

அது கிடைத்து விட்டது.

நடையில் கொஞ்சம் சுறுசுறுப்பு. சாத்தியிருந்த பங்களா வாசற் கதவின் அருகில் போய் நின்றாள்.

உள்ளே நிலவிய நிசப்தத்துக்கும், மூடப்பட்டிருந்த கதவுக்கும் அதிக ஒற்றுமை இருப்பதாய்த் தோன்றியது அவளுக்கு.

நிலைஓரத்தில், 'காலிங்பெல்' லுக்கான பழுப்பேறிய, ஒரு காலத்தில் வெண்மையாக இருந்திருக்க வேண்டிய 'பட்டன்'.

பட்டனை அழுத்தினாள்.

உள்ளே எங்கோ மணி ஒலிக்கும் மெல்லிய ஓசை.

சில கணங்கள் அமைதி நிலவியது.

கதவருகில் உட்பக்கம் காலடி ஓசை.

கதவு திறந்து கொண்டது.

''வாம்மா!...சாந்தாதானே நீ...?'' கதவைத் திறந்து கொண்டு நின்ற மாது கேட்டுக்கொண்டே திரும்பி நடந்தாள்.

சாந்தா உள்ளே அடியெடுத்து வைத்து விட்டுக் கதவை மீண்டும் சாத்தித் தாழிட்டுத் திரும்பும்போது, மதுராம்பிகை ஹாலைக் கடந்து கொண்டிருந்தாள்.

வேகமான நடைதான்.

வலப்பக்கம் உள்ள ஓர் அறைக்குள் சென்ற மதுராம்பிகையைத் தொடரத் தயங்கியவள் ஹாலிலேயே நின்று விட்டாள்.

உள்ளே சென்ற மதுராம்பிகை வெளியே வந்தபோது சாந்தா முன் ஹாலில் நிற்பதைப் பார்த்து விட்டு, ''உட்கார். இதோ வந்து விடுகிறேன். கொஞ்சம் வேலை இருக்கு.... அதை முடித்து விட்டு வந்து விடுகிறேன். பத்தே நிமிஷம்'' என்றாள்.

ஹாலில் இருந்த பழைய சோபா ஒன்றில் சாந்தா அமர்ந்தாள். முன்னேயிருந்த மர டீப்பாயின் மேல் அவ்வாரத்திய ஆங்கில, தமிழ், மலையாள சினிமா சஞ்சிகைகள் நிறையக் கிடந்தன. ஒரேயொரு ஆங்கிலச் செய்தித்தாள். உடைபட்ட சில கவர்கள். ஹாலில் நிறையப் புகைப்படங்கள் கண்ணாடி பிரேம் போட்டு மாட்டப் பட்டிருந்தன. சில நுண்கலைப் பொருள்கள், மான் கொம்பு, புலி நகம், யானைத் தந்தத்துடன் 'செஸ்ட் ஆஃப் டிராயர்ஸ்'ஸின் மேல் முகம் பார்க்கும் கண்ணாடி. ஒரு பெரிய கண்ணாடி அலமாரிக்குள் பரிசு பெற்ற பொருள்கள். வெள்ளிக் கோப்பை, ஷீல்ட் — தந்த யானை, நாட்டிய உருவில் அமைந்த உலோகப் பொம்மைகள்...

''அட்வொகேட் சந்தானத்தை உனக்கு எப்படித் தெரியும்?'' — கேள்வியுடன் எதிரே வந்து அமர்ந்தாள் மதுராம்பிகா. ''என் வாழ்க்கையில் நிறைய உதவிகள் அவர் செய்திருக்கிறார். அவருடைய பெண்ணுக்கும் பையனுக்கும் நான் ஹிந்திப் பாடம் கற்றுக் கொடுத்துக் கொண்டிருந்தேன்.''

''நீ டீச்சராக இருந்திருக்கிறாயா?''

''இல்லை. நான் எந்த வேலையிலும் இருந்ததில்லை. இந்தி



எனக்குத் தெரியும். பின்னுல் அது பயன் பட்டது.''

உள்ளே சென்று இரண்டு தம்ளர் களில் காப்பி கொண்டுவந்து, டீப்பாயின் மேல் இருந்த சஞ்சிகைகளை அப்படியே கீழே தள்ளிவிட்டு மேலே வைத்தாள் மதுராம்பிகை.

''எடுத்துக்கொள்.''

சாந்தா காப்பி குடித்தாள்.

சாந்தாவின் கணிப்பு: மதுராம் பிகை ஐம்பது வயதைத் தாண்டியிருப் பாள். சதைப் பற்றுள்ள, அகலமான முகம். முகத்தில் இயற்கையான ஓர் அழகுத் தன்மைக்குப் பதில் செயற்கைத் தன்மையான அழகே தெரிந்தது. இத் தனைக்கும் மதுராம்பிகை தன்னை அதிக மாக அலங்கரித்துக் கொள்ளவில்லை. உடலும், கழுத்தும், கைகளும் அலாதி யான சிவப்புடன் தெரிந்தன. வயதுக்கு ஏற்ற உடையல்ல அது. தன் உடல் வாகை மனத்தில்கொண்டு அணிகிற மாதிரியே இருந்தது. இவ்வளவு வய தாகியும் காதில் ஒரு சிறிய வளையம். நெற்றியில் அகலமான பொட்டு. நடக் கும்போது உடம்பு முழுதும் ஓர் அசைவு.

''இப்பொழுது நீ பார்க்கப் போகிற உத்தியோகம்கூட வக்கீல் சந்தானத்தின் ஏற்பாடுதானு?''

''ஆமாம்.''

''இண்டர்வியூ நடந்திருக்குமே!''

''சென்னையில் ஒரு ஹோட்டல் அறையிலேயே நடந்து விட்டது. இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்பே நடந்து விட்டது.''

''என்ன உத்தியோகம்?''

''ஆபீஸ் அஸிஸ்டெண்ட் என்று ஆர்டரில் போட்டிருக்கிருர்கள்.''

''வொண்டர்ஃபுல்... விஷ் யூ ஆல் சக்ஸஸ்'' என்று சொல்லி நகைத்தாள் மதுராம்பிகை.

''சென்னையிலிருந்து பெங்களூர் வந் திருக்கிருய். உன்னுடைய பிற்கால வாழ்க்கைக்கு ஒரு நல்ல உத்தியோகத் தைத் தேடிக் கொள்வது அவசியம் தான் உனது பொறுப்புக்களை நீ நன் ருகவே உணர்ந்திருக்கிருய்.''

மதுராம்பிகா தன் பேச்சில் அதிக மாக ஆங்கில வார்த்தைகளை உப யோகித்தாள்.

சில நிமிஷங்கள் அங்கே அமைதி நிலவியது.



ரேகா



''எனக்குத் தனிமை வாழ்க்கை ரொம்பப் பிடித்து விட்டது. இந்தத் தனிமையைக் கலைக்கிற எதுவும் எனக்குப் பிடிப்பதில்லை : ஷீலாவைப் பற்றிச் சந்தானம் அதிகமாக ஏதும் கூறவில்லை. உன்னுடைய நிலைமையை விளக்கினார். 'அவளை உன் கவனிப்பில் வைத்துக் கொள்ள முடியுமா? அவள் உனக்கு ரொம்ப உதவியாக இருப்பாள். உன் தனிமையை எந்தவிதத்திலும் அவள் கலைக்க மாட்டாள். படித்த பெண்!' என்றார். 'சரி' என்று கூறி விட்டேன். இதோ பார்! இது என்னுடைய சொந்த வீடு. ஸாலிட் பிராபர்ட்டி. யாரும் எவ்வித உரிமையும் கோர முடியாது. நல்ல சௌகரியமான வாழ்க்கை நடத்தும்போது நிறையப் பணம் போட்டுத் தேவையான சௌகரியங்களுடன் கட்டியது. வேலைக்காரி ஒருத்தி இருக்கா.''

''நீங்கள் தவறாக எண்ணாமல் இருந்தால்.....'' சாந்தா அதைச் சொல்லத் தயங்கினாள்.

''பரவாயில்லை; சொல்.''

''நான் ஒரு 'பேயிங் கெஸ்டா'க இருக்க அனுமதித்தால்.... நான் ரொம்பவும் சந்தோஷப்படுவேன்......''

மதுராம்பிகா சிரித்தாள்.

''கெஸ்டாக இரு. பேயிங்கெஸ்டாக வேண்டாம். உன் அலுவலக நேரம் போக மீதி நேரத்தை இங்கே நீ பயனுள்ளதாகச் செய்தால் போதும்..... உனது பெட்டி படுக்கைகள் ஒன்றையும் காணோமே!''

''எல்லாவற்றையும் ரயில்வே பாதுகாப்பில் 'டெபாஸிட்' செய்து விட்டு வந்திருக்கிறேன். பெட்டி, படுக்கையுடன் அலைவது கொஞ்சம் சிரமமாகத் தோன்றியது. சாயங்காலம் போய்த்தான் அவற்றை எடுத்து வர வேண்டும்.''

அவள் எதிர்பார்த்ததைவிட அவள் வேலைக்கு நுழைந்த அலுவலகம் பெரிதாக இருந்தது. வக்கீல் சந்தானத்தின் சிபாரிசுக்கு அங்கே அதிக மதிப்பும், மரியாதையும் இருப்பதை அவளை அவர்கள் வரவேற்ற விதத்திலிருந்தும், அவளிடம் அவர்கள் நடந்து கொண்ட தன்மையிலிருந்தும் தெரிந்து கொண்டாள்.

''சந்தானத்துக்குக் கடிதம் எழுதி விட்டாயா? வந்த இடத்தில் உன்னுடைய வேலை, சூழ்நிலை, இந்த இடத்துச் சௌகரியம், அசௌகரியம் இவைகளை விளக்கி.......''

''வேலை பிடித்திருக்கிறது என்று எழுதி எனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டேன். வந்த இடத்துச் சௌகரியம் அசௌகரியங்களைப் பற்றி எழுத ஒன்றுமே இல்லை. அது அவசியமும் இல்லை.....''

''ஏன் அப்படி ?''

''எனக்கு ஒரு வேலை வேண்டும். கிடைக்கிற சௌகரியங்களை அநுசரித்துக் கொள்ள வேண்டியது என்ற எண்ணத்துடன்தான் புறப்பட்டு வந்தேன். குடிசையைத் தேடித்தான் வந்தேன். ஆனால், எனக்கு அரண்மனையின் கதவு திறந்து விடப்பட்டிருக்கிறது.''

அவள் தோள் பட்டையைப் புன்னகையுடன் பற்றிக் குலுக்கினாள் மதுராம்பிகை.

''காத்தியாயினிக்கு எழுதிவிட்டாயா?.... ஏன் அப்படிப் பார்க்கிறாய்? சந்தானம் எனக்கு எழுதியிருந்தார். இல்லையென்றால் எனக்கு எப்படித் தெரியும் ?''

''அவளுக்குஎழுதவே பிடிக்கவில்லை.''

''ஏன் அவளைக் கண்டால் உனக்குப் பிடிக்காது ?''

''பிடிக்காமலா அவளுடன் இத்தனை வருஷங்கள் சேர்ந்து இருந்தேன்? அவளுடைய 'டெம்பரமெண்ட்' நமக்கு ஒத்து வருவதில்லை. அதோடு, அவளுடைய அளவுக்கு மீறிய கட்டுப்பாடுகள் எனக்குப் பிடிப்பதில்லை.''

''உன் நன்மையை உத்தேசித்து அவள் அப்படிக் கண்டிப்புடன் இருந்திருக்கலாம்.''



சமைத்தல், துவைத்தல், அரைத்தல், இடித்தல்... மாளாத வேலை, தாளாத சோர்வு. நாளெல்லாம் வீடே கதி. வெளி வேலைகளோ அவளுக்கு வெகு தூரம். இதற்கு விடிவு?

நீங்கள் மனது வைத்தால் நடக்கும் க்ளியர்டோன் உதவியோடு. பிரஷ்ஷர் குக்கர், இஸ்திரிப்பெட்டி மிக்ஸர், மின்விசிறி...இதுபோல் பல பல க்ளியர்டோன் சாதனங்கள் உள்ளன. வாங்கிக் கொடுத்துப் பாருங்களேன், டான் டான் என்று வீட்டு வேலைகளை முடித்து விடுவாள். அதிக நேரம் மிச்சம் வெளி வேலைகளுக்கு.


கிட்டத்திலுள்ள க்ளியர்டோன் வியாபாரியிடம் அவளை இட்டுச் சென்று காண்பியுங்கள்: வகை வகையான வீட்டுபயோக சாதனங்கள். பிடித்தமானவற்றை அவள் எடுத்துக் கொள்ளட்டும். அவள் வாழ்வே மாறிவிடும். உங்கள் வாழ்வும்தான்.



தி நேஷனல் ரேடியோ & எலக்ட்ரானிக்ஸ் கோ. லிட். பம்பாய் • கல்கத்தா • டெல்லி • சென்னை

Kleertone
க்ளியர்டோன்
—வீட்டுபயோக சாதனங்களின் படைப்பகம்

Creative Unit-926-*Tam.*



Datturam-TG-19 D

''என்னுடைய நன்மை தீமை எனக்குத் தெரியாதா? அவள் என்னை எடுத்து வளர்த்தாள். தாய் தந்தை இல்லாத குறை தெரியாமல் என்னை அன்புடன் அரவணைத்தாள் என்பதால், அவளுக்குரிய மரியாதையை என்றுமே நான் குறைத்ததில்லை. அதற்காக... எல்லாவற்றுக்கும் ஓர் அளவு வேண்டாமா?''

மதுராம்பிகா நகைத்தாள்.

''காத்தியாயினி நல்லவள் என்பது தான் என் ஊகம். தாய் தந்தையில்லாத உன்னை வளர்த்து ஆளாக்கிக் கொண்டு வரும் பெரிய பொறுப்பை அவள் வெற்றியுடன் நிறைவேற்ற வேண்டியிருந்ததால், அவள் உன்னிடம் கடுமையுடன் நடந்து கொண்டிருக்கலாம் இல்லையா?''

''கண்டிக்கட்டும். வேண்டாம் என்று சொல்லவில்லை. அவளுடைய தலையீடுகள் ஒரு பொதுவான நன்மையை உத்தேசித்து இருந்தால், நான் வரவேற்றிருப்பேன். ஆனால், ரொம்ப அதிகமாகப் போகவேதான் மனக்கிலேசங்கள் அதிகமாகி விட்டன. இதற்காக அவள் வருத்தப்பட்டதாகவே தெரியவில்லை. அவள் வருந்தாதபோது நான் மட்டும் ஏன் வருந்த வேண்டும்?''

''என்றாலும் நீ காத்தியாயினியை அவ்வளவு சுலபமாக ஒதுக்கிவிடக் கூடாது சாந்தா.... அவள் உனக்காக எவ்வளவு பாடுபட்டிருக்கிறாள் தெரியுமா! சந்தானம் எல்லாவற்றையும் கூறியிருக்கிறார். இதை அவர் உன்னிடமும் கூறியிருப்பாரே!''

''இதைச் சந்தானம் என்ன, அவளே அடிக்கடி கூறுவாள். எனக்கும், அவளுக்கும் மனஸ்தாபங்கள் தோன்றி, அது முற்றி, பிறகு முடிவடையும்போது அவள் கண்ணீருடன் இதைச் சொல்வாள்.''

சாந்தா அலுவலகம் புறப்பட்டுவிட்டாள்.

பெரிய அறை அது. அங்கேதான் சாந்தா படுத்துக் கொள்வாள். பெரிய அகலமான கடைசல் கால் கட்டில் பாதி அறையை அடைத்துக் கொண்டு கிடக்கிறது. நேர்த்தியான வேலைப்பாடுகளுடன் அமைந்த சில சோபா, நாற்காலிகள், மேஜைக் கண்ணாடி.

''இதை நீ உன்னுடைய அறையாக உபயோகப்படுத்திக் கொள்ளலாம்... எல்லாச் சௌகரியங்களும் இதிலே உண்டு'' என்று கூறியிருந்தாள் மதுராம்பிகை.

பரபரப்பான சென்னை நகர்ச் சந்து ஒன்றில் சிறிய அறையில், குறைவான வசதிகளுடன் அதையே மன நிறைவுடன் அங்கீகரித்துத் திருப்திப்பட்டுக் கொண்டிருந்ததையும், இங்கே அதற்கு நேர்மாறான சூழ்நிலையில் இருப்பதையும் எண்ணிப் பார்த்தாள் சாந்தா.

அகலமான காம்பவுண்ட். ஓடி விளையாடலாம்போல் பங்களாவின் முன் ஹால். எதிர் எதிரே அறைகள்..... மாடி.... அதற்கு மேல் திறந்தவெளி.

'' இந்தப் பங்களாவில் எப்படித் தான் நீங்கள் தனியாக இருக்கிறீர்களோ!'' என்று வியப்புடன் கேட்டாள் சாந்தா.

''நீரைவிட்டு வெளியே எடுத்துப் போட்டால் மீன் சில விநாடிகளில் துடித்துவிட்டுப் பிறகு இறந்துவிடும். தெரியுமா! அது மாதிரிதான் இந்தத் தனிமையைவிட்டு நான் வெளியே வந்தால் நிச்சயமாகச் செத்துப் போய்விடுவேன். ஒரு காலத்தில் இந்தத் தனிமையை வெறுத்தேன். ஒளிமயமான காலங்கள் அவை. போக வேண்டிய காலம்தான் அவை. அதற்காக நான் ஏக்கப்படவில்லை; துக்கப்படவும் இல்லை. மனிதர்களுக்கும் பருவங்கள் என்பது ஒரு தாற்காலிக வரம்தானே! அது போகிற போது அதற்காக நாம் ஏங்கலாமா! சிலர் ஏங்குகிறார்கள். அவர்கள் அசடுகள் என்பது என் அபிப்பிராயம். அது முடிந்தது. அப்பொழுதேகூட நான் இந்தத் தவத்துக்காக ஏங்கத் தொடங்கி விட்டேன். விடுபட்டு வெளியே வந்தால் போதும் என்று காத்துக் கொண்டிருந்தேன். கிடைத்ததோ இல்லையோ மணி அடித்ததும் பள்ளியைவிட்டுச் சிறுவர்கள் நீ முந்தி, நான் முந்தி என்று வெளியே ஓடி வருவார்களே, அதுபோல வந்து விட்டேன்.''

மதுராம்பிகாவின் இந்த உதாரணத்தைக் கேட்டுச் சாந்தா சிரித்தாள்.

இரவு மணி என்ன என்று யூகிக்க முடியவில்லை. ஓர் அசைப்பில் தூக்கம் விட்டுப் பிறகு பற்றும் இரண்டு நிமிஷ இடைவெளி. முகத்தில் ஏதோ நிழல் விழுவது போன்ற உணர்வு. கண்களைத் திறக்க மனமில்லை. அதோடு, தன் முகத்தை ஸ்பரிசித்துக் கொண்டிருக்கும் கரத்தைக் கண்களை மூடியபடியே தொட்டாள்.

மதுராம்பிகை!

''தூங்கம்மா. நான்தான். நல்ல உடல் அசதி போலிருக்கு. ஏதோ முனகினாய். நான் எழுந்து வந்து பார்த்தேன்......''

சாந்தா தன் கண்களைத் திறந்த போது மதுராம்பிகை போய்க் கொண்டிருந்தாள்.

சென்றுகொண்டிருந்த மதுராம்பிகையையே சில நிமிஷங்கள் பார்த்தாள். அவளுடைய செய்கை அவளுக்கொரு வேடிக்கையாகவும் இருந்தது; புதுமையாகவும் இருந்தது.

பிரதான சாலையிலிருந்து பங்களா ஒதுங்கியிருந்ததால், தூரத்தில் இரவு நேரங்களில் ஓடும் லாரிகளின் ஒலி இலேசாகவே கேட்டது.

நிசப்தத்தை மீறி ஏதேனும் சில நூதன ஒலிகள். மற்றோர் அறையில் புத்தகத்தின் ஏட்டைப் புரட்டும் சத்தம். பீரோவின் கதவைத் திறந்து மூடும் ஒலி.

இரண்டு மூன்று இருமல் ஒலி.

'சாயங்காலம் அலுவலகத்திலிருந்து வரும்போது இதை வாங்கிக் கொண்டு வர முடியுமா! மாத்திரைகள் எல்லாம் தீர்ந்துவிட்டன. இது லோ பிளட் பிரஷருக்கான மாத்திரை... பலவப்பா மெடிக்கல்ஸிலேதான் வாங்கறது வழக்கம்...'' மருந்துச் சீட்டை வாங்கிக் கொள்ளும்போது மதுராம்பிகையின் முகத்தைப் பார்த்தாள் சாந்தா.

இரவு தூங்கவில்லை என்பதை இடுங்கியிருந்த கண்கள் துல்லியமாகக் காட்டின.

மாலையில் அவள் வீடு திரும்பும்போது மதுராம்பிகை தன் அறையில் பிரம்பு நாற்காலியில் அமர்ந்து ஜன்னல் வழியே வெளியே பார்த்துக் கொண்டிருந்தாள். முகம், கண்களெல்லாம் அழுது கொண்டிருந்தன. நெஞ்சை முட்டும் விம்மல்.

''என்ன உடம்புக்கு உங்களுக்கு ?'' என்று கேட்டபடி மாத்திரைகளை மதுராம்பிகையின் முன்னால் நீட்டினாள்.

''உடம்புக்கா? அதுக்கென்ன கேடு!'' என்றவள் அவள் நீட்டிய மாத்திரைகளைப் பெற்றுக் கொண்டே சிரித்தாள்.

அவளுக்கு முன்னால் கட்டிலில் கசங்கிய நிலையில் இரண்டு காகிதப் பந்துகள்.

மூன் தினம் மதுராம்பிகையின் அறையில் கட்டில் அருகில் கசங்கிப் போன நிலையில் கிடந்த இரண்டு காகித உருண்டைகள் வெளியே கொட்டப்பட்ட குப்பைகளுடன் கிடந்தன.

நேற்று மதுராம்பிகை கண்ணீர் விட்டதற்கும், இந்தக் கடிதத்துக்கும் ஏதேனும் தொடர்பு இருக்குமோ !

கீழே குனிந்து குப்பையுடன் குப்பையாகக் கிடந்த இரண்டு வெள்ளைக் காகிதங்களையும் எடுத்தாள். உடனே பிரிக்க அவளுக்கு விருப்பம் இல்லை.

தன் அறைக்கு வந்தாள். வரும்போது மதுராம்பிகை தன் அறையில் படுத்திருப்பதைக் கவனித்தாள். பரபரப்புடன் அந்தக் காகிதங்களைப் பிரித்தாள். ஒரு கடிதத்தின் கிழிபட்ட இரண்டு துண்டுகள் அவை.

'பாஸ்கரன் வருகிறான். அவனுக்கு உடனடியாக இரண்டாயிரம் ரூபாய் தேவைப்படுகிறதாம். அவன் வேலைக்குச் சேரப் போயிருந்த இடத்தில் இரண்டாயிரம் ரூபாய் முன் பணம் கட்ட வேண்டும் என்கிறார்களாம். பெரிய மின்சாரச் சாமான் விநியோகக் கம்பெனியில் ஸ்டோர்கீப்பர் உத்தியோகம். இது அவனுடைய அவசியத் தேவை மட்டுமல்ல. இதில் உன்னுடைய கடமை ஒன்று இருக்கிறது. அதையும் மறந்து விட மாட்டாய் என நினைக்கிறேன்.'

கிழிபட்ட இரண்டு துண்டுக் காகிதங்களையும் சேர்த்து வைத்துப் படித்தபோது, இந்த விவரங்கள் அதில் இருந்தன. முடிவில், கையெழுத்து ஆங்கிலத்தில் அவ்வளவு எளிதில் தெரிந்து கொள்ள முடியாமல் இருந்தது. அந்தக் கையெழுத்து மதுராம்பிகைக்குப் பழக்கப்பட்டதாக இருக்கலாம். அந்தக் கிறுக்கலிலிருந்து முதல் இரண்டு மூன்று எழுத்துக்களை வைத்துக் கொண்டு யூகிக்கும்போது, பரமேசுவரன் என்று பெயரைக் கண்டுபிடித்தாள்.

யார் இந்தப் பரமேசுவரன்? இந்தக் கடிதம் கொண்டு வந்த பாஸ்கரன் யார் ?

''இரண்டு நாட்களாக நீங்கள் சரியாகவே சாப்பிடவில்லை. இரவில் அதிக நேரம் கண் விழிக்கிறீர்கள். என் மனக்குக் கொஞ்சம் கஷ்டமாக இருக்கிறது.....''

மதுராம்பிகையின் கட்டில் அருகில் தயக்கத்துடன் வந்து நின்றாள் சாந்தா.

''உட்கார்....'' என்று கூறி, நீட்டிக் கொண்டிருந்த கால்களைச் சற்றே நகர்த்திக் கொண்டாள்.

''எனக்கு வாழ்க்கையில் சில பந்தங்கள் உண்டு. பந்தங்கள் என்றால் சட்ட ரீதியில் என்னை வெட்டிக்கொண்டு போய்விட்ட பின்பும் என்னைத் தொடரும் பந்தங்கள். அவை என்னையொரு தண்டனைபோலச் சுற்றி வருகின்றன. அதிலிருந்து மீள முடியவில்லை.''

மதுராம்பிகை பேசுவது சாந்தாவுக்கு ஒன்றும் புரியவில்லை என்றாலும், மதுராம்பிகையே விளக்கமாகப் பேசுவாள் என்று இருந்துவிட்டாள்.

(தொடரும்)

ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி பரத நாட்டியக் கலாமந்திர்

பம்பாய்

அளிக்கும்

நாட்டிய நாடகம்

வஸந்த வல்லி

(திருக்குற்றாலக் குறவஞ்சி)



வாணி

நடனம்:

சினிமா புகழ் வாணி - மீரா - பத்மா கண்ணன் (மலேசியா)
இந்திரா முத்தண்ணு (மிஸ் இந்தியா 1972) குர்ஷத் -
ஜெய மீரா - உமா - சுதா - லலிதா - மஞ்சுளா - உஷா -
ஜெயஸ்ரீ - வத்சலா - ஜெயந்தி

இசை, நடன அமைப்பு:

கலைமாமணிகள் குப்பையா பிள்ளை - கோவிந்தராஜ் பிள்ளை
மகாலிங்கம் பிள்ளை & திரு கல்யாண சுந்தரம்

காட்சி அமைப்பு: இந்தியன் நேஷனல் தியேட்டர், பம்பாய்

பம்பாயில் 1-12-73



மீரா

பாரதி கலா மன்றம்

கட்டிட நிதிக்காக

இடம்: ஷண்முகானந்த அரங்கு

டிக்கெட் கிடைக்குமிடம்:

மன்றம்: 471865 — சபா அரங்கம் &
ஸ்ரீ வெங்கடேஸ்வரா ஸ்டோர்ஸ், மாதுங்கா

★ ★ ★

சென்னையில் 17-12-73

இந்திர தனுஸ் (பதிவு)

ஆதரவில்

இடம்: பல்கலைக் கழக நூற்றாண்டு விழா மண்டபம், சென்னை

டிக்கெட் விவரம்: போன்: 72132

சிறப்புச் சிறுகதை



மூச்சு இரைக்க ஓடி வந்த சோமையா பள்ளிக்கூட வராந்தாப் படியில் ஏறி நின்று வெளியே கையை நீட்டி வானத்தை அண்ணாந்து பார்த்தான். கரிய மேகங்கள் திரண்டு இடியும் மின்னலுமாகக் குமுறிக் கொண்டிருந்த வானம் இலேசாகத் தூறல் போட ஆரம்பித்தது. தன்னை விரட்டிக் கொண்டு வந்த மழையிடமிருந்து தப்பிவிட்ட மகிழ்ச்சியுடன் நமட்டுச் சிரிப்பு சிரித்துக்கொண்ட அவன், தலைமை ஆசிரியரின் அறையிலிருந்து சுவர்க் கடிகாரம் 'டங்' என்று ஒலி எழுப்பியதைக் கேட்டு அவசரமாகச் சன்னல் வழியே எட்டிப் பார்த்தான். மணி ஒன்பதரை.

பள்ளிக்குத் தாமதமாக வந்திருக்கிறோம் என்பதை இப்போதுதான் புரிந்து கொண்டவன்போல் முகத்தில் பயம் படர அங்குமிங்கும் விழித்துப் பார்த்தான் சோமையா. வராந்தாவிலோ, தோட்டத்திலோ ஒரு மாணவ – மாணவியும் தென்படவில்லை. எல்லா வகுப்புக்களும் ஆரம்பமாகிவிட்டதால் எங்கும் வெறிச்சோடிக் காணப்பட்டது. பள்ளியின் இந்தப் பிரதான கட்டடத்துக்குப் பின்னாலிருந்த ஒரு கீற்றுக் கொட்டகையிலிருந்து குழந்தைப் பிள்ளைகள் ஒரே குரலாக, 'ஓரோண் ஒண்ணு, ஈரோண் ரெண்டு' என்று ஓசையாகக் கூவிக் கொண்டிருப்பது கேட்டது. அங்கே 'அட்டைக் கிளாசும்', ஒண்ணாங் கிளாசும் இருந்தன. இரண்டாம் வகுப்பு



பிரம்புக்குத் தெரியுமா?

ஜெகசிற்பியன்

முதல் எட்டாம் வகுப்பு வரையில் இந்தப் பிரதான கட்டடத்தில் நடைபெற்றன.

கட்டடம் என்றால் பெரிய மாடிக் கட்டடம் அல்ல; மேலே அஸ்பெஸ்டாஸ் கூரையுடன் நீளவாட்டில் குட்டையாக நான்கு சுவர்களும், குறுக்கே ஆறு தடுப்புச் சுவர்களுமாக அமைந்த ஒரு ஷெட் போன்றதுதான். ஒவ்வொரு வகுப்பறைக்கும் ஒரு கதவு; முன்னும் பின்னுமாக இரண்டு சன்னல்கள்.

அந்த ஊர் பஞ்சாயத்து யூனியனால் நடத்தப் பெறும் ஒரே நடுநிலைப் பள்ளி அது. இந்த ஒரு பள்ளிக்கே அந்தச் சின்ன ஊரிலிருந்து போதிய பிள்ளைகள் கிடைப்பதில்லை. அதனால் சுற்றுப் பக்கக் கிராமங்களிலிருந்து ஒன்று முதல் மூன்று வகுப்புகளுக்கான பிள்ளைகளை இந்தப் பள்ளியின் ஆசிரியர்களே தினமும் போய்த் தேடிப் பிடித்து ஓட்டிக் கொண்டு வந்து சேர்ப்பார்கள். இதுவே அவர்களுக்குரிய முக்கியமான வேலையாகவும் இருந்தது.

சோமையாவும் அப்படிப் 'பிடித்து' வரப் பட்டவனாகத்தான் இந்தப் பள்ளியில் வந்து சேர்ந்தான். மூன்றாம் வகுப்பு வரையில் அவனைத் தினமும் பிடித்து இழுத்துக் கொண்டு வந்து சேர்ப்பது ஆசிரியர்களுக்கு ஒரு பிரம்மப் பிரயத்தனமாயிருந்தது. அப்புறம் நாலாங் கிளாசில் 'தூக்கி'ப் போட்டதும் அவனாகவே வர ஆரம்பித்தான். அப்படி ஐந்தாம் வகுப்பு வரை ஒழுங்காக வந்து கொண்டிருந்தவன், ஆறாம் வகுப்பில் புகுந்ததிலிருந்து பழையபடி 'மக்கர்' பண்ணத் தொடங்கி விட்டான்.

பையனுக்கு வயசு பன்னிரண்டுதான். நோஞ்சலான உடல். ஆனால் பார்க்க லட்சணமா யிருப்பான். அழகான கண்கள்; எடுப்பான மூக்கு; சின்ன வாய்; மாநிறத்தை விடக் கொஞ்சம் மாற்று அதிகம். குரல் அளவுக்கு மீறிச் சன்னமானது; பேசினால் பாடுவது போல் இருக்கும். ஒரு கிராமத்துப் பையன் என்றே நினைக்க முடியாத அளவுக்குச் சட்டை கால்சராய் எல்லாம் சுத்தமாக அணிந்து வருவான். யாருடனும் அதிகம் பேசமாட்டான். விளையாட்டில் ஈடுபாடு கிடையாது. ஆனால் மற்றப் பிள்ளைகள் விளையாடுவதை ரொம்பவும் சுவாரசியமாகப் பார்த்துக் கொண்டிருப்பான். அதிலும் பெண் பிள்ளைகள் விளையாடுவதைப் பார்ப்பதில் அவனுக்கு ஒரு தனி ருசி. அவர்களிடம் பேச்சு மட்டும் வைத்துக் கொள்ளமாட்டான். அவர்களாக வந்து பேசினாலும் வெட்கப்பட்டுக் கொண்டு பதில் ஏதும் சொல்லாமல் ஓடிப் போய் விடுவான்.

பிள்ளையான அவனை எப்படியும் 'எஸெல்ஸி' வரையிலாவது படிக்க வைத்துவிட வேண்டும் என்பது அவரது பெரிய சங்கல்பம். அம்மாதிரி ஒரு சங்கல்பம் செய்துகொள்ளக் காரணம், அவர் சுத்தமான கைநாட்டுப் பேர்வழியாக இருந்ததே!.....

ஒவ்வோர் ஆண்டும் தம் மகன் புதிய வகுப்புக்குப் போகும்போதெல்லாம் அந்த வகுப்பின் ஆசிரியரைத் தட்சிணைப் பொருட்களோடு தனியாகப் போய்ப் பார்த்து, ''வாத்தியாரையா! இந்தப் பையனை உங்க சொந்தப் பிள்ளைபோல் பாவிச்சு, நல்லா அடிச்சு உதைச்சுப் பாடம் சொல்லிக் கொடுங்க! அப்படியும் படிக்கலேன்னு ரெண்டு கண்ணை மட்டும் விட்டுட்டு மற்றதையெல்லாம் உரிச்சு உப்புக் கண்டம் போடுங்க! அடியாத மாடு படியாது!'' என்று சொல்லி விட்டு வருவார். அவருக்குத் தமது மாடும் மகனும் ஒன்றுதான். விவசாயி அல்லவா?



அவனுடைய கிராமம் இங்கிருந்து மேலண்டைப் பக்கம் மூன்று மைல்களுக்கு அப்பால் இருக்கிறது. அந்தக் கிராமத்திலிருந்து இவ்வூருக்கு வர நல்ல சாலை கிடையாது. ஒரு மோசமான வண்டிப் பாட்டையே உண்டு. அதுவும் சுற்றுப்பாதை. ஏரிக் கரையையும், வயல் வரப்புக்களையும், புளியந் தோப்பையும் கடந்து வருவதுதான் நேர் குறுக்கு வழி. அநேகமாய் அந்தக் கிராமத்து ஜனங்கள் எல்லாரும் அப்படித்தான் வருவார்கள், போவார்கள்.

பையனின் தந்தை ஒரு சிறு விவசாயி. சொந்தத்தில் கொஞ்சம் நிலம் நீச்சு உள்ளவர். அந்தக் கிராமத்தில் ஓரளவு வசதியாக வாழும் குடும்பம் அவருடையது. ஒரே ஆண்

பையனின் தந்தையே வழங்கிய இந்த 'உரிமை'யையும், 'சலுகை'யையும் முதல் வகுப்பு ஆசிரியரிலிருந்து ஐந்தாம் வகுப்பு ஆசிரியர் வரை எத்தனை பேர் நடைமுறைப் படுத்தினார்களோ, தெரியாது; ஆனால் ஆறாம் வகுப்பு ஆசிரியர் அம்பரீஷன் அவற்றை முழுமையாகப் பயன்படுத்த வேண்டிய அவசியத்துக்கு உள்ளானார். ஏனென்றால் அவருடைய வகுப்புக்கு வந்ததிலிருந்து பையனின் போக்கு மாறத் தொடங்கிவிட்டது.

அவன் பள்ளிக்கு மட்டம் போடுவதில்லை; வகுப்பில் குறும்பு பண்ணுவதில்லை; தலை யாட்டல்தனமாக நடந்து கொள்வதுமில்லை. ஆனால் வாரத்தில் இரண்டு மூன்று நாட்களாவது அரை மணி நேரம், சில நாட்கள்

ஒன்றரை மணி நேரம்கூடத் தாமதமாக வரத் தலைப்பட்டான். எவ்வளவுதான் திட்டி அடித்துக் கண்டித்தாலும் இந்த விஷயத்தில் அவன் திருந்தாமலே இருந்தான். இதுபற்றி அவனுடைய தந்தையிடம் ஆசிரியர் அம்பரீஷன் பல முறை புகார் செய்துவிட்டார். அவருக்கு இவர் சொல்வது ஆச்சரியமாயிருந்தது. காரணம், ஒவ்வொரு நாளும் சரியான நேரத்துக்குப் பையன் பள்ளிக்குப் புறப்பட்டுப் போவதை அவரே பார்த்து வருகிறார். அப்படியானால் ஆசிரியர் சும்மாவா சொல்வார்?

பிள்ளையாண்டான் பள்ளிக்கூடம் போகிற வழியில் எங்காவது ஏதாவது விளையாட்டில் ஈடுபடுகிறானோ என்று சந்தேகித்து அதைக் கண்டுபிடிப்பதற்காக அவனுக்குத் தெரியாமல் அவனைப் பல தடவைகள் பின்தொடர்ந்து போய்ப் பார்த்தார் அவர். அந்த நாட்களிலெல்லாம் அவன் ஒழுங்காக — காலை ஒன்பது மணிக்கு ஐந்து நிமிடங்கள் முன்னதாகவே — பள்ளிபோய்ச் சேர்ந்துவிடுவதைக் கண்டு அவருக்கு ஆசிரியர் மீதே சந்தேகம் தட்டலாயிற்று. தம் மகனின்மேல் அந்த வாத்தி பொய்யான புகார் சொல்கிறாரோ என்று எண்ணத் தொடங்கினார். அவ்வாறு சொல்ல வேண்டிய அவசியம் எதுவும் இல்லையே என்றும் குழம்பலானார். இதேபோல் ஆசிரியர் அம்பரீஷனுக்கும் பையனின் தந்தை மேல் சம்சயம் ஏற்பட்டது. காலை நேரங்களில் கழனிக்காட்டு வேலைகளுக்குப் பையனை ஏவி விடுவதால் அவன் பள்ளிக்குத் தாமதமாக வருகிறானோ என்று அவர் எண்ணினார். இவ்வளவுக்கும் சோமையா தான் தாமதமாக வருவதற்குத் தந்தையிடமோ ஆசிரியரிடமோ சரியான காரணம் எதையும் ஒருநாளும் சொல்லவில்லை. 'நான் எப்போதும் போலத்தான் வீட்டிலிருந்து புறப்பட்டு வரேன் சார்! அது எப்படித் தாமதமாகுதுன்னு எனக்கே தெரியலே!' என்று மட்டுமே அவன் திரும்பத் திரும்பச் சொல்வான்.

படிப்பிலும் பையன் அவ்வளவு கெட்டிக்காரன் அல்ல. சராசரி மாணவனாகவே இருந்தான். சில சமயம் சில சாதாரண எளிய பாடங்களில்கூட சைபர் வாங்குவான். ஆனால் திடீரென்று ஏதாவது ஒரு பாடத்தில் — அது எவ்வளவு கடினமானதாக இருந்தாலும் — நூற்றுக்கு நூறு மார்க் வாங்கிவிடுவான்.

நாலாம் வகுப்பு, ஐந்தாம் வகுப்பு, ஆறாம் வகுப்பு!......

அந்த வகுப்பறையை நெருங்கினதுமே சோமையா தயங்கி நின்று மெல்ல உள்ளே எட்டிப் பார்த்தான். எதிரே பெஞ்சுகளில் உட்கார்ந்திருந்த மாணவ — மாணவிகளின் கவனம் அவன் பக்கமாகத் திரும்பியது. ஆசிரியர் அம்பரீஷன் அப்போது கரும் போர்டில் கணக்குகள் எழுதிப் போட்டுக் கொண்டிருந்தார். அவர் இவனைப் பார்க்கவில்லை. அவருடைய பார்வையில் படாமல் உள்ளே வந்துவிடும்படி சில மாணவர்கள் அவனுக்குச் சமிக்ஞை காட்டினர். ஆனால் சோமையா அவ்வாறு செல்லாமல் பயந்த முகத்துடன் வாசல் அருகில் ஒதுங்கி ஒடுங்கி நின்றான்.

மாணவர்களிடையே ஏற்பட்ட 'கசமச' பேச்சுக் குரலால் கவனம் திருப்பப்பட்ட அம்பரீஷன் திரும்பிப் பார்த்தார். ''ஓ!... கவர்னர் தொரை இப்பத்தான் வர்றாரா?'' என்று கேட்டுக் கொண்டே வந்த அவர், ''என்ன, கவர்னர் சார்! எதுக்கு இவ்வளவு சீக்கிரம் வந்துட்டீங்க? பத்து மணிக்கு வருவீங்கன்னில்லே எதிர்பார்த்தேன்!'' என்றார் கேலியாக. பையன்களும் சிறுமிகளும் குபீரெனச் சிரித்தனர். சோமையா தலை குனிந்தபடி மௌனமாய் நின்றான்.

''ஏன்டா இவ்வளவு லேட்?'' என்று கோபமாக அதட்டிக் கேட்டார் ஆசிரியர்.

''லேட்டாயிடுத்து சார்!'' என்று பயந்து குழறினான் சோமையா.

''காலம்பற எத்தனை மணிக்கு வீட்டை விட்டுக் கிளம்பினே?''

''ஏழரை மணிக்கு சார்!''

''உன் வீட்டிலே கடிகாரம் இருக்குதா?''

''இருக்கு சார்! அலாரம் கடிகாரம்.''

''அது சரியா ஓடுதா?''

''ஓடுது சார்!''

''பின்னே ஏன் இப்படி லேட்டா வரே? வழியிலே என்ன பண்ணறே?''

''ஒன்னும் பண்ணலே சார்.....''

''ஸ்டுப்பிட்! பொய்யா பேசறே?''

பையன் பதில் ஏதும் சொல்லாமல் தலையைச் சொறிந்தபடி வகுப்புக்குள்ளே நுழையப் பார்த்தான்.

''நில்லுடா, அங்கேயே!'' என்று அதட்டிய அம்பரீஷன் மாணவ — மாணவிகள் பக்கம் திரும்பி, ''இப்ப நம்ம கிளாசுக்கு கவர்னர் தொரை விஜயம் செய்யப் போறார்; எல்லோரும் கையைத் தட்டுங்க!'' என்றார்.

வகுப்புப் பிள்ளைகளுக்குப் பரம குஷியாகிவிட்டது. அவர்கள் மிகவும் உற்சாகத்தோடு கைதட்டினார்கள்.

''வாங்க, கவர்னர் தொரை! போய் உங்க ஆசனத்திலே அமருங்க!''

அவமானத்தால் சோமையாவின் உடல் வேர்த்துக் கொட்டியது. தலை குனிந்து கொண்டே தன் இடத்தில் சென்று அமர்ந்தான். அவன் அமர்ந்ததும் பிள்ளைகள் கைதட்டுவதை நிறுத்தினார்கள். ஆனால் மறுகணமே மற்றொரு 'சடபட' ஒலி எழுந்தது. பலத்த மழை பிடித்து அஸ்பெஸ்டாஸ் கூரை மீது கொட்டியதால் ஏற்பட்ட ஒலியே அது. பையன்களும் சிறுமிகளும், ''நம்ம சோமையாவை மழைகூடக் கைதட்டி வரவேற்குது சார்!'' என்று சொல்லிச் சிரித்தனர். ''சைலன்ஸ்'' என்று அதட்டிய ஆசிரியர் அம்பரீஷனும் மெல்லச் சிரித்துக் கொண்டார்.

தனது இடத்தில் போய் அமர்ந்த சோமையா தலைநிமிரவே இல்லை. ஆனால் அவனுடைய முகத்தில் முன்னிருந்த பயமும் வெட்கமும் நீங்கிக் குறும்புச் சிரிப்பு தவழ்ந்தது. அவன் எதை நினைத்து அப்படி ஒரு விஷமச் சிரிப்பு சிரித்தானோ?....

வழக்கமாகக் கடைசிப் பெஞ்சில்தான் அவன் உட்காருவான். அந்தப் பெஞ்சு, சன்னல் ஓரம் இருந்தது. அங்கிருந்து வெளியே எல்லாவற்றையும் பார்க்கலாம். காலை பதினொரு மணி வரை வெயில் சுளீரெனச் சுட்


அவள் மென்மையானவள்... அவள் ஒரு புதிர்...
அவள் மிருதுவானவள், உறுதியானவள்...
தீப்போன்றவள்... அவள் பெண்மையே உருவானவள்...
பட்டுப் போன்ற டால்க்... அன்பைப்போல
மிருதுவானது. உங்கள் மேனியைத் தழுவி
அரவணைப்பது. உங்களை மோகன வாகினியில்
ஆழ்த்தும் அருமையான புது நறுமணம்
கொண்டது. அதுவே வீல் ஆஃப் லவ்.
ஹேலோ மட்டுமே அளிப்பது. அதைத்
தாராளமாக மேனியெங்கும் தூவிக்
கொள்ளுங்கள். ஹேலோவிற்கெனவே
பிரத்யேகமாக உருவான அதன் நறுமணம்
நீண்ட நேரம் உங்களைத் தழுவி,
உங்களைச் சுற்றிலும் கமகமவென
வீசிக் கொண்டிருக்கும். வீல்
ஆஃப் லவ் உங்களை அலங்கரிக்
கட்டும். ஹேலோ மட்டுமே
அளிக்கும் வாசமுள்ள
அன்புத் திரை அது.
ஹேலோ வீல் ஆஃப்
லவ் டால்க் வாசமுள்ள
அன்புத்திரை...
அன்பைப் போல
மிருதுவானது.
அவளுக்கு உகந்தது
ஹேலோ
வீல் ஆஃப் லவ்
டால்க்
Halo

டெரிக்கும்; மத்தியானத்துக்கு மேல் தும்பும் ஆரகமான காற்று சுழன்று வீசும்; மழை பெய்தாலோ சாரல் அடிக்கும். இவை தவிர, ஆசிரியர் போர்டில் எழுதிப் போடுகிற பாடங்களை இங்கிருந்து சரியாகப் பார்க்கவும் முடியாது; எம்பி நிமிர்ந்து பார்த்துத்தான் எழுத வேண்டும். இப்படி இத்தனை அசௌகரியங்கள் இருந்தும் அவன் அவ்விடத்தைவிட்டு வேறு பெஞ்சுக்குப் போவதே இல்லை.


“முக்கால்மணி நேரத்துக்குள்ளே இந்தக் கணக்குகளையெல்லாம் செய்து முடிக்கணும். நடுவில் யாரும் எழுந்து அது தெரியலே, இது எப்படின்னு கேட்கக் கூடாது. தெரிஞ்ச வரை செய்தால் போதும். முன்னால் செய்து முடிக்கிறவங்க சிலேட்டுப் பலகையை இங்கே மேசையின் மேல் கொண்டு வந்து அடுக்கி வைச்சுட்டுப் போயிடணும். பேச்சு மூச்சு வரப்படாது. யாராவது பேசினால் ஐம்பது தோப்புக்கரணம் போட வைப்பேன்.”

ஆசிரியர் அம்பரீஷன் இவ்வாறு உத்தரவும் எச்சரிக்கையும் பண்ணிவிட்டுத் தம் ஆசனத்தில் அமர்ந்து ஒரு வாரப் பத்திரிகையைப் பிரித்து அதில், சினிமா நடிகன் ஒருவன் 'செட்'டில் தன்னுடைய முதுகைத் தன் கையாலேயே சொறிந்து கொள்கிறானா? அல்லது பிளாஸ்டிக் குச்சியால் சொறிகிறானா? என்று — நாடும் மக்களும் அதிமுக்கிய அவசரமாகத் தெரிந்து கொள்ள வேண்டிய இந்தச் செய்தியை—ரொம்பவும் கர்ம சிரத்தையோடு இரண்டு பக்கங்களுக்கு எழுதி வெளியிட்டிருந்ததை வெகு சுவாரசியமாகப் படிப்பதில் ஆழ்ந்தார்.

வகுப்பறையில் பரிபூரண நிசப்தம் நிலவியது. பிள்ளைகள் அனைவரும் கணக்குப் பாடத்தில் மூழ்கினர். ஜலதோஷம் பிடித்த ஒரு சிறுமி மூக்கை உறிஞ்சும் சத்தம் மட்டும் அவ்வப்போது இலேசாகக் கேட்டது.

வெளியே மழை பெய்து கொண்டிருந்தது. ஆனால் ஆரம்பத்தில் இருந்த வேகம் இல்லை. சிறு சரமாகவும் ஒரே சீராகவும் பெய்தது.

சிலேட்டும் பலப்பமுமாக நிமிர்ந்து உட்கார்ந்த சோமையா கணக்குப் போட ஆரம்பித்தான். முதல் கணக்கில் பாதிவரை செய்துவிட்ட அவனுடைய கவனத்தைப் 'பட், பட்' என்று ஏதோ வெடிப்பது போன்ற சிற்றொலி கவர்ந்தது. வகுப்பறையில் அங்குமிங்குமாகப் பார்வையை ஓட்டினான். ஒன்றும் புலனாகவில்லை. ஆனால் அந்தப் 'பட், பட்' ஒலி தொடர்ந்து கேட்டுக் கொண்டேயிருந்தது. அதுவும் அவனுக்கு மிக அருகிலேயே அச்சப்தம் எழுவதுபோல் கேட்டது. கணக்குப் போடுவதை நிறுத்திவிட்டுக் கூர்ந்து கவனித்தான். சன்னல் அருகிலிருந்துதான் அந்தச் சிறு வெடிச் சத்தம் எழுகிறதென்பதைப் புரிந்து கொண்டு மெல்ல வெளியே எட்டிப் பார்த்தான். அவ்வெடிக்கான காரணத்தை — அது எதனால் எப்படி வெடிக்கிறது என்பதை — அவனால் கண்டுபிடிக்க முடியவில்லை. அப்படியும் இப்படியுமாகச் சாய்ந்து குனிந்து நோக்கினான். சற்றைக்குப் பின் அந்த வெடியொலிக்குரிய காரணம் பளிச்சென்று அவனுக்குப் புரிந்துவிட்டது.



அமெரிக்காவுக்கு வந்த முதல் யானை

1796-ஆம் ஆண்டுதான் முதன்முதலாக வங்காளத்திலிருந்து அமெரிக்காவுக்கு ஒரு யானை போயிற்று.

காப்டன் கிரௌனிங் ஷீல்டு என்பவர் அந்த யானையைக் கொண்டு போனார்.

நியூயார்க் நகரத்தில் 'பீவர் அண்ட் பிராட்வே' என்ற தெருவில் ஒரு மண்டபத்தை வாடகைக்கு எடுத்தார் காப்டன் கிரௌனிங். டிக்கட் வைத்துப் பொதுமக்களுக்கு யானையைக் காட்டினார் அவர்.

'தங்களை ஏமாற்றிப் பணம் பறிக்கத் தந்திரமாகத் தயாரிக்கப்பட்ட ஒரு செயற்கைப் பிராணியே அந்த யானை' என்று அதைப் பார்த்த பொதுமக்கள் பேசிக்கொண்டார்கள்!

-ஏ. சுவாமிநாதன்

ஆம்; சன்னலோரம் வரிசையாய் வளர்ந்திருந்த கனகாம்பரம் செடிகளின் முற்றிக் காய்ந்த பூக்கொத்துக்கள் மீது மழைச் சாரல் வீசிச் சாடியபோதெல்லாம் விதைகள் 'பட், பட்' என்ற மெல்லொலியுடன் வெடித்துச் சிதறிக் கொண்டிருந்தன. இதை வெகுவாக ரசித்துப் பார்க்கத் தொடங்கிய சோமையாவின் கவனம் வேறொரு வேடிக்கைக் காட்சியால் ஈர்க்கப்பட்டது.

மழைக்குப் பயந்து கொண்டு எங்கிருந்தோ வாலை உயர்த்தியவாறு சன்னல் சுவர் ஓரத்தை நோக்கி விரைந்தோடி வந்தது ஓர் ஓணான். சன்னலுக்கு மேலே 'ஸன்-ஷேட்' இருந்ததால் அதன் சுற்றளவுக்குக் கீழே தரை இன்னும் சேறாகவில்லை. சாரல் நீரால் மட்டும் கொஞ்சம் ஈரமாகியிருந்தது. ஓடி வந்த களைப்புத் தீர அவ்விடத்தில் சிறு பொழுது நின்று விம்மிப் பெருமூச்சு விடுவது போல் தலையைத் தூக்கித் தூக்கித் தாழ்த்திய அந்த ஓணான், அங்கேயும் மழைச் சாரல் வீசுவதை உணர்ந்தோ என்னவோ, கனகாம்பரம் செடியொன்றின் மேல் சரசரவென்று ஏறலாயிற்று. செடியின் நடுத் தண்டைக் கடந்து தனியொரு கிளையின் உச்சிவரையில் ஏறிய மறுகணம், அதன் பளுவைத் தாங்காத அச்சிறு கிளை வில்லாக வளைந்து தரையைத் தொடவே, ஓணான் கீழே மல்லாக்க விழுந்து புரண்டு எழுந்தது. அதற்குள் அந்தக் கிளையும் மேலே நிமிர்ந்து விட்டது.

ஓணானுக்கு ரொம்பக் கோபம். செவிப்புறங்கள் சிவந்து புடைக்கத் தலையை மேலும் கீழுமாகத் தூக்கி ஆட்டிய அது மறுபடியும் அதே செடிக் கிளையின் மேல் ஏறியது. மீண்டும் தோல்வி.

தரையில் விழுந்து எழுந்த ஓணான், ஈர மண்ணில் தன் வயிறு படாமல்இருக்க நான்கு கால்களையும் நிமிர்த்தி நெம்பி நின்றுகொண்டு இந்த இக்கட்டான நேரத்தில் தன்னைப் பழிவாங்கும் அந்தச் செடியை வெறித்துப் பார்த்தது. பிறகு ஏதோ ஒரு முடிவுக்கு வந்தாற்போல் சரேலென்று ஓடிப்போய்ச் செடியின் அடிவாரத்தில் நின்று அதன் உச்சிக் கிளையை அண்ணாந்து நோக்கித் தலையை ஓர் ஆட்டு ஆட்டிவிட்டு அடித் தண்டைப் பற்றி மெல்ல மெல்ல ஏறியது. தன்னை ஏற்க மறுத்து

பல் டாக்டர்களின் பற்கள்!



அமெரிக்கப் பல் டாக்டர்கள் மகாநாட்டுக்கு வந்த பிரதிநிதிகளின் பற்களையே திடீரென்று பரிசோதனை செய்தபோது, அதன் முடிவுகள் அதிர்ச்சி தருவதாயிருந்தன. பல் நிபுணர்களில் 95 சதவிகிதம் பேர் சொத்தைப் பற்கள் உடையவர்களாக இருந்தார்கள்! 60 சதவிகிதம் பேருக்குப் பற்களில் வேறு நோய்கள் இருந்தன! 35 சதவிகிதம் பேர்கள் பல் ஈறுகளில் வியாதியோடு இருந்தார்கள்!

(மியூனிக் வைத்தியப் பத்திரிகை) பி.எஸ்.எம்.

'அடம்' பிடித்த அந்தச் செடிக்குத் தான் ஏறுவது தெரியாமல் அதை ஏமாற்றிவிட வேண்டும் என்று தீர்மானித்ததுபோல் மிகமிக எச்சரிக்கையுடன் பதுங்கிப் பதுங்கி ஒவ்வோர் அடியாக எடுத்து வைத்து ஏறியது. நடுத் தண்டைக் கடந்து மேலே ஏறிய பின்னும் செடியின் கிளை வளையாமல் இருக்கவே, ஓணானின் தந்திரம் பலித்து விடும்போல் தோன்றியது. ஆனால் அதற்கு மேலும் ஓரடி எடுத்து வைத்த மறுகணம், அந்தக் கிளை திடுமென்று கீழே வளைய, தொப்பென்று தரையில் விழுந்தது ஓணான்.

இதைக் கண்டு பொங்கி வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டு வாய்க்குள்ளாகவே சிரித்த சோமையா கணக்குப் பாடத்தை அறவே மறந்தவனாய், சன்னல் கட்டைச் சுவரில் வலக் கை முட்டியை ஊன்றிக் கொண்டு நன்றாக எட்டிப் பார்த்தான். ஆசிரியர் அம்பரீஷன் பத்திரிகை படிப்பதில் மூழ்கிப் போயிருந்தார். மற்றப் பிள்ளைகள் கணக்குப் போடுவதில் மும்முரமாக இருந்தனர்.

தன்னை ஏமாற்ற முயன்ற ஓணானைத் தான் ஏமாற்றி வீழ்த்திய பெருமிதத்துடன் ஜிவ்வென்று மேலே நிமிர்ந்த அந்தப் 'பொல்லாத' கனகாம்பரம் செடி ஓணானுக்கு 'ஒழுங்கு' காட்டுவது போல் அப்படியும் இப்படியுமாக அசைந்தாடியது.

மழைச் சாரலில் நனைந்தபடி அங்குமிங்கும் வெறித்துப் பார்த்த ஓணான், ''ஓகோ! என்னைக் கேலியா செய்கிறாய்? இதோ பார், உன் கொட்டத்தை அடக்குகிறேன்!'' என்று கறுவிச் சவால் விடுவது மாதிரி வேகமாகத் தலையை நெம்பித் தூக்கி ஆட்டிவிட்டு மறுபடியும் அந்தச் செடியின் மேல் சரேலெனத் தாவி ஏறியது. என்ன ஆச்சரியம்! நடுத் தண்டைக் கடந்து மேலே அது ஏறிய பின்னும் செடி முன்போல் கீழே வளைந்து சாயவில்லை; விறைப்பாகவே நின்று கொண்டிருந்தது. ஓணான் மேலே மேலே ஏறியது. அப்போதும் செடி வளையாமல் நெடுங்குத்தாக நின்றது.

வியப்படைந்த சோமையா சற்றே நிமிர்ந்து வெளியே எட்டிப் பார்த்தான்.

அந்த வீம்புக்கார ஓணான் கனகாம்பரம் செடியின் இரண்டு கிளைகளை நன்றாகச் சேர்த்து மார்போடு அணைத்தபடி ஏறியதாலேயே செடி வளையாமல் நேரே நிமிர்ந்து நிற்கிறது என்பது அவனுக்குப் புரிந்தது. இப்போது தப்பித் தவறிக் கொஞ்சம் வளைந்தாலும் செடிதான் மளுக்கென்று ஒடிந்து போகும். தனது தந்திர முயற்சியால் வெற்றி பெற்றுவிட்ட பெருமிதத்துடன் தலையை மெல்லத் தூக்கி ஆட்டியது ஓணான்.

மழையின் வேகம் திடீரென்று வலுத்தது! மழையோடு காற்றும் சேர்ந்து வீசியதால் ஓணானைச் சுமந்து கொண்டிருந்த கனகாம்பரச் செடி அப்படியும் இப்படியுமாகச் சாய்ந்தாடிக் கொண்டிருந்தது. ஆனாலும் மழைச் சாரலில் நனையாமல் ரொம்பவும் பாதுகாப்பாகப் பதுங்கிக் கிடந்தது ஓணான்.

'மளுக்'. — மழைக் காற்றின் வேக வீச்சால் அந்தக் கனகாம்பரச் செடியின் இரு கிளைகளும் ஒடிந்து சாய, அவற்றில் ஏறிப் பதுங்கியிருந்த ஓணான் 'தொப்'பென்று கீழே விழுந்து புரண்டது.

சோமையாவால் இப்போது வெடித்துக் கொண்டு வந்த சிரிப்பை அடக்கவே முடியவில்லை. வாய் விட்டுத் தன்னை மறந்து கலகலவென்று சிரித்தான் அவன். நிசப்தத்தில் ஆழ்ந்திருந்த வகுப்பறையில் அவனுடைய இந்தத் திடீர்ச் சிரிப்பு பெரிதாக எதிரொலித்தது.

பத்திரிகையைப் பட்டென்று மூடிவிட்டு நிமிர்ந்தார் ஆசிரியர் அம்பரீஷன். மாணவ-மாணவிகளும் ஒருசேரப் பின்னால் திரும்பிப் பார்த்தனர். தனது தவற்றை உடனே உணர்ந்துகொண்ட சோமையா திருதிருவென்று விழித்தான்.

''என்னடா, ஏன் சிரிச்சே?'' என்று கோபமாகக் கேட்டார் ஆசிரியர்.

''ஒண்ணுமில்லே, சார்!'' என்று மென்று விழுங்கினான் சோமையா.

''ஒண்ணுமில்லாமல் எதுக்குச் சிரிப்பு?'' என்று மீண்டும் கடுமையான குரலில் வினவினார் அம்பரீஷன். பையன் மௌனமாயிருக்கவே, ''படவா, ராஸ்கல்! ஸ்கூலுக்கு லேட்டாக வருகிறதுமல்லாமல் இங்கே வந்து கும்மாளமா போடறே?... ஸ்டாண்ட் அப் ஆன் தி பெஞ்ச்!...ஊம், பெஞ்சு மேலே ஏறி நில்லு!'' என்று கூவினார்.


சோமையாவுக்குப் பெஞ்சு மேல் ஏறி நிற்பதென்பது ரொம்பப் பழக்கமாகிப் போன காரியம். வாரத்துக்குக் குறைந்தபட்சம் நாலு தடவைகளாவது இந்தத் தண்டனையை அவன் பெறுவான். எனவே, கொஞ்சமும் தயக்கமின்றி உடனே பெஞ்சு மேல் ஏறி நின்று கொண்டான்.

''எல்லோரும் பாருங்க, பனைமரம் நிற்குது பாருங்க! வெட்கம், மானம் இல்லாமல் நிற்கிறதைப் பாருங்க!'' என்று வெறுப்பும் சினமுமாக மொழிந்தார் ஆசிரியர்.

பையன்களும் சிறுமிகளும் அவனைத் திரும்பிப் பார்த்துக் 'கொல்'லென்று சிரித்தனர். தலையைக் குனிந்து கொண்டு பரிதாபமாய் நின்றான் சோமையா.

''ஏன் சும்மா நிற்கிறே? சிலேட்டை எடுத்துக் கணக்குகளைப் போட்டு முடிடா, முண்டமே!'' என்று இரைந்தார் அம்பரீஷன்.

சோமையா தன் சிலேட்டை எடுத்து மார்பில் இறுக்கிப் பிடித்தவாறு பாதியில் நிறுத்


டாக்டர்கள் கூறுகிறார்கள்:
3 மாதங்கள் ஆன பிறகு.
முழுமையான
வளர்ச்சி பெற
உங்கள் குழந்தைக்குத்
தேவை திட உணவு.
பாரெக்ஸ் உங்கள் குழந்தை சீராக வளர்ந்திட, அனைத்தையும் அளிப்பதைப் பாருங்கள் எளிதில் சீரணிக்கக் கூடிய புரதம், கூடவே வைட்டமின், கால்ஷியம், இரும்புச் சத்து மற்றும் கார்போஹைட்ரேட்.
உங்கள் குழந்தையின் வளர்ச்சிக்கு அவசியமான பாரெக்ஸ் அளவு
குழந்தையின் வயது
எவ்வளவு பாரெக்ஸ் தரவேண்டும்
3—6 மாதங்கள்
1—2 தேக்கரண்டியளவு—தினம் இரு முறை
6—9 மாதங்கள்
3—4 தேக்கரண்டியளவு—தினம் மூன்று முறை
9 மாதங்களுக்குப் பிறகு
4—6 தேக்கரண்டியளவு—தினம் நான்கு முறை
FAREX
பாரெக்ஸ்®
சீரான உடல் வளர்ச்சிக்குக்
குழந்தையின் முதலாவது
திட உணவு
CMGF-35-104 TM

திய கணக்கைப் போட்டு முடிப்பதில் முனைந்தான். ஆனால் அவனுடைய கவனம் கணக்கில் பதிய மறுத்தது. அந்த ஓணான் என்ன ஆயிற்று, எங்கே போய்ப் பதுங்கியது என்பதை அறிய வேண்டுமென்ற ஆவல் அவனுள் மீண்டும் குறுகுறுக்கலாயிற்று. அதைக் கட்டுப்படுத்தவே அவனால் முடியவில்லை.

மெல்லத் தலைநிமிர்ந்து ஆசிரியரை ஓரக் கண்ணால் பார்த்தான். சில மாணவ–மாணவிகள் முன்னதாகக் கணக்குகளைச் செய்து முடித்துக் கொண்டு போய் மேசையின் மேல் அடுக்கி வைத்திருந்த சிலேட்டுகளில் ஒன்றை எடுத்துத் திருத்துவதில் ஈடுபட்டிருந்தார் அவர். மழை ஓய்ந்து போய் இப்போது பளிச்சென்று வெயில் காய ஆரம்பித்தது.

சோமையா தன் இடக்கண் பார்வையை இலேசாகச் சன்னல் பக்கம் ஓட்டினான்.

அவன் அப்படிப் பார்த்துக் கொண்டிருந்த போதே, கனகாம்பரம் செடி வரிசையின் நேரெதிரில் வளர்ந்து நின்ற சிறிய வேப்பங் கன்று ஒன்றின் மேலிருந்து சரசரவெனக் கீழே இறங்கி வந்தது அந்த ஓணான்.

ஓணானைக் கண்டதுமே சோமையாவுக்கு உற்சாகம் கிளர்ந்து விட்டது.

வேப்பங் கிளையை விட்டுக் காரியமாகத்தான் அந்த ஓணான் இறங்கி வந்தது என்பது சற்றைக்கெல்லாம் புரிந்துபோயிற்று. ஆமாம்; மழை பெய்து ஓய்ந்ததும் ஈரத் தரையிலிருந்து வெளிப்பட்டு நெளிந்து கொண்டிருந்த மண் புழுக்களை 'லபக், லபக்'கென்று எடுத்து விழுங்க ஆரம்பித்தது ஓணான். அப்படி உண்பதிலும் அது அவசரம் காட்டவில்லை. சாவதானமாகத் தலையைச் சாய்த்து ஒவ்வொரு புழுவையும் கூர்ந்து நோக்கிவிட்டுப் பிறகே அதை 'லபக்' என்று எடுத்து விழுங்கியது. இடையிடையே பெருமூச்சு விடுவது போல் தலையையும் நெம்பி நிமிர்த்தி ஆட்டிக் கொண்டது. தரையிலிருந்து புழுவை அது லாவி எடுப்பதே ஒரு விநோதமாயிருந்தது. கொஞ்சம்கூடச் சிரமப்படாமல் வெகு அலட்சியமாகவும் லாகவமாகவும் தன் உணவுப்பாட்டை நடத்திக் கொண்டிருந்தது.

சோமையா ரொம்பவும் சுவாரசியமாக இந்தக் காட்சியைப் பார்க்கலானான். உடனுக்குடன் வாத்தியார் ஞாபகம் வந்துவிட, அவரையும் ஓரக்கண்ணால் கவனித்துக் கொண்டான். நல்லவேளையாக அம்பரீஷன் அவனைப் பார்க்கவில்லை. தமது மேசைக்கு வந்த சிலேட்டுக்களை எடுத்துத் திருத்தித் தீர்ப்பதிலே அவர் கவனமாக இருந்தார். ஆனாலும் அவருடைய பார்வையில் சிக்கிக் கொள்ளாமல் இருக்கச் சோமையா ஒரு குயுக்தி செய்தான். இந்நேரம் மார்புக்கு நேராக அணைத்துப் பிடித்திருந்த சிலேட்டுப் பலகையை நெற்றி மட்டத்துக்கு உயர்த்தி முகம் மறைய அக்குளில் இடுக்கிக் கொண்டு மிகத் தீவிரமாகக் கணக்குப் போடுவது போலத் தலையைச் சாய்த்துக் கொண்டு பார்வையை மட்டும் அந்த ஓணான் பக்கம் திருப்பிக்கொண்டான்.

வேப்பங்கன்றின் கீழே இந்நேரம் நடந்து கொண்டிருந்த 'நாடகத்தில்' திடீரென்று ஒரு பயங்கரத் திருப்பம்!...



தடை விதிக்கப்பட்ட டைம் பத்திரிகையில் கிடைத்த ஒரு துணுக்கு!

டாக்டர் பெஞ்சமின் எம். ஸ்போக் இயற்றிய "குழந்தையும் குழந்தைப் பராமரிப்பும்" 202வது முறையாக மீண்டும் அச்சாகிறது.

இதில் ஆசிரியர் செய்துள்ள ஒரு பெரிய மாற்றம்: குழந்தையைப் பற்றி வரும் நூற்றுக் கணக்கான இடங்களில் இதுவரை கையாண்ட 'அவன், அவனுக்கு அவனுடைய' என்ற சொற்களுக்கும் பதிலாக 'அவள், அவளுடைய, அவளுக்கு' என்று எழுதியுள்ளார். இப்போது அமெரிக்காவில் 'உமன்ஸ் லிப்' தீவிரமடைந்துள்ளது அல்லவா? — டி. எஸ். வி.

எங்கிருந்தோ விர்ரென்று பறந்து வந்த காகம் ஒன்று அந்த ஓணானின் பக்கவாட்டில் உட்கார்ந்தது. இதைக் கவனித்த ஓணானும் தலையைத் தூக்கி அதைப் பார்த்தது. காக்கை ஓணானை ஓரக்கண்ணால் திருட்டுப் பார்வை பார்க்க, ஓணான் காக்கையை நன்றாக நேரிட்டு வெறித்து நோக்கியது. கொஞ்ச நேரம் அவ்விரண்டுமே இப்படி ஒன்றையொன்று பார்த்துக்கொண்டிருந்தன. பிறகு காக்கை ஒரு தாவுத் தாவிச் சற்றுத் தள்ளிப் போய் உட்கார்ந்து கொண்டது. 'ஓகோ! என்னைக் கண்டு பயந்து விட்டாயா?' என்பது போல் தலையை இருமுறை தூக்கி ஆட்டிய ஓணான், மண் புழு வொன்றை 'லபக்'கென்று எடுத்து விழுங்கியது.

தள்ளிப் போய் உட்கார்ந்திருந்த காக்கை இப்போது மறுபடியும் ஓணானுக்குப் பின்னால் வந்து அமர்ந்தது. உடனே ஓணானும் அதன் எதிரே திரும்பி நின்றுகொண்டது.

ஓணான் காக்கையை வெறிக்க, காக்கை ஓணானைக் குறும்பாகப் பார்த்துக் கொண்டிருந்தது.

சோமையா ரொம்பவும் உற்சாகத்துடன் இந்தக் காட்சியை நோக்கலானான்.

காக்கை மீண்டும் ஓர் எவ்வு எவ்வி ஓணானுக்குப் பின்புறம் போய் உட்கார்ந்தது. ஓணானும் சரேலென்று ஒரு வட்டம் போட்டுத் திரும்பிக் காக்கை நேரே நின்று கொண்டது. காக்கை மெல்ல மெல்லக் குதித்து ஓணானின் வால் பக்கம் வந்தது. ஆனால் ஓணான் முன் போல் அதன் எதிரே திரும்பாமல், இருந்த இடத்திலேயே நின்றது.

சில விநாடிகளுக்குப் பின்—

காக்கை சட்டென்று ஓணானின் வாலைக் கொத்தி இழுத்தது. மறு கணம், ஓணானுக்கு வந்ததே கோபம்! புஸ்ஸென்று முதுகுச் செதில்கள் விரிய, கன்னக் கதுப்புக்கள் சிவக்க, உடம்பெங்கும் மஞ்சள் பூக்க, தலைநிமிர்ந்து வாயைப் பிளந்து கொண்டு ஒரு வீராவேசத்துடன் காக்கையை நோக்கிப் பாய்ந்தது. காக்கையோ வெகு அலட்சியமாக மறு பக்கம் தாவிக் குதித்து உட்கார்ந்து கொண்டு ஓணா

குப்பையிலிருந்து பெட்ரோல்!



அமெரிக்காவில ஆண்டுதோறும் இருநூறு கோடி டன் குப்பை கூளங்கள் கழிக்கப்படுகின்றன. அவற்றை எவ்வாறு ஒழித்துத் தீர்ப்பது என்பது வர வரப் பெரும் தலைவலியாகிறது.

இன்று டாக்டர் லாரி எல். ஆண்டர்ஸன் என்னும் விஞ்ஞானி ஒரே கல்லில் இரண்டு மாங்காய் விழத் தட்டுவது போன்ற ஒரு திட்டத்தை ஆராய்ந்து வருகிறார். குப்பைகூளங்களிலிருந்து எரி வாயுவும் எரி எண்ணெயும் எடுக்கும் திட்டம் அது. விஞ்ஞானி, யூட்டா மாநிலப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்தவர்.

கரிமப் பொருள்களால் ஆன குப்பை கூளங்களோடு கார்பன் மானாக்ஸைடு, தண்ணீர் ஆகியவற்றை மிகுந்த வெப்பமும் அழுத்தமும் கூடிய சூழ்நிலையில் கலந்தால், எரி எண்ணெயும் எரி வாயுவும் கிடைக்கும் முறை ஒன்றை அரசாங்க விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள். இது பெரும் நன்மையாகக்கூடிய முறை என்கிறார், டாக்டர் ஆண்டர்ஸன்.

லைக் கேலிக் குறும்புடன் நோக்கியது. ஓணானின் ஆத்திரம் அடங்கவில்லை; பயில்வான் பஸ்கி எடுப்பது மாதிரி இருமுறை தலையைத் தூக்கி ஆட்டிக் காக்கையைப் பயமுறுத்துவது போன்று வெறித்துப் பார்த்தது.

'இந்தப் புத்திகெட்ட ஓணான் போயும் போயும் அந்த அண்டங் காக்காவிடம் சண்டை போடப் போகிறதே! அது நடக்கிற காரியமா? அதை இதனால் வெல்ல முடியுமா? பேசாமல் ஓடிப் போய் வேப்பங் கன்றின் மேல் ஏறிப் பதுங்கிக் கொள்ளக் கூடாதோ?' என்று தனக்குள் நனிப்புடன் முணுமுணுத்துக் கொண்டான் சோமையா.

ஓணான் கொஞ்சம் ஏமாந்த சமயம் பார்த்து காக்கை மறுபடியும் அதன் வாலைக் கொத்தி இழுக்க, ஓணானும் மூர்க்காவேசமாகச் சிலிர்த்துக் கொண்டு சடாரென்று திரும்பியது. உடனே காக்கை ஒரு குதி குதித்துப் பக்கவாட்டில் போய் உட்கார்ந்து கொண்டது. இப்படியே பத்து நிமிடங்கள்வரையில் அவ்விரண்டுக்கும் போராட்டம் நடந்து கொண்டிருந்தது. ஆனாலும் அந்தப் பொல்லாத ஓணான் காக்கைக்குப் பயந்து பின் வாங்கி ஓடிவிட விரும்பவில்லை. கடைசிவரை ஒருகை பார்த்துவிடுவது என்று வீறாப்புடன் அது எதிர்த்தே நின்றது. காக்கையும் அதற்குச் சளைத்ததாகத் தெரியவில்லை. எப்படியும் அதைக் கொத்திப் போய்விடுவதென்ற முனைப்புடன் இருப்பதாகவே தோன்றியது.

நேரம் நகர்ந்தது. சரியான இலக்குக் கிடைக்கும்போதெல்லாம் காக்கை ஓணானின் வாலைக் கொத்தி இழுப்பதும், அதன் பிடியில் சிக்காமல் ஓணான் வட்டமடித்துத் திரும்பிச் சீறுவதுமாக இருந்தன. இந்தப் போரில் ஓணான் கொஞ்சம் கொஞ்சமாகச் சோர்ந்து களைப்படைய ஆரம்பித்தது. முன்போல் இப்போது விரைப்புடன் தலையைத் தூக்கி ஆட்டிப் பயமுறுத்த முடியவில்லை. ஆயின் அவ்விடத்தை விட்டுத் தப்பி ஓடிப் பதுங்கவும் அதற்குப் பிரியமில்லை போல் தோன்றியது.

தன் எதிரி சோர்ந்து விட்டது என்பதைப் புரிந்துகொண்ட காக்கை மெல்லத் தத்தித் தத்தி வந்து சடாரென்று அதன் வாலைக் கொத்தித் தூக்கிக் கொண்டு இரண்டடி உயரத்துக்கு மேலே பறக்க முயன்றபோது ஓணான் ஒரு துள்ளுத் துள்ளித் திமிறிக் கீழே தொப்பென்று விழுந்து புரண்டு எழுந்தது.

காக்கைக்குப் பெரிய ஏமாற்றம். ஆனாலும் அது ஓணானை விட்டுச் செல்வதாயில்லை. மேலே பறந்து போய், மீண்டும் கீழே வந்து ஓணானின் அருகிலேயே உட்கார்ந்து கொண்டு அதை ஒற்றைக் கண்ணால் விஷமத்துடன் பார்க்கலாயிற்று. ஓணானும் அங்கேயே தரையோடு தரையாகப் படுத்துக் கிடந்தது.

சாதுபோல் உட்கார்ந்திருந்த காக்கை திடீரென்று ஒரு வேகத்துடன் தாவி வந்து ஓணானின் வாலைக் கொத்தி மேலே தூக்கிக் கீழே போட்டது. இந்தச் சமயம் —

சோமையா விம்மிப் பொருமி வீரிட்டு அலறி அழுது கொண்டே தன் கையிலிருந்த சிலேட் பலகையைச் சன்னலுக்கு வெளியே வீசி எறிந்தான். அதே வேகத்தில் பெஞ்சு மேலிருந்து தடாலெனக் கீழே குதித்து வகுப்பறை வாசலை நோக்கிப் பாய்ந்து ஓடினான்.

இதைக் கண்டு திடுக்குற்று எழுந்தார் ஆசிரியர் அம்பரீஷன். பாடத்தில் கவனமாயிருந்த பையன்களும் சிறுமிகளும் கூடப் பயந்துபோய் எழுந்து கொண்டனர். அதற்குள் சோமையா வகுப்பு அறையைக் கடந்து வராந்தாவுக்கு ஓடிவிட்டான்.

''ஓடுங்கடா! அந்தத் தறிதலைப் பையனைப் பிடுச்சு இழுத்துக்கிட்டு வாங்கடா!'' என்று உரத்த குரலில் கட்டளையிட்டார் ஆசிரியர். உடனே அந்த வகுப்பில் பெரிய பையன்களாக இரண்டுபேர் விரைந்தோடிப் போய்ச் சோமையாவை மடக்கிப் பிடித்து இழுத்து வந்து, ஆசிரியரின் எதிரே நிறுத்தினர்.

சோமையா தேம்பித் தேம்பி அழுதான்.

அவனைத் தாம் பெஞ்சு மேல் ஏறி நிற்கச் சொன்னதால் ஆத்திரமும் கோபமும் அடைந்தே தனது சிலேட்டைத் தூக்கி எறிந்து விட்டு வெளியே ஓடியிருக்கிறான் என்று எண்ணிய அம்பரீஷன், ''படவா, ராஸ்கல்! இந்த வயசிலே உனக்கு இவ்வளவு வீறாப்பா?'' என்று சினத்துடன் உறுமிக் கொண்டே மேசையின் மேல் கிடந்த நீண்ட பிரம்பை எடுத்து ஓங்கிச் சுழற்றினார்.

''சார்! சார்!.... அங்கே....அங்கே...'' என்று மேலே பேச முடியாமல் குமுறிய சோமையா விம்மிக் கதறி அழுதான். இதைக் கொஞ்சமும் சட்டை செய்யாமல் அவனுடைய கை, கால், முதுகு, இடுப்பு எல்லாம் பழுக்கப் பழுக்க விளாசிக் கொண்டிருந்தது பிரம்பு.

சோமையா என்ற அந்தச் சிறுவனிலிருந்து நாளை வெடித்து மலரப் போவது யார் என்னும் மகா ரகசியம் அந்தப் பிரம்புக்குத் தெரியுமா என்ன?



ஏஜெண்டுகள்:

மெஸர்ஸ் G. I. பிரதர், 137, பீமசேனா கார்டன் ரோடு, சென்னை-4

மெஸர்ஸ் KN. பரமசிவன், 103, தெற்கு ஆவணி மூல வீதி, மதுரை-1

மெஸர்ஸ் சர்வோதயா கார்ப்பொரேஷன், 78-B, வன்த்ரவதா, விஜயவாடா-1

அலுவலகத் தபால்களினிடையே அவன் பெயரிட்டுத் தனியாக வந்திருந்த அந்த இளஞ் சிவப்பு வண்ண உறையைத் தன் கையில் முதலில் எடுத்தான் மோகன். அந்த உறையின் இடது பக்கக் கீழ் மூலையில் பொறிக்கப்பட்டிருந்த மானேஜிங் டைரக்டர் புண்டரீகாக்ஷனின் பெயர் அவனை அப்படி அவசரப்படத் தூண்டியது.

கல்கத்தா,
20-12-72

''டியர் மிஸ்டர் மோகன்,

மானேஜிங் டைரக்டர் திரு புண்டரீகாக்ஷனின் மகள் லாவண்யா 23–12–72 காலை ஹௌரா மெயிலில் சென்னை வந்திறங்குகிறார்கள். அவர்களுக்காக ஹோட்டல் ஜாய் லண்ட்ஸில் அறை ரிஸர்வ் செய்யப்பட்டிருக்கிறது.

உங்களுக்கு அசௌகரியம் இல்லையென்றால், முதன் முதலாகச் சென்னைக்கு வரும் தம் குமாரத்தி லாவண்யாவை ரயில் நிலையத்தில் சந்தித்து அவருக்கு உதவக்கூடுமானால் மானேஜிங் டைரக்டர் நன்றியுள்ளவராக இருப்பார்.

முதல் வகுப்புப் பெட்டி 80872ல் ஆறும் எண்ணுள்ள லோயர் பர்த் குமாரி லாவண்யாவுக்காகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இப்படிக்கு,
தேவதாஸ்
மானேஜிங் டைரக்டருக்காக''

கடிதத்தைப் படித்து முடித்த மோகன் தன் மேஜையின் மேலிருந்த காலண்டரைப் பார்த்தான். அன்று தேதி இருபத்திரண்டு. நாளைக்கு வரப்போகிறாள் லாவண்யா.

புண்டரீகாக்ஷன் டைரக்டராகவோ—இல்லை மானேஜிங் டைரக்டராகவோ இல்லாத பெரிய கம்பெனிகள் மிகவும் சொற்பம். அப்படிப்பட்ட நிறுவனங்களின் சென்னைக் கிளை ஒன்றில் பொறுப்பான பதவி வகித்தான் மோகன். அவரை மோகன் ஓரிரு முறை சந்தித்திருக்கிறான். ஆசாமி கொஞ்சம் பிகு உள்ளவர்தான். அவர் சிரித்துப் பேசி அவனுக்குக் கவனமில்லை. எப்போதும் கடுகடுப்பான பார்வை. அவர் மகள் வருகிறாள். அவள் எப்படி இருப்பாள்? புலிக்குப் பிறந்தது பூனையாகுமா?

பிரைவேட் கம்பெனி உத்தியோகம் என்றால் இப்படித்தான். வேலையில் ஒழுங்காக இருக்கிறோமோ இல்லையோ, மேலதிகாரிகளைத் திருப்திப்படுத்தத் தெரிந்திருக்க வேண்டும்.

மோகன் உடனே ஹோட்டல் ஜாய்லண்ட்ஸுக்குப் போன் செய்தான். லாவண்யாவின் பெயருக்கு அறை பதிவு செய்யப்பட்டிருப்பதை உறுதிப்படுத்திக் கொண்டான். தானே நேரில் ஹோட்டலுக்குச் சென்று அவளுக்காக ஒதுக்கப்பட்டிருந்த அறையைத் திறக்கச் சொல்லிப் பார்த்தான். அவர்கள் காட்டிய அறை அவனுக்குப் பூரண திருப்தியை அளிக்கவில்லை. நல்ல காற்றோட்டமுள்ள வேறு ஓர் அழகான அறையை ஒதுக்க ஏற்பாடு செய்தான். அங்கிருந்த விரிப்புக்களை மாற்றச் செய்தான். இன்னும் யோசித்து என்ன என்ன மாற்றங்கள் தேவை எனப்பட்டனவோ, அவை அத்தனையையும் செய்தான்.

ரயில் வருவதற்கு ஒரு மணி நேரம் முன்பாக சென்ட்ரல் ஸ்டேஷனில் அவன் காத்திருந்தான். இரண்டு மூன்று அதிகாரிகளிடம் விசாரித்து வழக்கமாக முதல் வகுப்புப் பெட்டி எங்கு நிற்கும் என்பதைத் தெரிந்து கொண்டு முன்னெச்சரிக்கையுடன் அங்கு நின்றான். தன் சேவகன் ஒருவனிடம் நல்ல காப்பியை வாங்கி வரச் சொல்லி, பிளாஸ்குடன் அங்கே தயாராக நிறுத்தி வைத்தான்.

வண்டி வந்து நின்றது. லுங்கியும் நீல நிறச் சட்டையும் அணிந்த ஒரு யுவதி கடைசியாக இறங்கி வந்தாள். கறுப்புக் கண்ணாடி விழிகளை மறைத்தது. 'பாப்' செய்ததுபோல் தலைமுடியை மடித்துக் கட்டியிருந்தாள். நல்ல சிவப்பு நிறம். உயரமும் கூட.

முதலாளியின்



மகள்

அன்னம்

மோகன் மரியாதையுடன், ''தாங்கள் மிஸ்டர் புண்டரீகாக்ஷனின்...'' என்று இழுத்தான்.

''எஸ்!'' என்றாள் அந்தப் பெண்.

அவ்வளவுதான். மோகன் உடலே ஆடியது. உள்ளே போய்ச் சாமான்களை எடுக்கச் சொல்லித் தன் ஆட்களை விரட்டினான்.

''ஒரே ஒரு பெட்டி, ஒரு ஹோல்டால்... இரண்டு மட்டும்!'' என்றாள் அவள்.

''காப்பி...'' என்று இழுத்தான் மோகன்.

''நோ தாங்க்யூ!'' என்றாள் அவள் அதை மறுத்தபடி. குரலில் அப்பாவின் அதே அழுத்தம்.

''நாம் போகலாமா?'' என்று கேட்டான் மோகன் சாமான்கள் இறக்கப்பட்டவுடன்.

''ஓ!'' என்றாள் அவள். அவளை முன்னே நடக்கவிட்டு மோகனும் மற்றவர்களும் நடந்தார்கள்.

அவள் காரில் ஏறி உட்கார்ந்தாள். காரின் முன் இருக்கையில் மோகன் ஏறி அமரப் போனான்.



''நீங்கள் சிரமப்பட வேண்டாம். உங்கள் அவசர அலுவல்களைக் கவனிக்கலாம். போக வேண்டிய இடத்தை டிரைவரிடம் சொன்னால் போதும்!'' என்றாள் அவள்.

மோகன் வற்புறுத்தவில்லை.

''தங்களை நான் மீண்டும் எப்போது சந்திக்க வேண்டும்?'' என்று பவ்யத்துடன் கேட்டான் மோகன்.

''தங்கள் உதவி வேண்டுமானால் நானே உங்களுக்குப் போன் செய்கிறேன்!'' என்றாள்.

கார் கிளம்பிப் போயிற்று. மோகன் தன் நெற்றியில் துளிர்த்திருந்த வியர்வையைத் துடைத்து விட்டுக் கொண்டான்.

ஆனால் ஒவ்வொரு நாள் காலையிலும் அவன் ஹோட்டலைக் கூப்பிட்டு, ''ஏதாவது வேண்டுமா?'' என்று கேட்டான். ''நோ தாங்க்யூ'' என்று மட்டும் பதில் வந்தது.

* * *

உள்ளே யாரும் வரக் கூடாது என்பதற்கு அடையாளமாக அறையின் முகப்பில் சிவப்பு விளக்கு எரிந்து கொண்டிருந்தது.

மேஜையின் மேல் விஸ்கிப் பாட்டில், சோடா மற்றும் பிஸ்கெட்டுகள் இருந்தன. ஒரு கோப்பையை மெல்லக் கலைத்தபடி தன் காரியதரிசி படிக்கும் அந்தக் கடிதத்தைக் கேட்டான் ரமேஷ். அவன் நகரத்தில் உள்ள பெரிய மருந்துக் கடையின் மானேஜர்.

''டியர் மிஸ்டர் ரமேஷ்,

மானேஜிங் டைரக்டர் திரு புண்டரீகாக்ஷனின் மகள் குமாரி லாவண்யா சென்னை ஹோட்டல் ஸாய்லண்ட்ஸில் தங்கியிருக்கிறாள். அறை எண் 112. இருபத்தெட்டு தேதி வரையில் அங்கு இருப்பார்கள்.

உங்களால் முடியுமானால் அவரைச் சந்தித்து அவர்களுக்குத் தேவையானவற்றைக் கவனிக்கவும். மானேஜிங் டைரக்டரின் அனுமதியுடன் இது வரையப்படுகிறது.''

தேவதாஸ் என்பவர் கையெழுத்திட்டிருந்தார்.

ஷீலா ரமேஷை ஏறிட்டுப் பார்த்தாள்.

''அந்த ஓல்டுமேனுக்கு ஒரு பெண் இருக்கிறாளா? நான் நினைக்கவே யில்லை'' என்றபடி மேஜையின் ஓரத்தில் தன் விரலால் தாளம் போட்டான் ரமேஷ்.

''ஹோட்டல் ஸாய்லண்ட்ஸுக்கு ஒரு கால் போட்டு அந்தப் பெண்ணைக் கூப்பிடு!'' என்று அவன் ஷீலாவிடம் குழறினான்.

ஷீலா அவன் காரியதரிசி மட்டும் அல்ல. அவன் அந்தரங்கம் அத்தனையும் தெரிந்தவள்.

''மிஸ் லாவண்யா! மிஸ்டர் ரமேஷ் உங்களுடன் பேச விரும்புகிறார்!'' என்று கூறி ரமேஷிடம் போனைக் கொடுத்தாள்.

''ஹாய் லாவண்யா... ஹௌ ஆர் யூ?'' என்று கேட்டான் ரமேஷ் முன்பே அறிமுகமானவன் போல்.

''ஹாய் ரமேஷ்! இன்றைக்குத் தான் உங்களுக்கு நேரம் கிடைத்ததா?'' என்று சிணுங்கினாள் அவள் கொஞ்சமும் தயங்காமல்.

''ஸாரி, டியர்! இன்றைக்குத்தான் 'பாஸ்' லெட்டர் கிடைத்தது. உன்னை எங்கே சந்திக்கலாம்?''

''உடனே வாருங்கள். நான் காத்திருக்கிறேன்.''

''நிச்சயமாக. இன்னும் அரை மணி நேரத்தில் நான் உன்னுடன் இருப்பேன்! அதோடு இன்றைக்கு மாலை உனக்கு இங்கே ஒரு வரவேற்பு! என்ன? வேண்டாமா? நீ முதன் முதலாக வந்திருக்கிறாய்......அதெல்லாம் தெரியாது. சரி சரி... நான் நேரே வந்து உன்னைக் கட்டி இழுத்து வருகிறேன். அப்போ நீ என்ன செய்வாய்?''

ரமேஷ் போனை வைத்து விட்டான்.

''அவளை உங்களுக்கு முன்னமேயே தெரியுமா?'' என்று கேட்டாள் ஷீலா. அவன் கவலை அவளுக்கு.

''யார் கண்டார்கள்? ஒல்லியோ, பருமனோ... கிழவியோ குமரியோ, கறுப்போ, வெளுப்போ... சும்மா தெரிந்தாற்போல் ஒரு 'பாவலா'...மரியாதை பார்த்துக் கொண்டிருந்தால் குதிகாலின் கீழே வைத்துத் தேய்த்து விடுவார்கள்.... ஹாய் ஷீல்! ஏக வறட்சி...கிளாஸை நிரப்பு... நீயும் கொஞ்சம் பக்கத்தில் வா!'' என்று அவளைத் தன் அருகில் இழுத்தான்.

அவள் சிணுங்கிக் கொண்டே நகர்ந்தாள்.

அன்று மாலை லாவண்யாவுக்குப் பெரிய 'விருந்து'. அது முடிந்தவுடன் அவளை அழைத்துக்கொண்டு ஒரு நடன நிகழ்ச்சிக்குப் புறப்பட்டான் ரமேஷ். போகும் வழியில் ஒரு நகைக் கடையில் புகுந்து தன் ஞாபகார்த்தமாக ஒரு ''புரூச்'' வாங்கிக் கொடுத்தான்.

மறுநாள், அதற்கும் மறுநாள் அவன் அவளை ஒரு கணம்கூட வாளாவிருக்கவிடவில்லை. சமூகத்தின் மேல் மட்டத்தில் இருந்தவர்களிடம் அவளை அறிமுகம் செய்து வைத்தான். டிஸ்கொதே என்ன, காபரே டான்ஸ் என்ன — சென்னையில் உள்ள உல்லாசப் பகுதி அத்தனையையும் அவன் அவளுக்கு அறிமுகப்படுத்தி வைத்தான்.

அவன் போன இடமெல்லாம் 'தண்ணீர்' விளையாடியது. உற்சாகம் வரம்பு மீறி விருந்தது. லாவண்யா ஒவ்வொன்றிலும் பங்கு கொண்டாள். மதுக் கிண்ணங்களை மட்டும் அவள் தீண்டவில்லை. இருபத்தேழாம் தேதி மாலை தான் மறுநாள் காலை பெங்களூர் போவதாகக் கூறி அவனிடம் விடைபெற்றுக் கொண்டாள் லாவண்யா.

''எக்ஸ்க்யூஸ் மீ! லாவண்... நீ காலை ஆறு மணிக்குப் புறப்படப் போவதாகச் சொல்கிறாய். எட்டு மணிக்கு முன் எழுந்து எனக்குப் பழக்கம் இல்லை'' என்று ஒதுங்கிக்கொண்டான் ரமேஷ்.

* * *

சரியாக ஒன்பது மணிக்கெல்லாம் தன் அலுவலகத்துக்குள் நுழைந்தான் ரகு. பிரபல ஆட்டோ ஸ்பேர் பார்ட்ஸ் கம்பெனியின் விற்பனைப் பகுதி மானேஜர் அவன்.

தன் பிரத்தியேக அறையில் வந்து உட்கார்ந்தவன் முதலில் அலுவலகக் கடிதங்களைப் பிரித்துத் தன் அந்தரங்கக் காரியதரிசியிடம் அவற்றுக்கான பதில்களை 'டிக்டேட்' செய்தான். பின்னர் தன் பெயரிடப்பட்டு வந்த கடிதங்களில் முதலில் மானேஜிங் டைரக்டருடைய கடிதத்தைப் பிரித்தான்.

''டியர் மிஸ்டர் ரகு,

மிஸ் லாவண்யா (மானேஜிங் டைரக்டர் புண்டரீகாக்ஷனின் மகள்) சென்னையில் இப்போது இருக்கிறார்கள். ஹோட்டல் ஜாய்லண்ட்ஸில் நூற்றிப் பன்னிரண்டாவது அறையில் தங்கியிருக்கிறார்கள்.

உங்களுக்கு ஓய்வு கிடைத்தால் அவர்களைச் சந்தித்துப் பேசவும். தேவை ஏதேனும் இருந்தால் கவனிக்கவும். தங்களுக்குச் சிரமம் தருவதற்கு மானேஜிங்டைரக்டர் வருந்துகிறார்.''

தன் காரியதரிசியை அழைத்தான் ரகு. அவள் வந்து ஓரமாக நின்றாள். ஒரு நாற்காலியில் அவளை உட்காரச் சொன்னான்.

மானேஜிங் டைரக்டருக்கு ஒரு கடிதம் 'டைப்' அடிக்கச் சொல்லி அதன் வாசகங்களை 'டிக்டேட்' செய்தான். அவர் கடிதம் கிடைத்ததாகவும் அவர் விருப்பப்படி செய்வதாகவும் கூறித் தனக்கு அவர் கடிதம் எழுதச் செய்ததற்கு நன்றியையும் குறிப்பிட்டிருந்தான்.

உதவி மானேஜரைக் கூப்பிட்டு ஆபீஸைப் பார்த்துக் கொள்ளச் சொல்லிவிட்டுத் தன் காரை எடுத்துக் கொண்டு ஹோட்டலுக்குப் போனான். லாவண்யாவின் அறைக் கதவை மெள்ளத் தட்டினான். அவள் எழுந்து வந்து கதவைத் திறந்தாள்

''நா ஆம் ரகு... மிஸ்டர் புண்டரீகாக்ஷன் எழுதியிருந்தார். நான் உள்ளே வரலாமா?''

''ஷ்யூர்!'' என்றாள் லாவண்யா.

உள்ளே நுழைந்தான். முதலில் லாவண்யாவை உட்காரச் சொல்லிப் பின்னர் தானும் ஒரு நாற்காலியில் உட்கார்ந்தான்.

''நீங்கள் என்று வந்தீர்கள்?... எல்லாம் சௌகரியமாக இருக்கும் என்று நம்புகிறேன்''

''ஒரு வாரம் ஆகிறது. குறை ஏதும் இல்லை'' என்றாள் லாவண்யா.

தன் உடை சற்றும் கலையாமல், தன் கௌரவத்தைச் சற்றும் விட்டுக் கொடுக்காமல்—அதே சமயத்தில் பணிவுடன் அவன் பேசியதை அவள் ரசித்தாள்.

''குறிப்பிடக் கூடிய காரணம் எதற்காகவாவது நீங்கள் இந்த 'டிரிப்'பை மேற்கொண்டிருந்தால்...'' என ஆரம்பித்தான் ரகு.

''ஒன்றுமில்லை. சும்மா பொழுதுபோக்குக்காகத்தான். பிறந்து வளர்ந்ததெல்லாம் கல்கத்தாவில்...''

''அப்படியா? இன்றைக்கு மியூஸிக் அகாடமியில் நல்ல இசை நிகழ்ச்சி இருக்கிறது. உங்களுக்குச் சம்மதம் என்றால் ஏற்பாடு செய்கிறேன். இல்லை... நீங்களே வேறு ஏதாவது நினைத்திருந்தால்...''

'காபரே' நடனம் நடக்கும் ஒரு ஹோட்டலின் பெயரைச் சொன்னாள் லாவண்யா.

ரகுவின் முகம் மாறியது. ''உங்கள் விருப்பம் அதுவானால் நான் அதற்கும் ஏற்பாடு செய்கிறேன். ஆனால் சென்னையைப் புரிந்து கொள்ள அது ஏற்ற இடம் இல்லை என்பது என் அபிப்பிராயம்....''

லாவண்யாவின் குரல் 'சட்'டென்று உயர்ந்தது. ''மிஸ்டர் ரகு! என் விடுமுறையை என் விருப்பப்படி கழிக்க நான் இங்கு வந்திருக்கிறேன். அது உங்கள் கவனத்தில் இருக்கட்டும்'' என்றாள்.

''நிச்சயமாக. நான் மறுக்கவில்லை. ஆனால் என் மனசில் பட்டதைச் சொல்லாமல் என்னையே நான் வஞ்சித்துக்கொள்ள முடியாது. அப்படிச் செய்தால் தங்கள் தந்தை எனக்கு அளித்த பொறுப்புக்கு நான் அருகதை இல்லாதவன் ஆகிறேன்.''

லாவண்யா எழுந்தாள். தன் கைகளைக் கோபத்துடன் உதறினாள். ''ஆல்ரைட்... இன்றைக்கு அகாடமிக்கே போகலாம்!'' என்றாள்.

அன்று மாலை அவளை அழைத்துப் போக ரகு வந்திருந்தான். அவள் ஜீன்ஸ் தரித்துக் கொண்டு அவனுக்காகக் காத்திருந்தாள். அந்த உடையில் அவள் அழகு ரகுவை மயக்கியது. தன்னை அவள் நிதானப்படுத்திக் கொண்டாள்.

''நாம் ஒரு கர்நாடக சங்கீதக் கச்சேரிக்குப் போகிறோம். அதற்கேற்ற உடையில் நீங்கள் வந்தால் நலம்'' என்றான் ரகு.

''என் தாயார்கூட என் உடை விஷயத்தில் தலையிட்டதில்லை. நீங்கள் அளவுக்கு மீறிப் போகிறீர்கள்'' என்று சீறினாள் லாவண்யா.

''மன்னிக்க வேண்டும். நான் ஒரு புகழ் பெற்ற கம்பெனியில் பொறுப்பான பதவியில்

ரத்னகிரீசுவரர் ஆலயத் திருப்பணி

அடையாற்றுக்குத் தெற்கே நாள்தோறும் வளர்ந்து வரும் பெஸண்ட் நகரில் ஒரு பகுதியாக உள்ளது காச் (Goch) காலனி. இங்கு ஸ்ரீ சிருங்கேரி ஆசாரியர்கள், ரத்னகிரீசுவரர் ஆலயத்துக்குப் பூமி பூஜை செய்தார்கள். பிறகு ஸ்ரீ காஞ்சி காமகோடி ஆசாரியர்கள் அநுக்கிரகத்துடன் கோயிலில் பிரதிஷ்டை செய்ய வேண்டிய மகாலிங்கம் கிடைத்தது. தற்போது கூரை வேய்ந்த கொட்டகையில் கோயிலும், அதைப் பராமரிக்கும் பக்தமண்டலியும் அமைந்துள்ளன. நல்ல கட்டிடமாகவே எழுப்பித் திருப்பணி செய்ய விரும்புகிறார்கள். சுமார் மூன்று கிரவுண்ட் நிலமும் வாங்கப்பட்டுள்ளது.

இந்தப் பெரிய பணி நிறைவு பெற ஆஸ்திக அன்பர்களின் உதவியும் ஒத்துழைப்பும் கோரப்படுகின்றன. பொருள் அனுப்ப வேண்டிய முகவரி: பக்தமண்டலி, ஸ்ரீ ரத்னகிரீசுவரர் கோவில், பெஸண்ட் நகர், சென்னை-90.

உள்ளவன். அந்தக் கம்பெனியின் முதலாளி ஒருவரின் மகள் தாங்கள். நமக்குக் கௌரவக் குறைவு வரும்படி — நான்கு பேர் நம்மைப் பற்றி ஏளனமாகப் பேசும்படி — ஏன், நினைக்கும்படிகூட — நாம் இடம் தரவேண்டாம் என்றுதான் சொல்கிறேன்'' என்றான் ரகு.

''ஏன், இப்படி நான் வந்தால் கர்நாடக சங்கீதம் 'பாப் மியூஸிக்' மாதிரிக் காதில் கேட்குமா?'' என்று கேட்டாள் அவள் கிண்டலாக.

''தெய்வ சந்நிதிக்கு நீச்சல் உடையில் வரலாம் என்றால் நீங்கள் சொல்வது சரிதான்'' என்றான் ரகு விட்டுத் தராமல்.

அவள் தன் தலையைப் பிடித்துக் கொண்டாள். ''ஓகே!... நான் உடை மாற்றிக் கொண்டு வருகிறேன்!''

ரகு தானே வெளியில் வந்து நின்றான்.

''போகலாமா?'' என்ற குரல் கேட்டு அவன் திரும்பினான். அவன் கண்கள் விரிந்தன.

கருநீலப் பட்டுப் புடவையும், அதற்கேற்ற ஜாக்கெட்டும் அவள் அணிந்திருந்தாள். நீண்டு தொங்கிய பின்னலும் நெற்றிக் குங்குமமும் அவள் அழகைக் கூட்டிக் காட்டின.

'' இப்போது.... இப்போது.... நீங்கள் தேவதையைப் போல் இருக்கிறீர்கள்!'' என்றான் ரகு தன்னை மறந்து.

''ரியலி?... தாங்க்யூ!'' என்றாள் அவள்.

கார் போய்க் கொண்டிருந்தது. ''நீச்சல் எனக்கு ரொம்பப் பிடிக்கும். நாளைக்குக் காலை எட்டு மணிக்கு வாருங்கள். 'ஸ்விம்மிங் பூல்' போய் வரலாம்!'' என்றாள் அவள். ரகு வாயைத் திறக்கவில்லை.

கச்சேரி முடிந்து நல்லதொரு ஹோட்டலில் சாப்பிட்டார்கள். இரவு பத்து மணிக்கு அவளை ஹோட்டலில் கொண்டுவந்து விட்டுத் திரும்பினான் ரகு.

''நாளை எட்டு மணி — ஸ்விம்மிங் பூல்! மறக்காதீர்கள்!'' என்று ஞாபகப்படுத்தினாள் லாவண்யா.

காலை எட்டு மணி. அவள் கதவு தட்டப்பட்டது. குதித்து எழுந்து கதவைத் திறந்தாள் லாவண்யா. புறப்பட அவள் எப்போதோ தயார்.

அங்கே ரகு இல்லை. அவன் காரியதரிசி மாலா நின்று கொண்டிருந்தாள். ''மிஸ்டர் ரகு அனுப்பினார். ஸ்விம்மிங் பூல் போக வேண்டும் என்றீர்களாம். காருடன் வந்திருக்கிறேன்'' என்றாள் அவள்.

ஒரு கணம் தயங்கிய லாவண்யா பின்னர் மாலாவுடன் புறப்பட்டாள்.

அன்று மாலையும் மறுநாள் மாலையும் ரகு வந்தான். அவள் 'பிரிட்ஜ்'' ஆட விரும்பிய போது அவளைக் காந்தி மியூஸியம் பார்க்க அழைத்துப் போனான் ரகு. எலியட் கடற்கரையில் சுற்ற நினைத்தவளுக்கு மகாபலிபுரம் கடற்கரையின் அழகைக் காட்டினான்.

முப்பத்தி ஒன்றாம் தேதி ரகு அவளை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் கல்கத்தாவுக்கு ஏற்றி அனுப்பிவிட்டு அங்கிருந்தபடியே கல்கத்தாவுக்குப் போனில் அவள் புறப்பட்ட விஷயத்தை அறிவித்தான்.

கல்கத்தா.

தம் பெண் பேசியதை யெல்லாம் புண்டரீகாக்ஷனும் அவர் மனைவியும் பொறுமையாகக் கேட்டார்கள்.

''...மிஸ்டர் மோகன் நல்ல அழகு. கம்பீரமான தோற்றம். நன்றியுணர்வும் பண்பும் மிகுந்த ஒரு நிர்வாகி... தம் மேலதிகாரியின் விருப்பம் போல் எதையும் குறைவறச் செய்வார். ஒரு தப்பும் அவரிடம் காண முடியாது.

''ரமேஷ் இருக்கிறாரே...அப்பா...அப்படி ஒரு கலகலப்பான ஆளை நான் பார்த்ததில்லை. அவர் அப்பால் போனால் ஒரே சூன்யம்தான். எல்லாவற்றிலும் உயர்ந்ததைத்தான் அவர் விரும்புவார். எதற்கும் கவலைப்பட மாட்டார், யாருடனும் எளிதில் பழகுவார். நினைத்தால் முடிக்காமல் விடமாட்டார். ஆனால் இந்த ரகு... அப்பப்பா!''

''அவனுக்கு என்னம்மா?'' என்று கேட்டார் தந்தை. லாவண்யா தன் தோள்களைக் குலுக்கினாள்.

''அப்பப்பா... மிலிடெரி டிஸிப்ளின் கெட்டது போங்கள்! நல்லதை நினைப்பார், அதையே செய்வார். தம் அபிப்பிராயத்தை மற்றவர் மேல் திணிப்பார், கண்டிப்புவார்... அநாவசியமான ஒரு பேச்சு, ஒரு பார்வை கிடையாது.பார்ப்பதற்குசாதாரணம்தான்!''

''நீ என்னதான் முடிவு செய்தாய்?'' என்று கேட்டாள் தாயார்.

''நான் என்ன சொல்ல இருக்கிறது?... சுயம்வரத்துக்கு என்னைச் சென்னைக்கு விரட்டினீர்கள். மோகன் உங்கள் மாப்பிள்ளையானால் பாதி சாப்பிடும்போது நீங்கள் வந்தால்கூடக் கையை உதறிவிட்டுச் சலாம் வைப்பார். மிஸ்டர் ரமேஷ்... உங்கள் பக்கத்தில் தோள் மேல் கை போட்டு உட்கார்ந்து உங்களையே உங்களுக்குத் தெரியாமல் விற்றுவிடுவார்.. மிஸ்டர்... அவர்தான் அப்பா... நக்கீரர் ப ர ம் ப ரை ..... '' என்று வெட்கினாள் லாவண்யா.

''புரிகிறது! புரிகிறது!'' என்று எழுந்தார் புண்டரீகாக்ஷன்.



பெரிய தலைவருக்கு உரிய வரவேற்பு!

கார்ட்டூனிஸ்ட் கட்டையான புருவம் போட்டதுமே பிரஷ்நேவ் முக்காலே மூன்று வீசம் தோன்றி விடுவார்! அதோடு அகன்ற நெற்றி, தூக்கி வாரிய கேசம் அழுத்தமான இரட்டை முகவாய் சேர்ந்து கொள்ளும்.

அமெரிக்கப் பத்திரிகை நிருபர்கள் மாஸ்கோவில் அவரைச் சந்தித்த போது, சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுக் காரியதரிசி பிரஷ்நேவ் தமது காரியாலயத்தைச் சுட்டிக் காட்டிக் கூறினர்: 'என் வாழ்வில் பெரும் பகுதி இங்கே அவஸ்தைப்படுவதிலேயேதான் கழிகிறது.' உடனே திருத்திக் கொள்ளவும் செய்தார்: 'பிரெஷ்நேவ் அவஸ்தைப்படுவதாக எழுதிவிடாதீர்கள். உழைப்பதாக எழுதுங்கள்!'

உழைப்பு எந்த ருஷ்யக் குடிமகனுக்கும் உள்ளதுபோல் பிரஷ்நேவுக்கும் உயிர் மூச்சாகத் திகழ்கிறது. இருப்பினும் தமக்குள்ள பலவீனங்கள் இரண்டினையும் அவர் தயங்காமல் ஒப்புக் கொள்கிறார். சிகரெட்டுகள், மோட்டார் கார்கள் ஆகியவைதாம் அவை. இவற்றின் மீது அடக்க முடியாத ஆசை.

ரொம்பப் பெரிய மனிதர்தாம், பதவியில் மட்டுமின்றி உருவத்திலும் கூட. மனமும் விசாலமானது. பொது இடமானாலும் மனைவியின் கரத்தை அன்புடன் பற்றத் தயங்க மாட்டார். பேரக் குழந்தையைத் தாம் கவனித்துக் கொள்வதாய்க் கூறி அதன் பெற்றோர் வெளியே போய் வர வசதி செய்வார்.

சாதாரணக் குடும்பத்தில் பிறந்தவர்தாம் அறுபத்தேழு ஆண்டுகளுக்கு முன்னர். தந்தை எஃகு ஆலை ஊழியர். தனயனும் அங்கு உழைத்தபடியே சிரமப்பட்டுப் படித்து உலோக என்ஜினீயராகவே ஆகிவிட்டார். பிறகு நில நிர்வாகம் பற்றியும் அறிந்த ஸர்வேயராகவும் விளங்கினர்.

இரண்டாவது உலக யுத்தத்தில் பிரஷ்நேவ் ஈடுபட்டு யுத்தம் முடிந்தபோது மேஜர் ஜெனரலாக விளங்கும் அளவுக்குப் பல சாகஸங்களைப் புரிந்தார்.

குருஷேவின் பார்வையில் பட்டதுதான் இவரது அதிர்ஷ்டம், வாழ்வில் திருப்புமுனை. குருஷேவின் வாழ்க்கை முன்னேற்றத்துடன் பிரஷ்நேவும் படிப்படியாக உயர்ந்த நிலைக்குச் சென்றுகொண்டிருந்தார். குருஷேவ் ஸ்டாலின் செய்த அக்கிரமங்களை அம்பலப்படுத்தியும் அவரைச் சேர்ந்தவர்களைப் பதவி இழக்கச் செய்தும் வந்தார். அப்போது புதிதாகப் பலர் பெரிய பதவிகளுக்கு வந்தார்கள். பிரஷ்நேவும் இவர்களில் ஒருவராக உன்னத நிலைகளுக்குச் சென்று கொண்டிருந்தார். கடைசியில் குருஷேவும் பதவி துறக்க வேண்டிய தருணம் வந்தது. அந்தச் செய்தியை முதன் முதலில் குருஷேவுக்குத் தெரியப்படுத்தியது பிரஷ்நேவ்தான் என்று கருதப்படுகிறது!

கால்பந்தாட்டமும் வேட்டையாடுதலும் பிரஷ்நேவுக்குப் பிடிக்கும். ஆனால் இப்போது அதற்கெல்லாம் நேரமுமில்லை; ஒரு ஹார்ட் அட்டாக் கண்டதாக நம்பப்படுகிற தேகமும் இடம் தராது. ஆனால் கார்கள் சேகரிப்பதை அவர் இன்னும் விடவில்லை. பிரான்ஸ், ஜெர்மனி, அமெரிக்கா ஆகிய நாட்டு அதிபர்கள் இவருக்கு விலையுயர்ந்த கார்களைப் பரிசுகளாக வழங்கியுள்ளனர்.





படங்கள்:

1. 1961-ம் ஆண்டில் புது தில்லி விஜயத்தின் போது நேருஜியுடன் சர்வதேசக் கண்காட்சியில் பிரஷ்நேவ்.
2. ருஷ்ய விவசாய ஆராய்ச்சிப் பண்ணை ஒன்றில் சோவியத் தலைவர்.
3. சிகரெட் பிரியர்.
4. 1972-ல் மாஸ்கோவுக்கு விஜயம் செய்த நிக்ஸனுடன் பிரஷ்நேவ்.



நிக்ஸன் கடிலாக் பரிசைச் சுட்டியதும் பிரஷ்நேவ் 'இப்போதே ஒரு ரவுண்டு சுற்றி விட்டு வரலாமே?' என்று நிக்ஸனையும் அழைத்தார். பிரஷ்நேவ் கார் ஓட்ட, அருகில் நிக்ஸன் அமர்ந்திருந்தார். ''கவலைப்படாதீர்கள். நான் மிக நன்றாகக் கார் ஓட்டுவேன்!'' என்றார் பிரஷ்நேவ். ''நான் கார் ஓட்டுவதை நிறுத்தி வருஷக்கணக்காயிற்று'' என்றார் நிக்ஸன். கார் சிறிது நேரம் அப்பகுதி சாலைகளில் சுற்றி விட்டுத் திரும்பியது. 'நல்லவேளை! அச்சமயம் போக்குவரத்து அதிகமாயில்லை. இல்லாத போனால் உச்ச கட்ட மகாநாடு வேறு விதமாய் முடிந்திருக்கும்!' என்று நிக்ஸன் பின்னால் பிரஷ்நேவின் சாரத்தியத்தைத் தமது பாதுகாப்பாளர்களிடம் சிரித்துக்கொண்டே விமர்சித்தார்! பிரஷ்நேவுக்கு அமெரிக்கப் போக்குவரத்து விதிகள் புதிதல்லவா?

நாலைந்து கார்களை வைத்திருந்தாலும் அடக்கமாகவே வாழ்கிறார் பிரஷ்நேவ். ஒரு கோபுரக் குடியிருப்பில் ஐந்தே அறைகள் கொண்ட பகுதிதான் இவர் வீடு.

ருஷ்ய நாட்டின் சர்வ வல்லமை பொருந்திய தலைவரான பிரஷ்நேவ் இன்றைக்கும் ஏகமாக உழைக்கிறார். காரியாலய நேரம் போக மற்றச் சமயங்களிலும் அலுவல்கள் கணக்கின்றிக் குறுக்கிடுவதால் சில தருணங்களில் அவர் தூக்க மாத்திரையின் உதவியை நாட நேரிடுகிறது.

நட்புறவு வளரப் பல மேற்கத்திய ஜனநாயக நாடுகளுக்கும் விஜயம் செய்து உலக அமைதிக்கும் விஞ்ஞான ரீதியான ஒத்துழைப்புக்கும் வழிவகுத்துள்ளார் பிரஷ்நேவ். எனவே இவருக்கு இவ்வாண்டு ஏப்ரலில் சர்வதேச லெனின் சமாதானப் பரிசு வழங்கப்பட்டது சாலப் பொருத்தமே.

பிரஷ்நேவ் இரண்டாவது தடவையாக இந்தியா வருகிறார். இந்தியா — பாகிஸ்தான் யுத்தத்தின்போது இந்திய — ருஷ்ய உடன்படிக்கை நமக்குப் பக்கபலமாக இருந்ததையும் இவ்வாண்டு உணவுப் பற்றாக்குறையைச் சமாளிக்க ருஷ்யா ஏராளமான கோதுமை அனுப்பி உதவியதையும் இந்திய மக்கள் நன்றியோடு நினைவுகூர்வார்கள். பிரஷ்நேவுக்கு ஒரு பெருந் தலைவருக்குரிய வரவேற்பை அளிப்பார்கள்.


ஒப்பற்ற விம் பளபளப்பு
உங்களுக்கு இப்போது
55 பைசா பேக்கெட்டிலே
நீங்கள் அறிந்த விம். பிசுக்கோ, கீறலோ, கசடோ எதனையுமே அணுவளவும் படிய விடாத அதே நுரைவளம், அதே அபார சக்தி. வந்துவிட்டது இன்று கையகலப் பேக்கெட்டிலே. துலக்கிப் பாருங்கள் எவர்சில்வர் பாத்திரங்களை— ஒரே ஒரு பேக்கெட் விம், நூற்றுக்கு மேற்பட்ட பாத்திரங்களைப் பளிச்சிட வைக்கும் ஒப்பற்ற ஒளிமயமாக— இத்தனைக்கும் 55 பைசாதான்.
Vim
with super foaming action
Cleans shining bright
மாசில்லாத பளபளப்பை
விசிட வைப்பது விம்
தேர்ந்தெடுத்த ஒரு சில நகரங்களில் மட்டுமே கிட்டும்.
இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு.
லின்டாஸ்- V. 408-149 TM


Hosiery made of pure
GRASIM
STAPLE FIBRE
has a better appearance, fuller feel, equal stretch, excellent durability, and high dimensional stability
If you are in the manufacturing line, Grasim Staple Fibre could lead you to bigger Sales, bigger Profits. A slight modification in your knitting methods such as increasing the courses per inch will help you to manufacture firm and compact knitted garments from 100% Staple Fibre.
GR
THE GWALIOR RAYON SILK MFG. (WVG.) CO. LTD.
Birlagram, Nagda (M.P.)

உங்கள் குடும்பத்தின் ஆரோக்கியத்திற்கு வைடமின்களும், தாதுப் பொருள்களும் இன்றியமையாதவை.

அவை போதுமான அளவில் கிடைக்கின்றனவா?



வைடமின்கள் மற்றும் தாதுப் பொருள்களின் பற்றுக்குறை உங்கள் குடும்பத்தின் ஆரோக்கியத்தைப் பாதிக்கக்கூடும். சோர்வு, ஜலதோஷம், பசியின்மை, உடல் இளைத்துப்போதல், சரும உபாதைகள், மற்றும் பல் உபாதைகள். இவற்றிற்கு மூலகாரணம் சாதாரணமாக, இன்றியமையாத வைடமின்கள் மற்றும் தாதுப் பொருள்களின் பற்றுக்குறைதான். இருப்பினும், வைடமின்களும், தாதுப் பொருள்களும் பெரும்பாலும் அலட்சியம் செய்யப்படுகின்றன. மிகவும் கவனமாகத் திட்டமிடப்பட்ட உணவில் கூட இவற்றின் பற்றுக்குறை காணப்படுகிறது. வளமான உணவு எல்லாம் சரிவிகித உணவாக இருப்பதில்லை; விதவிதமான உணவுகளிலும், வைடமின்கள் மற்றும் தாதுப் பொருள்களின் பற்றுக்குறை இருக்கக் கூடும். அப்படியானால், அத்தியாவசியமான வைடமின்களும், தாதுப் பொருள்களும் – அதுவும் சரியான விகிதங்களில் – உங்கள் குடும்பத்திற்குக் கிடைக்கின்றன என்று நிச்சயமாக எப்படிச் சொல்ல முடியும்?

உங்கள் குடும்பத்தில் ஒவ்வொருவருக்கும், தேவையான அளவுகளில் இந்த இன்றியமையாத போஷாக்குச் சத்துக்கள் கிடைப்பதை உறுதிப் படுத்திக் கொள்ள, அவர்களுக்கு விம்க்ரான் – ஸ்க்விப் பல்வேறு வைட்டமின். தாதுச் சத்து மாத்திரைகள் – கொடுங்கள், தினம் ஒரு மாத்திரை வீதம். இந்த ஆரோக்கியமான வழக்கத்தை இன்றே ஏன் ஆரம்பிக்கக்கூடாது?

விம்க்ரானில் 11 முக்கியமான வைடமின்களும், 8 தாதுப் பொருள்களும் சரியான அளவுகளில் அடங்கியிருக்கின்றன. இரத்தச் சிவப்பு உயிரணுக்களை வளர்க்கவும், சக்தியை மீண்டும் பெற உதவும் இரும்புச் சத்து – எலும்புகளையும் பற்களையும் உறுதியாக வைத்திருக்க கால்ஷியம் – ஜலதோஷத்தை எதிர்க்கும் சக்தியை அதிகரிக்க வைடமின் ஸி – சிறந்த கண் பார்வைக்கும், ஆரோக்கியமான சருமத்திற்கும் வைடமின் ஏ – பசியைத் தூண்டி, தாங்கும் சக்தியை அதிகரிக்கும் வைடமின் பி – 12 – இவற்றுடன், உங்கள் குடும்பத்தின் ஆரோக்கியத்திற்குத் தேவையான, இதர போஷாக்குச் சத்துக்களும் அடங்கியிருக்கின்றன.

விம்க்ரான்®

பல்வேறு வைட்டமின்-தாதுச் சத்து மாத்திரைகள்

11 வைட்டமின்களும் 8 தாதுப் பொருள்களும் அடங்கியது.

ஒரே ஒரு விம்க்ரான் மாத்திரை உங்களை நாள் முழுதும் சக்தியுடன் வைத்திருக்கப் போதுமானது.

Squibb SARABHAI CHEMICALS

Shilpi HPMA 25A/71 Tam

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600031
Managing Editor: T. Sadasivam

ஒரே ஒரு காசு செலவில் 1 சேலை அல்லது 3 சட்டைகள் பனிபோல் வெண்மை பெற...

மாக்ஸிம்*

எல்லா துணிகளுக்கும் உகந்த ஏற்றமிகு ஒயிட்னர்

எவ்வளவோ சிக்கனமானது!

எந்த ஆடையாக இருந்தாலும் சரி, அதற்குப் புத்தம் புதிய வெண்மை ஒளியேற்ற சராசரி ஒரு துளி மாக்ஸிம் போதும். ஒவ்வொரு மாக்ஸிம் பாட்டிலும் சுமார் 1200 துளிகள் கொண்டது என்பது உங்களுக்குத் தெரியுமோ என்னவோ! எனவேதான் மாக்ஸிம் மிகவும் சிக்கனமான, வீரியமுள்ள நீலநிற, திரவ வடிவ ஒயிட்னராக விளங்குகிறது. மேலும் விசேஷ ட்ராப்பர் மூடிகொண்ட பிளாஸ்டிக் பாட்டிலாக இருப்பதால், இன்னும் லாபம், ஏனெனில் தேவைக்கு மேல் ஒரு துளி கூட சிந்தாது. எனவே துளியும் வீணாவதில்லை, துணியும் நீலம் படிவதில்லை.

- 'டெரீன்' ✓
- 'டெரீன்'/காட்டன் ✓
- நைலான் ✓
- உல்லன் ✓
- சில்க் ✓
- காட்டன் ✓

எல்லா துணிகளுக்கும் ஏற்றது

எல்லாவித துணிகளுக்கும் நீங்கள் மாக்ஸிம் உபயோகிக்கலாம். 'டெரீன்' 'டெரீன்'/காட்டன், நைலான், உல்லன் சில்க் மற்றும் காட்டன் போன்ற எல்லா துணிகளுக்கும் மாக்ஸிம் வெண்மையூட்டி புதிய மெருகேற்றுகிறது. தவிர, மாக்ஸிம் துணியில் கறை ஏற்படுத்துவதுமில்லை.

உபயோக முறை மிகமிக எளிது

மாக்ஸிம் உபயோக முறை மிகமிக் எளிதானது. துணிகளை முதலில் சோப் அல்லது பிற சலவைச் சாதனங்கள் மூலம் சுத்தமாக துவைத்து நன்கு அலசி எடுக்கவும். பிறகு வாளியிலுள்ள (5 லிட்டர்) நல்ல தண்ணீரில் 10-15 துளிகள் மாக்ஸிம் விட்டுக் கலக்கவும். (பழுப்பேறிய துணிகளென்றால் கொஞ்சம் கூடுதல் துளிகள் மாக்ஸிம் சேர்க்கவும்) பின்பு துணிகளை 10—15 நிமிடங்களுக்கு அதில் ஊறவைக்கவும். மீண்டும் அலச வேண்டாம். அப்படியே உலரவிடவும்.





ஒவ்வொரு காசுக்கும் உரிய பலனைத் தருகிறது மாக்ஸிம்

GMM-23 TAM

*Regd. T.M. Geoffrey Manners & Co., Ltd.

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka
இலங்கையில் விலை 45 சதம் (தபால் செலவு தனி)

